உ

சிவமயம்.

இராமசேது மான்மிய மென்னுஞ்

சேதுமகுத்துவம்.

இஃது,

இராமேச்சுவரம்

ஆறுமுக உபாத்தியாயரவர்களால்

சுருக்கமாகச்செய்து,

மதுரை புதுமண்டபம் புஸ்தகஷாப்

நாகலிங்கம்பிள்ளை அவர்களால்

சென்னை - சூளை:

பி.-வே-நமசிவாயமுதலியாரது

நிரஞ்சனவிலாச அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

1909.

அவதானம் பாப்பையர் வீதி, நெ. ௪௫, சூளை சென்னை.

உ

கடவுள் துணை.

இராமேச்சுரமான்மியமென்னும்

சேதுமகத்துவம்.

இஃது

இராமேச்சுரஞ் சேதுமாதவர்கோவிலில்

சேதுபுராண பிரசங்கம்

ஆறுமுகஉபாத்தியாயரவர்களுடைய

ஏட்டுப்பிரதியின்படி

தக்கவித்துவான்களால்

பிழையறப்பரிசோதித்து,

மதுரை புதுமண்டபம் புஸ்தகஷாப்

நாகலிங்கப்பிள்ளை அவர்களால்

பிருங்கிமாநகரம்

வேம்புலிமுதலியார் குமாரர்

நமசிவாயமுதலியாரவர்களது

சென்னை-சூளை:

நிரஞ்சனவிலாச அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

1908.

உ

கடவுள்துணை.

இராமேச்சுர மான்மியமென்னும்

சேதுமகுத்துவம்.

விநாயகர் தோத்திரம்.

திங்களங்குழவியென்னத் திகழொருமருப்பிற்சோதி
தங்குகிம்புரிவயங்கத் தடாமணிமகுடந்தாங்கித்
துங்கநல்வரங்கணல்குந் தூயசீரிராமசேதுப்
புங்கவர்வணங்கும்யானை முகத்தனைப்போற்றல்செய்வாம்.

இராமநாதசுவாமி.

பூமலிஇதளிசூடும் புதுநிலாமகிடவேணி
நாமலிசுருதிபோற்றும் நம்பிரானிராமநாதன்
ேமலிசிலையிராமர்க் கிராவணன்பிற்மகத்தி
தீமலிஇடுக்கந்தீர்த்த சேவடிசென்னிவைப்பாம்

பூந்தவிசினிருந்தபிரான்முதலோர்காணப்
புண்டரிகமகள்கொழுநன்புகழிலங்கை
வேந்தனுயிர்ப்பழிகழுவுமுகத்தால்யார்க்கும்
விடையவனேயுடையவனும்வேதவாய்மை
யாந்தரங்கம்வெளிசெய்வானனவரோடு
மணந்துகந்தமாதனத்திலருச்சித்தேத்து
மேந்துபுனற்சடிலமுடியிராமநாத
னிணையடிச்செந்தாமரைகளிறைஞ்சிவாழ்வாம்.

ஸ்ரீ பர்வதவர்த்தனியம்மன்.

தண்ணெனவும்வெச்செனவுந்தங்குசாயாத்
தகைபயின்றுவிடநீக்கித்தலைவற்கென்று
முண்ணமுதந்தனையுதவியிமையமேரு
'வுயர்சிகரமந்தரத்தையொருவிச்சேர்ந்துங்

கண்ணுதலைவிளர்ப்புறலாற்கயிலையெள்ளிக்
கௌணியர்க்குத்தமிழ்சுரக்குங்காட்சியாலே
வண்ணமுலைமலயமலைமானுங்கன்னி
மலைவளர்காதலிமலர்த்தாண்மனத்துள்வைப்பாம்.

நடேசர்.

பூமாதுபொலிவெய்தமுகுந்தன்காக்கும்
புவிமாதுவளம்பெருகப்புலமைசான்ற
நாமாதுநலந்தழைப்பவிருள்கால்சீக்கு
நகைநிலவுதவழ்மவுலிநன்னீர்க்கங்கை
மாமாதுபுனறுளிப்பமறைகள்வாழ்த்த
வளர்தில்லையம்பலத்துள்வாமநீங்காத்
தேமாதுவிழிகுளிர்ப்பவமரர்போற்றத்
திருநடஞ்செய்நூபுரத்தாள்சென்னிசேர்ப்பாம்.

கணபதி.

வேணிமுடிப்பகிரதிநீர்புழைக்கைவாங்கி
விடுத்தயன்வெண்டலையுருட்டிமிளிர்வெண்கோட்டாற்
கோணிளையமதிக்குழவியுழுதுமேருக்
கொடுமுடியிற்கிளைத்தவெண்டோள்குழையத்தூக்கித்
தாணெடியவிடைமுனிந்துகயிலைமுக்கட்
டாதையொடும்விளையாடித்தன்பாலன்பர்
மாணிலவுமனத்தறிநின்றுலாவுந்தெய்வ
வாரணத்தைநினைந்திறைஞ்சிவழுத்தல்செய்வாம்.

சிவசுப்பிரமணியக்கடவுள்.

குலவுமலைமகள்கலசமுலைப்பால்வாசக்
குழூஉதமவள்கொழுநர்மறைகொழிக்குஞ்செவ்வி
நிலவுமுகமலர்கமழச்செய்துமுன்னே
னெடுந்துளைக்கைபிடித்தேறிநெற்றிப்பட்டத்
துலவியிவரொருமூவருவப்பமாலோ
டும்பர்கணங்களிதூங்கவுலகமூடுங்

கலபமரகதமயிலூர்கழற்கால்வென்றிக்
கந்தனைவந்தனைசெய்தகருத்துள்வைப்பாம்.

கலைமகள்.

கவளமதகரியுரிவைப்போர்வைமூடுங்
கண்ணுதலோன்புகழ்விரிக்குங்கலைகள்யாவும்
பவளவிதழ்ப்பசுங்குதலைமொழியிற்காட்டும்
பைந்தொடியையந்தணன்றேய்பருமவல்குற்
றுவளுமணிமருங்குலிளநிலவெண்மூரற்
சுந்தரியைவெண்கமலத்தோட்டுவட்டத்
தவளமதிநடுவமர்வாலெகினம்போலுந்
தையலைமையலையகற்றித்தாளிற்றாழ்வாம்.

நந்திதேவர்.

போதனுறைமலர்முகிழாதமரர்கோமான்
புரநிலைமைகுலையாதுமருதுபோழ்ந்த
பாதனுறைகடல்சுருங்காதரிணஞ்சூரல்
படைமழுவண்சுரிகைகரம்பரித்துப்பாந்தட்
காதனுறைசிதறுபுனற்கங்கைசூடுங்
கண்ணுதலெம்பரன்மதியுங்கதியுநல்கு
நாதனுறைதிருக்கயிலைகாவல்பூண்ட
நந்தியைநம்புந்தியின்கணயந்துவாழ்வாம்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்.

சங்கமணிக்குழைதயங்கத்தழைத்தகாதுந்
தனிவிடையுமுதலபலதணப்பில்காட்சி
பொங்குமடையாளங்கள்புகன்றுபோற்றிப்
பொருவிறந்தபரஞ்சுடரைப்புந்திக்கெட்டா
லங்கணனைவழுதியுடல்வெப்புநீங்க
வணிதிகழ்வெண்டிருநுண்டூளள்ளிச்சாத்துஞ்
செங்கைவிரல்கொடுகுறித்துத்தெரிக்குந்தோன்றல்
சிற்றடியின்பெருந்தகைமைசிந்தைசெய்வாம்.

திருநாவுக்கரசுநாயனார்.

தேவரையுமுனிவரையுந்துளவமார்பிற்
திருவரையுங்குரவரையுஞ்செல்வமிக்கோர்
யாவரையுமேவல்கொளுநெற்றிநாட்டத்
திறைவரைமுன்னிகந்திருந்தவெண்ணந்தோன்றச்
சேவரையுநெடுங்கொடியின்தகைமையெல்லாத்
திசைவரையுஞ்செலத்தமிழின்செய்யுள்பாடு
நாவரையர்புகழ்மொழிகள்வரைந்துகூறி
நயந்தவர்செய்திருத்தொண்டுவியந்துவாழ்வாம்.

சுந்தரமூர்த்திநாயனார்.

தாதுகொண்டமலர்ச்சுரியற்பரவையென்பா
டனத்துணைமேன்மயற்குளிரின்றளர்வுதிர
வேதுகொண்டுவிழையுநெறிவிரும்பிமாலும்
விரிஞ்சனுமுன்றேடாதவெளியையாரும்
யாதுகொண்டுமறிவரிதாயெங்குமான
விரும்பொருளைநெருங்குமிருணிரவின்மீளத்
தூதுகொண்டார்தமையெமையாட்கொள்வீரென்று
சொல்லியவர்பதம்புல்லித்தொழுதல்செய்வாம்.

மாணிக்கவாசகசுவாமிகள்.

செழியர்குலபதிகொடுத்தமாநிகொண்டு
சென்றுதிருப்பெருந்துறையிற்செரிந்தசம்புப்
பழிவிரவுபரித்திரள்கொண்டணைந்துமாறன்
பணித்தவிடர்க்கிரங்கியருள்பாடிப்போற்றி
வழியமுதகிரணநிலாமகுடமீதே
மதுரையமர்பரம்பரனைவந்திக்காகச்
சுழிபெருகுபுனற்றரங்கவைகைவாய்மண்
சுமப்பித்தார்பதந்தலைமேற்சுமத்தல்செய்வாம்.

சண்டேசுர நாயனுர்.

மனுதிகளுக்கெட்டாதபரமானந்த
வாழ்வினையைங்கோரிலிங்கமணலார்கூப்பித்
தனுதியந்தனினின்றுந்தாபித்தான்பா
றழைத்தவன்பாலாட்டவந்துதடுக்கத்தாதை
யேனுதவன்றனிருபதமுமழுவாற்றுண்டித்
திகழ்ந்தவனைப்பரபதத்துளிருத்தித்தானும்
பினுகியருளடைந்தவிறற்சண்டேசன்ருள்
பிரசமலரிறைத்திறைஞ்சிப்பேசுவாமே.

மெய்கண்டதேவனுயனுர்.

அல்லாதபரசமயவலகைத்தேர்விண்
டகலவகல்புனற்பெண்ணையயல்சூழ்வெண்ணெய்ப்
பொல்லாதவிபமுகத்துப்புத்தேடன்பாற்
புனிதசிவாகமப்பொருண்மைபொருந்தவாய்ந்து
நில்லாதநிலையிதுமற்றென்றுமொன்ருய்
நிற்குநிலையிதுவெனமெய்ந்நெறிதேர்ந்தியாரும்
வெல்லாதசிவஞானபோதஞ்சொன்ன
மெய்க்கண்டான்சரணமுடிமீதுகொள்வாம்.

திருத்தொண்டர்.

முன்னடையவரியசிவமுத்திபெற்ருேர்
மூதுலகிலதுவிரும்பிமுயலாநின்ருேர்
பின்னடையவருமவர்கண்முதலாயுள்ள
பிள்ளையிளவெள்ளைமதிபிறங்குவேணி
பின்னடையுமணிமௌலிவேதகீதன்
வெண்ணீறுங்கண்டிகையுமெய்விடாமற்
றன்னடைநன்னெறிதம்மையடைந்துளார்க்குந்
திருத்தொண்டர்பெருந்தொண்டுதலைமேற்கொள்வாம்.

கடவுள் துணை.

சூதபுராணிகர் சௌனகாதிரிஷிகளுக்கு

புராணம் சொல்லியது.

நைமிசாரணிய வசனச்சிறப்பு.

நைமிசாரண்ணிய மென்கப்பட்ட வனத்திலே பிர்மதேவனுடைய பிரப்புகள்கோடியுகங்கள் கண்டவர்களாய்தேவாஅமுர்தங்களைப்பொசித்தவர்களாய்க் காமக்குரோத லோபமோகமதமார்ச்சரியங்கள் யெவ்வளவுமில்லாதவர்களாய் பிர்மசாரிவானப்பிரசித்தன் சன்னியாசியான பெரியோர்கள் சடைமுடிகளுடனேயுஞ்சிரமுண்டிதங்களாகவும்,மரவுரிகிர்ஸ்ணசனம்புலித்தோலாசனந்தெர்ப்பாசனங்களையுடையவர்களாய்பிர்மா, விஷ்ணு, ருத்திரன்,மயேசுவரன்சதாசிவன், பராசத்திமுதலானதேவதைகளை உபாசனைசெய்தபெரியோர்கள் சதாகாலம் நாலுவேதமாறுசாஸ்திரம் பதினென்புராண ஆகமங்களை ஒருவர்க்கொருவர் வினவிக்கொண்டு அநேகவனமாய்ப்பேசிக்கொண்டுமிருப்பார்கள் அப்படியவர்கள் பேசிக்கொண்டுயிருக்கிற வேதசாஸ்திர புராணங்களை கேட்டுக்கொண்டு அந்தவனத்தில் சஞ்சாரம் பண்ணிக்கொண்டு இருக்கிற கிளிகள் நாணவந்தான் முதலான பட்சிகள் தங்கள்தங்கள் சுயபாஷைகளை சுத்தமாய்மரந்துவிட்டு வேதசாஸ்திரங்களைப்பேசிக்கொண்டு அந்தபாஷைகளினாலே தங்களுடைய குஞ்சுகளுக்கும் வருத்திவிக்கும்படியாக்கொத்த பெரியோர்களும்பட்சிசாதிகளும் பேசப்பட்டசாஸ்திரங்களையும்வேதங்களையு அதனுடையஇங்கிதங்களையும்மந்தவனத்திலேசஞ்சாரம்பண்ணிக்கொண்டிருக்கிற கரடி,புலி,சிங்கமுதலானமிருகசாதிகள்கேட்டு ஒன்றுக்கொன்று பகைகள் இல்லாமல் ஒருகூட்டமாகவும், கூட்டுவுரவாய் கீறியும், பாம்பும்,நாயும்,பூனையும்,சிங்கமும்,யானையும், புலியும்,பசுவும் ஒருதுறையிலேதண்ணீர்குடித்துவளர்ந்து கொண்டிருக்கும் வனமெல்லாம்பாரிஜாதம், மந்தாரம், புன்னை, வில்வம், சந்தனம், ஆச்சா, தேக்கு,தேவதாரம்,திரு

வாத்தி, மகிழம், மா, பலா முதலான விருக்ஷங்களும் மல்லிகை முல்லை, இருவாட்சி, செண்பகம், சுகந்தம், துளசி, பாதிரிமுதலான புஷ்பஜாதிகள் நெருங்கிய பூங்காவும், அடிக்கடி தடாகங்களும் மலைகளுங் குகைகளும் நெருங்கியிருக்குஞ் சந்திரசூரியர் செம்மையாய்ப் பிரகாசிக்கக்கூடாத நெருங்கின சோலைகளாய்த் தெய்வீகமாய், ரமணிகரமாய்ப் பார்க்கப் பதினாயிரங்கண் வேண்டியதாய் ஜெகஜோதிசிரமாய்ச் சச்சிதானந்த சொரூபமாய்த் திவ்பவாசனைகளோடு கூடினதாய் யெந்தலோகங்களும் யெந்தவனங்களும் நிகரில்லாததாய் சகலமான ரிஷிகள், தபோதனர்கள் யெங்கே நிறைந்திருந்தாலும்வந்துகூடுகிற இடமாய் யெப்போதும் பெரியோர்கள் அவரவர்கள் சிஷர்களுடன் பத்தினிகளுடன்கூடி நெருங்கியிருந்து மூலாதாரஞ் சுவாதிஷ்டானம் மணிபூரகம் அனாகதம் விசுத்திஆக்கினையென்றுசொல்லப்பட்டசடாதாரங்களையுஞ்சோதினைபண்ணி இடைகலை பிங்கலை சுழிமுனை மூன்றையும்ஒன்றாய்க்கூட்டிபிர்மரந்திர பரியந்தம் மேலேயெழுப்பி துவாதசாந்தத்திலே யிருக்கிற அகண்டாகார சின்மயானந்த சொரூபமாய் சாக்ஷாத்காரத்தைக் கண்டுகளிப்புற்று ஆனந்தரசங்களையுண்டு தெகட்டியாதொன்றுந் தெரியாமற் சொக்கிப்போயிருக்கிற யோகீஸ்பராளும் மக்கினி கோத்திரமெக்கியங்கள் யாகாதிகள் ஒன்றாலொன்று குறைவுபடாமல் நிறைவேத்திக்கொண்டிருக்கிற வானப்பிரஸ்தாளும் ரிஷியீஸ்வரராளுந்தலைகீழாய்ப் பஞ்சாக்கினி மத்தியிலேயும்ஒத்தைக்காலுடனே ஊசிமுனையிலேயும் நிலத்திலே ஒருகையை ஊன்றிக்கொண்டும்இரண்டுகையை ஊன்றிக்கொண்டும் ஒத்தைவிரலைஊன்றிக்கொண்டுந் தவசு பண்ணப்பட்ட தவசிகளுங் கனக்குவழக்கு அளவுசங்கையில்லாமல் பெரியோர்களாய் நெருங்கிகொண்டிருக்கும் படிக்கொத்த தபோபலங்களாலே பிரம்மப் பிரளையந் தள்ளி காலாந்திரங்களையுங் கடந்துயிருக்கிற பெரியோர்கள் நெருங்கின நைமிசாரண்ய வனத்தைப் போகவதிபட்டணத்துக்கு அதிகாரியான யெமன் ஓர் தூதனையாவது அனுப்பிவைக்க நினைக்கமாட்டான் கண்டிருக்கவுமாட்டான் யெல்லாரிஷிகளும் கற்பகோடிகாலங் கண்டவர்களாய் யிருப்பார்க ளப்படிக்கொத்த நைமிசாரண்யத்திலே சௌனகாதிமுனிகள் முதலான பெரியோர்கள் முத்திமோக்ஷத்திலேவிருப்பமுள்ளவர்களாய்யிருபத்தாராயிரம்பேர்கள் ஒருகூட்டிரவா யிருப்பார்கள் அவர்களுடைய மாணாக்கர் சிஷர்கள் அளவிரந்த கோடிபேர்கள் இருப்பார்கள் அப்படிக்கொத்தவர்கள்

ஈஸ்வரனுடைய பாதாரவிந்தங்களை மானதபூசைகளினாலே அர்ச்சனைபண்ணி வணங்கி குற்றமில்லாத புண்ணியகதைகளை யொருவர்க்கொருவர் பேசிக்கொண்டிருக்கிற வேளையிலே வேதவியாசருடைய மாணாக்கராகிய சூதமாமுனிவர் அந்தவனத்தை நோக்கி எழுந்தருளிவந்தார் அப்படிக்கொத்த சூதமாமுனிவர்வருகிறதை சௌனகாதிமுதலான இருபத்தாராயிரம் பேர்களானபெரியோர்களுங்கண்டுதிடீரென்று யெழுந்திருந்து யெதிர்கொண்டழைத்து தெர்ப்பாசனத்தி லெழுந்தருளப் பண்ணி அர்க்யபாத்தியங்களளித்து சோடச உபசார பூசனைகளும்பண்ணி வணங்கி நமஸ்காரம் செய்துஅனேகதோத்திரங்கள் செய்துசகலமானதீர்த்தங்களையுஞ் சகலமான தவங்களையுஞ் சகலமானக்ஷேத்திரங்களையும் அடைந்தவர்களாய்ச்சந்தோஷங்களை யடைந்து ஆனந்தக்கூத்தாடிமகிழ்ந்து சுவாமி சூதமகாரிஷியே வேதவியாசருடைய அனுகிரகத்தினாலே சகலமான கதைபுராணங்களைக் கேட்டறிந்து சகலமுந்தெரிந்திருக்கிற மகாமுனியான சுவாமியை யின்றையத்தினம் நாங்கள் கண்டு வணங்க யென்னபூசாபலம் புண்ணியவிசேஷஞ் செய்திருந்தோமோ தெரியாது நாங்கள்செய்த தபோபலமே சுவாமியைக் கொண்டுவந்துவிட்டது. அடியேங்களுக்கு மனசுகுளிரும் படியாய் பிர்மா, விஷ்ணு, ருத்திரன், மகேசுபரர் சதாசிவமான ஈசுபரபாதங்களை யடையும்படியான மோக்ஷங்கிடைக்கும்படியாகவுந் தீர்த்த மகிமை மூர்த்திமகிமை ஸ்தலமகிமை இந்தமூன்றும் வொன்றாய்ப் பொருந்தினதாயுஞ் சகலலோகங்களுக் கண்ணியமாயிருப்பதாயும் அரிதானதாகவும் மேலான புண்ணியலோகங்களை கொடுக்க வல்லமை யுண்டானதாயுஞ் சகலபுண்ணிய நதிகளுக்கும் சகலதேவதைகளுக்கும் மேலானதாயும் இந்தபஞ்சாசத்கோடி பூமண்டலத்திலே யெந்ததீர்த்தம் வெந்தஸ்தலம் மேலானதோ அதையெங்களுக்குத் தெரியும்படி சொல்லவேணுமென்று சௌனகாதிமுனிகள் முதலான பெரியோர்கள் கேழ்க்க சூதமாமுனியுங் கேட்டு மகாசந்தோஷத்தையடைந்து பெரியோர்களே நீங்கள் கேட்ட கேழ்வி நன்றாய்க்கேட்டிருக்கிறீர்கள் அப்படிக்கொத்த புண்ணியதீர்த்தமாகிய ஸ்தலங்களுமிருக்கிறது அதைமுன்னமே சொன்னேன் அப்படிச்சொன்ன புண்ணியகதைகளிலே வெளிவிடக் கூடாதென்று மறைத்திருந்ததை இப்போது நீங்கள் அபேட்சையாய்க் கேட்டபடியினாலேசொல்லுகிறோம் நீங்களெல்லோரும் வொன்றாய் யொருமனதாயிருந்து இதுவரையிலே கேட்டிருக்கிற புண்ணியகதைகளைப்போலே யிதையும் யென்னிவிடாமல் பயபக்தி விசுவாசத்து

டன் அந்தக்கரணசுத்தியாய் வேரேகியாபகமில்லாமல் கேட்டிருப்பீர்களானல் வேரேபுண்ணியம், வேரேதபசு, வேரேயாகம், வேரேமந்திரம், வேரே ஜெபங்களும் யாதொன்றும்வேண்டியதில்லை. இதுஅப்படிக்கொத்தபுண்ணியகதையாக்கும் இதனுடையமகிமையை இரண்டாயிரம் நாவைப்படைத்த ஆதிசேஷனுலுஞ் சொல்லமுடியாது நாமுங்கள் பேரிலிருக்கிற வாஞ்சையினலே சொல்லுகிறேம் கேளுங்க ளென்று சூதமகாமுனி நைமிசாரணியத்திலே சௌனகாதி முனியீஸ்பரர்களுக்கு சேதுமகுத்துவத்தையு மதின் சார்பிலே யுண்டாயிருக்கிற தீர்த்த மகிமைகளையுங் கெந்தமாதன பர்வத மகுத்துவத்தையும் ஸ்ரீராமநாதசுவாமியுடைய கிர்பானந்தங்களையுஞ் சவிஸ்தாரமாகச் சொல்லுகிறேமென்று சொல்லத் தொடங்கினர்.

நைமிசாரணியச்சருக்கம்—முற்றிற்று.

உ

சிவமயம்.

சேதுபலமகுத்துவம்.

சேதுஸ்தானம் பண்ணினபேர்கள் அடையும்
பலனைச்சொல்லுகிறது.

சேதுபலச்சருக்கம் ருக—ம் செய்யுள்.

இனைய சேதுநீ ராடினுந் தீண்டினு மிதுதனை யெஞ்ஞான்று
நினையு செய்கினுங் காண்கினுங் கேட்பினு நீங்கிடுந் துயரெல்லா
மனைவு மத்தனு மாயிடு மாயவ னருள்செயு மச்சேதுத்
தனைநி கர்ப்பதொன் றிலையாந்தவநெறிதழைக்குமந்தணர்காளோ.

மகாமேருவுக்குத்தெக்ஷண பாரிசத்தில் பரதகண்டத்தில் கண்ணியா குமரித்தீவில் கெந்தமாதனகிரி மலைச்சாரலில் லவணசமுத்திரக் கரையில் அயோத்தியாபுரி பட்டணத்து ராஜாவாகிய சக்ரவர்த்திதசரத மகாராஜாவுடையகுமாரனுகிய ஸ்ரீராமசந்

திரமூர்த்தியால் வுண்டாக்கப்பட்ட சேதுவாகிய ராமேஸ்வரத்தில் மகிமை பொருந்திய தீர்த்தங்களனேகமுண்டு அதிலும் மேன்மையானதாய் மோனவானந்த முத்திகளையும் கொடுக்கப்பட்டதாய் மருத்துவமுடைய சேதுவென்று சொல்லப்பட்ட தீர்த்தமொன்று அந்ததீர்த்தத்தை ஜெனனமெடுத்தவன் கண்ணாலேகண்டானானல் ஒருகர்ப்பகோடி காலங்கைலாசத்திலே அவனுடைய தாயார் தகப்பன் புத்திரமித்திர களத்திராதிகளுடன் கோடி தலமுறைவரையில் சொந்தமான பேர்களுடன் ஆனந்தபோகங்களை அடைந்திருந்து மோக்ஷத்தையு மடைவான் ஆகாசத்திலேயிருக்கிற நக்ஷத்திரங்களை ஒன்றாக வெண்ணினாலும் மிந்தக்ஷேத்திரத்தைக் கண்ணாலே கண்டபேர்களுடைய பலன்களை ஆதிசேடனாலேயுஞ்சொல்ல முடியாது அனேகமான யாகாதிகிர்த்தியங்கள் யெக்கியங்கள் வேழ்விகள் யாத்திரைகள் பண்ணிபலன்களைஉடனேகொடுக்கும் ஆராவது ஒருவன்பிறராயிருக்கப்பட்ட ஒருவனை சேதுவுக்குப்போய் ஸ்தானம் பண்ணிவாருமென்றுசொன்னாலும் அவன் வாயினாலே சொன்னவுடனே அதுவரையில் செய்த அந்த பாவங்களெல்லா மவனைவிட்டு நீங்கிக்கிருதார்த்த நாவாணிப்படிக்கொத்த ஒருவனந்தச் சேதுவிலே ஸ்நானம் பண்ணினால் அவனுடையகுலம் யேழுகோடிதலமுறையில் செய்தபாபங்களெல்லாம் நீங்கி சாயுச்சியபதத்தை யடையும்படியா யிருப்பான் அப்படிக்கிஸ்தானம் பண்ணினவனந்தச் சேதுக்கரையிலே யிருக்கிற கந்தமாதனபருவதத்தையும் அதில் வாசம்பண்ணுகிற ஸ்ரீராமநாதனையும் அந்தச் சேதுதனுக்கோடியையும் யெவன் மனசுலெண்ணி நினைக்கிறானோ அப்பவேஅவன்செய்தபாவமெல்லாம் அதமாய்த்துலைந்து விடுகிறது பின்னுமவனுடைய தாயாதி வழியில் கோடிலக்ஷந்தலைமுறையில் சொந்த தமரோடே மூன்றுகல்ப்பகாலஞ் சிவபதமடைவார்கள் பஞ்சமாபாதகங்கள் செய்தவர்களா யிருந்தாலும் இந்தச்சேதுவில் விசேஷதினங்களில்தீர்த்தமாடினால் மூன்றுபிர்மபட்டம் வரையிலும் வைகுண்டலோகத்தை அடைந்திருந்து சகல சாம்பிராச்சியத்தையனுபவிப்பார்கள்ஒருநாளும்எப்படிக்கொத்த பாவிகளும்யெமலோகத்திலே யிருக்கமாட்டான் தன்தன்சதையைச்சாப்பிடமாட்டான், நாயினுடைய மாமிசங்களைப் பொசியான், மூத்திரங்களையும் நாயின் முத்திரங்களையுங் குடியான், யிருப்பு அம்மி ஆட்டுக்கல் செக்குகளிலே அரையுண்டுஉரைந்துவிழுகான், புழுவைச்சாப்பிடான், நெருங்கினஇருப்பு முள்ளுகளிலேகேசா

திபாதபரியந்தஞ்சுருக்குச் சுருக்கென்றுகுத்தாமலிருப்பான் மலஜலவாதிகளையெடுத்துப்பூசிக்கொள்ளான்,கல்மலை அக்கினிமலையிலே அவஸ்தைப்படான், அக்கினிகுழியிலே குதியான், ரெத்தகுளத்திலேவிழுந்து நீஞ்சான், அக்கினியிலேபாய்ந்து கரையேரான், தலைகிழாய் வானவழியிலே தூக்கிடான், காமநீர்களைக் குடியான், மலங்களைக் கட்டியாகச்சாப்பிடான், மேலேயும் பூசிக்கொள்ளான், வாளாயுதங் கத்தி கருக்குவாளாலே துண்டுதுண்டாய் யெமகிங்கராலே கட்டுண்டு அருபடான், வாதநீர் பித்தநீர் சிலேட்டுமநீர்களைப்பொசியான், கோளை மூளைகளை விழுங்கான், மலைப்பாம்புகளாலேகடிபடான், காட்டானையுடைய காலுகளாலே மிதிபடான், அதினுடைய கொம்புகளாலே குத்துண்டுவாதைப்படான்,காஞ்சுகொண்டிருக்கிற யெண்ணைக் கொப்பறையிலே போடப்படான், யெண்ணைகளை வாங்கிக்குடியான், மலங்களைவாரிவாரிப் போட்டு குத்துண்டுகிடக்கான்,கண்ணிலுங்காதிலும் மூக்கிலும் இருப்புச்சிலாகைவைத்து நறுக்கென்று குத்துவாங்கான், பத்துக்குரடுகளைக்காயப்போட்டு ஒவ்வொரு யெலும்புகளாய்ப் பிடுங்குபடான்மரத்திலேரி மலமூத்திரக்கிணத்தில் விழுகான், சூலாயுதம் வேலாயுதம் பதினெட்டு ஆயுதங்களாலே வெட்டிப்பிளந்துசதைசதையாய்பேர்க்கான், இருப்புப்பாசங்களாலே கட்டுண்டு உருளான். புகைக்குகையிலே யிருந்து வெம்பிமடியான், அக்கினியிலேகாய்ந்த யிருப்புப் பலகையிலேபடுக்கான், ஆண்குறி பெண்குறியிலே தூண்டிகளைப்போட்டுதூக்கி அக்கினிக்கி நடுவேகட்டி தூக்கான், இருப்பு ஊசிகளினுலே ஏந்தயிடங்களிலும் குத்துண்டு வாதைப்படான், ஈயங்களைகாச்சி வாயிலும் அபாணத்திலும் விடமயங்கி விடமாட்டான், இப்படிக்கொத்த தீமைகளைச் செய்யப்பட்ட ரௌரவாதி நரகங்களாகிய இருபத்தெட்டுக்கோடி நரகத்திலும் அழுந்தான், இந்தச்சேதுவிலே ஸ்தானம்பண்ணினபுண்ணியதேகத்தையுடையவர்களிந்த தனுக்கோடியைநோக்கி தீர்த்தமாடப் போரேனென்று நூரடிபோய்வந்து விட்டாலும் அவர்களுமிப்படிக் கொத்த யெமதெண்டனைக்குள்ளாகாமல் சொர்க்காதிபோகங்களை அநுபவிப்பார்கள் ஸ்ரீராமமூர்த்தியாலே கட்டியிருக்கிறசேதுவின் பேரிலே காத்துவிழுந்துபறக்கிற மணல்கள் தூசிகளுடையதுகை யெவ்வளவோ அவ்வளவுபாபங்கள் அவ்வளவு ஸ்ரீஹத்தி பிர்மஹத்திகள் செய்திருக்கிற பாவிகளாயிருந்தாலும் உடனே அவர்களைவிட்டு விலகிப்போம் சேதுவிலே தீர்த்தமாடுகிறார்களோ அவர்க

ளுடைய சிரசிலே இருக்கிற கண் காது மூக்கு வாய் இதுகளின் வழியே சேதுதீர்த்தம் நுழைதுவந்தால் அப்படிக்கொத்த கண், காது, மூக்கு, வாய், சிரசுகள் தெய்வலோக போகங்களை கற்பகாலங்களிலும் அநுபவித்துக் கொண்டிருக்கும் தங்களுடைய புத்திர பவுத்திராதிகளுடன் தெய்வலோகத்திலே இரண்டாயிரம் மூவாயிரம் வருஷம் வாழ்ந்துகொண்டிருப்பார்கள் சேதுவில் விழுகிற காத்துயார்மேலே படுகிறதோ அவர்கல் சுராபாணம்பண்ணி யிருந்து அதினுலே நடந்தபாபங்களுங் காத்தோடே காத்தாயோடிப் போம் பின்னும் உடனே அந்த சேதுவில் ஒருமுகூர்த்தம் வாசம் பண்ணிக் கொண்டிருந்து தீர்த்தமாடினுல் நானுவிதமான பாபங்களும் விலகிப்போம் வழிமார்க்கத்திலே அடித்துப் பரித்தவன் பெரியோர்கள் பிராமனுள் சிவபூசைகளுக்குத் துரோகம் பண்ணினவன், ராஜர்களுக்குப் பொய்சொன்னவன். சாப்பிடுகிறதே வேலையாகயிருந்து சத்கர்ம ஜெபங்களைவிட்டு விட்டவன், வேதசாஸ்திரங்களை வித்தவன், பசுக்களை குதிரைகளை பத்தினிபிள்ளைகளை வித்தவன், தெய்வப்பிராமணுளுக்கு ஒருபதார்த்தந் தருகிறேமென்று அவருக்கு வாக்குதத்தம்பண்ணி அப்பாலில்லை யென்று சொன்னவன், அவர்களுக்கு கொடுத்ததை வாங்கி அபகரித்து திரஸ்காரஞ்செய்தவன், சிவபூசை விஷ்ணுபூசை சாதுக்கள் பெரியோர்கள் பூசையிலே கோபித்தவன் விகாதஞ் செய்தவன் பெரியோர் பிராமணுளை கொன்றவன், பசுமுதலான ஜீவன்களை இரைதண்ணீர் குடியாமல் விரட்டினவன், பசித்து வந்தவர்களுக்கு உண்டானதை பகுந்துசாப்பிடென்று சொல்லாதவன், யெல்லாருஞ் சேதுவில் திர்த்தமாடினபோதே புண்ணியபுருஷர்களென்று வேதசாஸ்திரங்களாலே சொல்லப்படுகிறது பின்னும் அக்கிணிகோத்திரவேள்விகளுக்கு விகாதம்பண்ணினவன்தேவர்சொத்துக்கள் ஸ்ரீசொத்துகள் வெறிப்பிடித்தவன் சொத்துகள்அகுதிகளுடைய சொத்துக்கள் தாசிகளுடைய சொத்துகள் இதுகளை அபகரித்துவித்துச் சாப்பிட்டவன் சிவனுக்கும் விஷ்ணுவுக்கும் அர்ப்புதமான கந்தமூல பதார்த்தஞ் சந்தனம், கஸ்தூரி, பால், பழம், நெய், தினை, சர்க்கரை தாம்பூலம், பொன், வெள்ளி, தங்கம் முதலானதுகள் பாத்திரம் பட்டு பட்டாவளிகள் இதுகளை அபகரித்துகொண்டவன் பெண்சாதி கூடப்பிறந்தவள்சினேகிதனுடைய பெண்சாதிமகன்பெண்சாதி மதுபாணஞ்சாப்பிட்டவள்தூரஸ்திரியீனசாதிகள் பிரத்தியானுடையஸ்திரி குருபத்தினிதமயன்பெண்

சாதிதன்பெண்சாதியைப்பெற்ற மாமியார் பிராமணஸ்திரிகளிவர்களை சேர்ந்து தோய்ந்தவன் பாவங்களெல்லாஞ் சேதுவில்ஸ்நானம் பண்ணின உடனே பஞ்சுபஞ்சுகளாகி விடுபட்டு ஓடிப்போய் விடும்மேலும் நாகலோகம்தெய்வலோகம் அக்கினிலோகம்பூலோக முதலான ராச்சியபாரங்களும் போகபோக்கியங்களும் வேண்டிய பேர்கள்பொன்பூமி ஆடையாபரணம் பூஷநாதிகள் தனகனவஸ்து வாகனங்களும் நிதிநிட்சேபங்களும்அஸ்டஐஸ்வரியங்களும்வேண்டிய பொருளுந்தவம் தானம் நேமம் நிஷ்டைபூசை முதலானதுகளும் சரிகைகிரிகையோக ஞான முதலானதும் வேண்டியபேர்கள் சேதுவில்ஸ்நானம் பண்ணினஉடனே புண்ணியதேகத்தை யடைவார்கள்.

பின்னும் ராமசேதுவில் ஸ்தானம் பண்ணுகிறதற்கு மனசுடையவர்கள் பொன், பூமி, அரிசி, காய்கறிபதார்த்தங்கள், கோதானம், கண்ணிகாதானம், வஸ்திரதானஞ்செய்து புராணசிரவனம் செய்துவேள்விமுடித்து சேதுஸ்நானஞ்செய்தால்அவர்களுடைய புண்ணியம் யாராலுஞ்சொல்லமுடியாது அவர்கள்புண்ணியசாலிகள் அதிலும்மனசுகளில்யாதொருதீங்குகள் நினையாமல்சேதுவில் ஸ்நானம் பண்ணினபுண்ணிய புருஷாளுடையபலன்களை நாம்ஒரு விதத்திலுஞ் சொல்லத்தக்கதில்லையென்று பூலோகவழக்கங்களையும் ராச்சியபாரம் பட்டாபிஷேகங்களையும் வேண்டிய யோகங்களும் தெய்வலோக வாழ்க்கைகளையும்இரம்பாஸ்திரீகளுடையபோகபோக்கியங்களையும் வேண்டியபேர்கள் வைகுண்டம் கைலாசம் முதலான யிடங்களில்சாலோகசாமீப சாருபசாயுச்சிய பதங்களை வேண்டியபேர்களுஞ் சேதுவில் ஸ்நானம்பண்ணினுல் அவர்கள் அபிஷ்டப்படியே இந்தச்சேது சித்தமாகக்கொடுக்கும் அவர்கள் செய்தீங்கான பாபங்களையும் போக்கும் அவர்கள் மனசுக்குமேலான இன்பங்களையுங்கொடுக்கும் சகலமானவிரதங்களையுஞ் சகலமான நோம்புகளிலுஞ் சகலமான தீர்த்தத்திலுஞ் சகலமான ஸ்தலதெரிசனங்களிலுஞ் சகலமான யோகங்களிலும் நூறுகோடிபங்கு அதிகம் யிந்தச்சேதுவிலே ஸ்நானம் பண்ணினபேர்கள் சிந்தமோயடைவார்கள் செல்வங்கள் ஆயுஸ்கள் வித்தைகள் வேதங்கள் மந்திரங்கள் அஷ்டமாசித்திகள் அணிமாதிசித்திகள் கைகூடிவர வேண்டியபேர்கள் சேதுஸ்நானத்தை முக்கியமாய் நிறைவேத்திக்கொண்டுவருவார்கள் அவரவர்கள் நம்பிமுழுகினுலும் மனமில்

லாதவர்களாய் முழுகினாலும் மேன்மையும் அவரவர் நினைத்தபடி சுகத்தையடைந்து மறுமையிலுமப்படியே யிருப்பார்கள் பூரணச் சந்திரனைப்போல தேகமும் குபேரனைப்போலே பாக்கியமும் தர்மங்களும் காமதேனு கற்பகவிருட்சங்களுஞ் சுறபிசிந்தாமணி பதுமபீடங்களும் உண்டாகும் பெரியோர்களிடத்தில் பொருள் வாங்கிப்போனாலும் அவர்கள்கொடுத்தாலும் அவர்களுக்குகிண்டக்கிறபலன் பேர்பாதியாககிடைக்கும் அப்படிச்சேதுஸ்தானத்துக்குப்போய்வரவேண்டிய பேர்கள் கையில் பொருளில்லாத போனால் நல்லபிராமணாள்பெரியோர்களிடத்தில்கேட்டுஅவர்கள்குடாதேபோனால் வைசியர்கள் கையில் வாங்கிபோகவேணும் அவர்கள் கொடாதேபோனால் சத்திரியரிடத்தில் கேட்டுவாங்கிக் கொண்டு போகவேணும் பசுப்பொன் பதார்த்தம் பட்டுவஸ்திரம் நவதானியம் அரிசிகாய்கரி பதார்த்த முனலானதுகள் தங்கள் தங்களாலே இயன்றமட்டுங் கொடுத்துதுளசிதளம்வாங்கிகொண்டுசேதுவிலே தீர்த்தமாடச்சொல்லி ஒருவனை அனுப்பித்தபுண்ணிய புருஷாளுக்கு வேதசாஸ்திரபுராணங்களில் சொல்லிகிறபடிக்கி அஸ்வமேத யாகம்பண்ணின பலன்களுந் துலாபாரம் பசுபொன் கொடுத்த பலன்களுங் குடுத்தவர்களுக்கும்வாங்கிப்போனவர்களுக்குங்கிடைக்கிறது அல்லாமல் அவரவர் செய்தபாபங்களும் வேரோடு எடு பட்டுப்போம் சேதுவிலே தீர்த்தமாடவேணுமென்கிற ஆசையுடையவன் தீர்த்தமாடப்போகு முன்னே மறணமாகிப்போய்விட்டால் அவனுக்கு தீர்த்தமாடினபலனை யடைந்து மேலானபுண்ணியலோகங்களை அடைவான்மருபடியுஞ்செனனமாகி சேதுக்கரையிலேயெப்போதும் வாசம்பண்ணிக் கொண்டிருந்து பிரதிதினமும் ஸ்நானம்பண்ணி மனமகிழ்ந்துகொண்டிருப்பான்.

ஆறுவது ஒருவன்சேதுவிலே ஸ்நானம் பண்ணிவரச் சொல்லிப்போய் வந்தவுடனே கொடுக்கிறேனென்று சொன்னபொருளைக்கொடாதே போனால் அவனைப்பிர்மஹத்தி பண்ணின பஞ்சமாபாதகனென்று அறிவுடைய பெரியோர்கள் சொல்லுவார்கள், மேலுமிந்தச் சேதுவிலே மாதுர்நிந்தனை பிதுர்நிந்தனை குருநிந்தனைகள் பண்ணின பாபிகளும்அவர்களைக்கொன்ற பாவிகளுங்கெதியென்று நம்பி வந்தவர்களைக் கைவிட்ட பாவிகளுந்தெய்வப் பிராமணாள் பசுக்களை அடித்தவர்களும்உ காரசினம் பேசின பாவிகளுஞ் சாமகாலங்களிலே அன்னம்பகுந்து கொடுத்து சாப்பிடச்செய்த

வர்களை உதாசினம் பேசினபாவிகளுங் கோடை காலங்களிலே மரஞ் செடி பூடுகளுக்கு தண்ணீர்விடாத பாவிகளுங் குளங்கள் வெட்டினதை தூர்த்தபாவிகளுஞ் சாலையைவெட்டியுந் தண்ணீர்ப் பந்தலைக் கொடுத்துஞ் சத்திரங்களை அழித்துங்கோவில்குளங்களை இடித்துஞ் சாமித்துரோகங் குருத்துரோகஞ்செய்கிறபாவிகளும் தேவாலயங்களில் ஸ்திரீ புருஷாள் கூடியிருந்த பாவிகளும்தன்பர்த் தாவுக்குமுந்திச் சாப்பிட்டு முந்திநித்திரை பண்ணியும்நிருவாண மாயிருந்து குளிர்த்தும்,வாயிலேதாம்பூலம்போட்டுபுருஷனுக்குப் பணிவிடை செய்தும், யெதிராக யிருந்து பேசினவர்களும், புருஷன்சொல் தட்டி நடந்தவர்களும்,பரபுருஷாளைக் காப்பாத்தி தன் புருஷனை நிராக்கரித்து நடக்கிர பாவியான ஸ்திரீகளுந் தாயார் தகப்பனுரை சவரெக்ஷனை செய்யாமல் பெண்டீர் களை சவரெக்ஷனை செய்தும் பெரியலர்களை உதாசினஞ் பேசி யும் அடித்தும் தீபமில்லாமல்ச் சாப்பிட்டும் சாஸ்திர நிந்தனை புராணநிந்தனைசெய்த பாவிகளும், பசுமாடுகளை சவரக்ஷனைசெய் யாமல் பால்கரந்து குடித்தபாவிகளும், புண்ணிய கதைகளை கே ளாத செவியை உடைய மூடர்களுந்தேவவிருக்ஷங்களை வெட்டி யும், ஆலயங்களை இடித்தும், கண்மாய குளங்களை தண்ணீரில்லா மல் வெட்டியும், கஞ்சா அபின்களை சாப்பிட்டும், மாமியார் வீட் டில் குடியிருந்துஞ் சாப்பிட்டும், அந்தச்சொத்துகளை அபகரித் துப் பொசிக்கப்பட்ட பாவிகளும், இவர்களெல்லாரும் இந்தச்சே துவைக் கண்டாலுந் தீர்த்தமாடினுந் திவலைமேலே தெரித்தாலும் புண்ணிய புருஷராகி விடுவார்கள். தங்கள் வயசிலே சோறநாயக னுடனேகூடி அனுபவித்து சிசுக்களைச்சொந்த நாயகனரியாமல் வதைசெய்கிர ஸ்திரீகளைப் பஞ்சமாபாதகியென்று பெரியோர் சொல்லுவார்கள். அப்படிக்கொத்த பாதகரை தேவாதிகள்தங்க ளைக்கொன்ற பாவிகளென்றும் அஞ்சுவார்கள், மூன்றுலோகமு மப்படியே சொல்லும்அவர்களுஞ் சேதுஸ்னானத்திற்குபோகவே ணுமென்று ஒருவன் கையிலொருவன் பொருள் வாங்கிகொண்டு போகாமலிருந்து விட்டாலிவனை பஞ்சமா பாதகத்திலும், பாதக னென்றும் நீசனிலும், நீசனென்றும், வேதசுருதிகளினலே சொ ல்லப் பட்டிருக்கிறது அவர்களும் யெந்தவகையினலாவது யெ ன்ன பிரயாசைப் பட்டாவது சேதுவில் ஸ்நானம் பண்ணவே ணும் இல்லாவிட்டால் சேதுவிக்குப் போகச் சொல்லவேணும், அதுக்குச் சக்தியில்லாதபேர்கள் வேண்டிய பதார்த்தங்களை கூடு

த்து நல்ல யோக்கியமான பிராமணனைப் போகச் சொல்லவே ணும் அப்படிப் போகச் சொல்வதற்குத் தன்னிடத்தில் பொரு ளில்லாதே போனால் யாரிடத்திலும் வாங்கி கொடுத் தாவது போகச் சொல்ல வேணும் மேலும் யாகங்கள், யெக்கியங்கள், முதலானதர்க்கு மாத்திரம் யாரிடத்திலாவது பொருள் வாங்கி நடப்பிக்கலாமென்று வேதவாக்கியம் சொல்லப்பட் டிருந்தாலுஞ் சேதுவுக்குப் போரபேர்கள் நீசரிடத்திலாவது பொருளை வாங்கி கொண்டு போனால் அவர்கள் புண்ணியர் புருஷராவார்கள் இந்தச் சேது கிரேதாயுகத்தில் ஞானசொரூபமாக யிருந்து சகலத்திரா ளுக்கும் மோக்ஷசாம்பிராச்சியத்தைக் கொடுத்துந் திரேதாயுகத் தில் தேவசொரூபமாகயிருந்து மேலான புண்ணிய லோகங்களை தொடுத்துந் துவாபரயுகத்தில் யீஸ்பர சொரூபமா யிருந்து சக்கி ரவர்த்தி முதலாகியபேர்களுக்கு சாம்பிராச்சியபட்டாபிஷேகங்க ளைக் கொடுத்துங் கலியுகத்தில் சேதுசொரூபமாக யிருந்து அவ ரவர் நினைத்தகாரியங்களைக் கொடுத்துகொண்டிருக்கிறது அதின் மகிமைகளை நம்மால் சொல்லி முடியாது தெரிந்தமாத்திரஞ்சுறுக் கமாக உங்களுக்குச் சொன்னேனென்று சூதமகாரிஷி சொல்ல நைமியசாரண்யத்துரிஷிகள் கேட்டு ஆனந்தசந்தோஷஆச்சரியங் களையடைந்து இப்படிக்கொத்த சேதுவை ஸ்ரீராமசந்திரமூர்த்தி யாகிய சர்வசீவதயாபாரமூர்த்தியாகியசுவாமிகள் யென்னகாரண த்தினால் உண்டாக்கினாரென்று ரிஷிகள் கேழ்க்க சூதமாமுனி வர் சொல்லுகிறாரென்றவாறு.

சேதுபலமகுத்துவம்-முற்றிற்று.

உ

கடவுள் துணை.

சேதுபந்தன விபாமகுத்துவம்.

கோசலதேச மாளப்பட்ட தசரதமகாராஜா அறுபதினாயிரம்வருஷந்துரைத்தனம் பண்ணி அறுபதினாயிரம் ஸ்திரீகளைக் கலியாணம் பண்ணிக்கொண்டு அயோத்தியாபுரியிலே யிருக்கிறபோது தனக்கு பிள்ளையில்லையென்று கலைக்கோட்டு மகாரிஷியை அழைத்து புத்திரகாமேஷ்டியாகஞ்செய்து பிண்டங்கள் அமர்த்திக்கொடுக்க கோசலாதேவி, சுமித்திராதேவி, கைகேசிதேவி யிவர்கள் வயிற்றில் ஸ்ரீவைகுண்ட வாசகராய் ஸ்ரீமந்நாராயணமூர்த்தியும் ஆதிசேஷனுஞ் சங்குசக்கரங்களும் ஸ்ரீராமமூர்த்தியாகவும், லக்ஷுமணராகவும், பரதசத்துருக்களாகவும்,பிரந்துவளர்ந்துபரிபாலனமாகிவித்தைகள்அப்பியாசம்பண்ணிசவள உபநயனமுதலானதும்நடத்திவைத்துஆனைஏற்றங் குதிரையேற்றம் வில்பரிட்சைமுதலான தனுசாஸ்திரங்களும்படித்துசமர்த்தனாக யிருக்கும்போதுவிஸ்வாமித்திரர் யாகம்வளர்க்கவேண்டியதாய்வந்துதசரதமகாஜாவிடத்தில்வந்து ஸ்ரீராமர்லக்ஷுமணனைகேட்டு ராமலக்ஷுமணனிரண்டுபேரையும்வசிஷ்டர் வாக்கியந்தப்பாமல்தசரதருங்கூட்டி அனுப்பிவிக்க அவர்களை கூட்டிக்கொண்டுவந்துயாகத்தை அளித்துப்போடாமல்அஸ்திரங்களினாலேசரக்கூடங்கட்டிவில்லாளிகளாயிருந்த இரண்டுபேரையுங் காத்துகொண்டிருக்கும்படி செய்துயாகம் வளர்க்கிறபோது தாடகைமுதலான பேர்கள்வந்துஅனேகம் இம்சைகள் செய்ததினால் அவளையுஞ் சங்காரஞ்செய்துவிஸ்வாமித்திரர்யாகத்தைநிரைவேற்றிப் பூரணாகுதிசெய்துஇந்திராதிதேவர்கள் ரிஷிகள் மூலமாய் அனேகவரப்பிரசாதங்களும் அஸ்திர சஸ்திராபரணங்களும் பெற்றுக்கொண்டுவிஸ்வாமித்திரர்பின்னாலே வருகிறபோது கருங்கல்லாய் கௌதமரிஷி சாபத்தினாலேகிடந்த அகலிகையும் ஸ்ரீராமசுவாமியினுடைய பாதம் பட்டவுடனே பெண்சொரூபமடைந்து யெழுந்து வணங்கினாள் அவளையுங் கௌமதரிஷி யிடத்துக்கு அனுப்பி வைத்துவிட்டு சரபங்கரிஷி ஆச்சிரமத்துக்குவந்து அவரையும் நமஸ்கரித்துக்கொண்டுமிதிலா

புரிக்குவந்துஜனகமகாராஜனிடத்தில் விஸ்வாமித்திரர்பரிக்ஷைசெய்யசீதையுடனே வரப்பிரசாதமாய்ப் பிரந்திருக்கிற வில்லையும்முறித்துதசரதமகாராஜா முதலாகிய சகலரையும்வரவழைத்துசீதாலக்ஷிமிமுதலான பேர்களை ஸ்ரீராமசந்திரர் முதலான நாலுபேர்களுக்குங் கலியாணம் பண்ணிக்கொண்டு மிதிலாபுரிப் பட்டணம் விட்டு அயோத்திக்கு வருகிறபோது பரசுராம ரிஷியுடைய பெலமுங் கைவில்லும் வாங்கிக்கொண்டு அயோத்தியாபுரி பட்டணம் வந்து சேர்ந்தார்களப்படி யிருக்கிறபோது தசரதமகாராஜாவானவர் வசிஷ்டருடனே யோசனைபண்ணி ஸ்ரீராமருக்குப் பட்டாபிஷேகஞ்செய்ய யெத்தனிக்கிறபோது கைகேசி வார்த்தையை கேட்டுக்கொண்டு பரதனுக்கு பட்டாபிஷேகஞ் செய்வதால் ஸ்ரீராமனைவனத்திலே போகச்சொன்னதினால் ஸ்ரீராமரும் லக்ஷுமணருஞ் சீதாதேவியும்அயோத்தியாபுரி பட்டணம் விட்டுசித்திரகூட பருவதம் வந்து கங்காநதிதாண்ட வேண்டியதற்கு குகனென்கிறவேடனையுஞ் சினேகிதங்கொண்டு ஓடமேரிசித்திரகூடம்வந்து சேர்ந்தனர்கள் தசரதமகாராஜாவும் புத்திர சோபத்தினாலே மரணத்தை யடைந்தார் பரதனுஞ் சத்துருக்கனுந் தசரதரை யெடுத்து அடக்கஞ்செய்து விட்டு சித்திரகூடம் வரைக்கும் வந்துசேர்ந்து ஸ்ரீராமசுவாமியால் தசரதமகாராஜாவுக்குச் செய்ய வேண்டியகிரியைகளைச்செய்து ஸ்ரீராமருடையஉத்திரவுப்படிக்கி அயோத்திவந்துசேர்ந்து சத்துருக்க மகாராஜாவை அயோத்தியா நகரத்தை ஆளும்படி செய்துவந்தார். பரதனும் நந்திக்கிராமத்தில்ஸ்ரீராமசுவாமியினுடைய சேவடியாகிய பாதுகையைப் பூசித்துவந்தார் ஸ்ரீராமலக்ஷுமணனுஞ்சீதாதேவியுஞ் சித்திரகூடபருவதம்விட்டுப்புரப்பட்டு வனத்தைநோக்கி வந்தார்கள், காகாசூரனென்னப் பட்டராக்ஷதன் வந்துசீதையை யெடுத்து கொண்டுபோனதினால் அவனைச்செயித்துச் சீதையை விடுவித்துக்கொண்டு அகஸ்தியர் முதலான மகாரிஷிகளுடைய ஆச்சிரமங்களெல்லாம் வந்து அவர்களை யெல்லாங்கண்டு தெரிசித்து அனேகவரப்பிரசாதங்களும் அனேக ஆயுதங்களும் பெற்றுக்கொண்டு வனமெல்லாஞ் சஞ்சாரம் பண்ணிக்கொண்டு பஞ்சவடி தீர்த்தக்கரையில் பன்னகசாலைக் கட்டிக்கொண்டு சீதாதேவியும் லெக்ஷுமணரும் யேவல் பணிவிடைகள்கேட்க ஸ்ரீராமசுவாமியும் இந்தவிதமாகயிருக்கிறபோது சூர்பங்கைவந்து ஸ்ரீராமலெக்ஷுமணனுடனே சம்வாதம் பண்ணி

மூக்கும், முலையும், மறுப்புண்டு கரதூஷண திரிசிராளிடத்தில் போய்ச்சொல்ல அவர்களும் ஆயுதபாணிகளாக வந்து யெதிர்த்து ஸ்ரீராமச் சந்திரமூர்த்தி கையினாலே மடிந்து போனார்கள்அப்பால் சூர்ப்பநகை புரப்பட்டு இலங்கையிலேபோய்த் தன்னுடைய தமயன் இராவணனிடத்தில் அனேகந்துர்ப்புத்திகளையுஞ் சீதையினுடைய அழகுகளையுஞ்சொல்ல அவனுங்கேட்டு தன்னுடைய மாமனாகிய மாரீசனை மான்சொரூபமாக முன்னிட்டுக் கொண்டு பஞ்சவடிதீர்த்தக்கரையிலேமானாகசீதாதேவிமுன்னேவிளையாடிக் கொண்டு நிற்கச்சீதை அம்மானைப் பிடித்துத்தரச் சொல்ல ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியும், வில்லும், அம்பும், யெடுத்துக் கொண்டு மானைத்துரத்திப் பிடிக்கக்கூடாது ஓரம்பினாலே யெய்துபோட, மான் விழுகிறபோது, ஓ லக்ஷ்மணாவென்றுஅலரி அபயமிட,ஸ்ரீ ராமர் சத்தம்போலே மாய்கையினாலே மாரீசன் செய்ய அப்படி விழுந்த சத்தத்தை லக்ஷ்மணர் கேட்டு ராக்ஷசமாய்கையினாலே தமயனுக்கு மோசம் வந்ததென்று ஆயுதபாணியுடனேசீதைசொல்ப்படிக்கு வனத்தைநோக்கிப்போய் விட்டார். அப்போது ராவண சன்னாசியும் வந்து சீதையிருக்கிற பன்னகசாலை வாசலிலே பிட்சைக்கேட்கச் சீதையம்மனும் பிட்சை கொண்டுவந்தாள், உடனே பூமியோடே பேர்த்தெடுத்து தேரின்பேரிலே வைத்துக்கொண்டு மாய்கையாய் இலங்கையை நோக்கிப் போரபோது சடாயுவும் வந்து எதிர்த்தார் அவரை உபாயதந்திரங்களினாலே ராவணன் கொன்றுபோட்டுப் போரபோது, சீதையுந்தான் பூண்டிருந்த ஆபரணங்களைக் கழட்டிக்கிஷ்கிந்தா மலைக்கருகாண்மையாக யிருக்கப்பட்ட மதங்ககிரிமலையில் போட்டுவிட்டு மகாவிசனத்துடனே அபயமிட்டு அழுதாள் உடனே ராவணனும்அதிகசீக்கிரமாக இலங்கையிலே கொண்டுபோய் அசோகவனத்திலே ராக்ஷத ஸ்ரீகளைக் காவலாகவைத்துத் தன்னைச்சேரும்படிக்கு போதனை செய்யச்சொல்லி இலங்கைக்கு போனான், சீதையும் அந்தவனத்தில் மகாவிசனத்துடனே ஸ்ரீராமஸ்மரனை பண்ணிக்கொண்டிருந்தாள். அப்பால் வனத்திலே மான்பிரகே போயிருந்த சுவாமியும் அவரைத்தேடிப்போன லக்ஷமணரும், பன்னகசாலையிலே வந்து பார்த்து சீதையம்மனைக் காணாமல் அந்தவனமெல்லாந் தேடிக்கொண்டு வருகிறபோது சடாயுவானவர் குத்துயிருடனே கிடந்ததைக்கண்டு ஸ்ரீராமசுவாமியும் லக்ஷ்மணரும் மகாவிசனத்தை

யடைந்து அவராலே சீதையம்மனை ராவணன் இலங்கைக்கி கொண்டுபோயிருக்கிறது யறிந்துகொண்டு வுடனே ஜடாயுவும் மரணமானார் சடாயுவையும் மெடுத்து அடக்கஞ்செய்துவிட்டு வனத்திலே புரப்பட்டு வருகிறபோது கபந்தராக்ஷதனையுஞ் சங்கரித்து சபரியம்மனை வைகுண்டத்துக்கு அனுப்பிவைத்துக் கிஷ்கிந்தா மலைக்கு அருகாண்மையாய் வருகிறபோது பம்பையாற்றங்கரையில், ஒருமரத்தடியில், அனுமார்நின்றார் அவரிவர்களைக்கண்டு கிட்டவந்து இவர்களுடைய முகவாட்டங்களைப்பார்த்து நீங்களார்யெங்கேயிருந்து வந்தீர்கள் எங்கேபோகிறீர்களென்றுகேட்க அப்போது ஸ்ரீராமசுவாமியும் லக்ஷுமணரும் நடந்தகாரியமெல்லாம் ஆதியோடந்தமாகச்சொல்லி அனுமானுடையகாதிலேகிடந்த கவசகுண்டலத்தையுங்கண்டு ஆச்சரியமடைந்தார்கள். அப்போது அனுமாருஞ் சுவாமிகளுக்கு உண்மையாகி சுக்ரீவன் முதலானபேர்களையும் வானரச்சேனைகளையும் நட்புக்கொண்டு வாலியையுங் கொன்று துந்துமியெலும்பையும் மராமரத்தையுந் தவிடுபொடியாகச்செய்து சுக்ரீபனுக்குத் தாரையைசேர்ப்பிவித்து கிஷ்கிந்தாபுரிக்கிப் பட்டாபிஷேகஞ்செய்து வானராதிகளை சரர்க்காலங்கிரமித்தவுடன் வரும்படிக்கும் அனுமார் முதலானபடைத்தலைவரையுங் கூட்டிக்கொண்டுபோய் சீதையம்மனைத் தேடிவரும்படி திருவாழிமோதிரமுங்கொடுத்து அனுப்பிவைத்தார். அனுமாரும் வானராதிகளுடனே புரப்பட்டு வணங்கள், மலைகளெல்லாந்தேடி சீதையம்மனைக் காணமல் மயேந்திரகிரி பருவதம்வந்து சேர்ந்து சம்பாதியை நட்புக்கொண்டு அவர்கள் சொல்படிக்கி அனுமார் விஸ்வரூபங்கொண்டு மைனாகபருவதத்தில்யேறி குதித்து இலங்கை மாகாளியைக்கொன்று ராக்ஷதாளையும் அட்சயகுமாரனையுஞ் சம்புமாலியையும்பஞ்சசேனாதிபதிகளையுங்கொன்று சீதாதேவியம்மனைக்கண்டு திருவாழிமோதிரங்கொடுத்து அப்பால் இந்திரசித்துவினால், பிடிபட்டு இராவணனை சந்தித்து அவனால் வாலில் தீயைக்கொளுத்தப்பட்டு அக்கினியினால், வாலைப்பிடித்துக்கொண்டுயெதிகிறதீயை இலங்கைப்பட்டணம் மெழுநூற்றுக்காதவழி தீயைக்கொளுத்திச் சீதாதேவியம்மன் கொடுத்த சூடாமணியுங் கொண்டு மயேந்திரகிரி பருவதம்வந்து சேர்ந்து வானராதிகளுடன் ஸ்ரீராமசுவாமியை கிஷ்கிந்தைவந்து கண்டு சூடாமணியுங் கையில்கொடுத்தார் ஸ்ரீராமசுவாமியும் அனுமார்பேரில் மகாசந்

தோஷத்தை யடைந்து வாணராதிகளுஞ் சுக்கிரீபன் முதலாகிய படைத்தலைவர்களுடன் புரப்பட்டு கிஷ்கிந்தாமலையைவிட்டு வாலி குண்டம் திருப்பதிமலைமார்க்கமாய் மயேந்திரகிரிவந்து சேர்ந்து அதன்சாரலில்யிருக்கிற சக்கரதீர்த்தத்துக்கருகாண்மையில் தென் சமுத்திரக்கரையில் யெழுந்தருளியிருந்தார் அப்படியிருக்கிறபோது இலங்கைநகரத்தில், அனுமார் தீயைக்கொளுத்திப்போட்டு வந்ததின்பிறகு இராவணனுடைய தம்பியாகிய விபீஷணன் தமயனுக்கு அனேகவிதமாகிய புத்திகள்சொல்லி ஸ்ரீராமசுவாமியிடத்தில் சீதாதேவியைக் கூட்டிக்கொண் போய் விடும்படி சொல்லியும் இராவணன் கேளாததினால் மகாஞானியான விபீஷணன் பின்வருங்காரணங்களை அரிந்துகொண்டு இராவணனை வெறுத்துவிட்டு நாலுமந்திரிமார்களுடனே இலங்கையை விட்டுப்புரப்பட்டு யெழுந்தருளியிருக்கிற ஸ்ரீராமச்சந்திரமூர்த்தி பாதத்தில் சரணாகதியடைந்து அடைக்கலம்புகுந்தான் ஸ்ரீராமச்சந்திரமூர்த்தியும்லக்ஷுமணப்பெருமாளுஞ் சுக்கிரீபன் அனுமார் ஜாம்புவர் முதலானபேர்களுடன் யோசனைசெய்துகொண்டு க்ஷத்திரியதற்மப்பிரகாரம் விபீஷணனை அடைக்கலங்கொண்டு உடனே இலங்காபுரியின் அரசாக்ஷிக்கி பட்டாபிஷேகஞ்சூடிக் கிரீடமுந்தரித்து விபீஷணன் முதலான பேர்களால் இலங்கையின் வர்த்தமானங்களையெல்லாம் ஸ்ரீராமசுவாமிகேட்டு யோசனைசெய்துக்கொண்டு மானிடஜென்மமாய்ப் பூமியில்பிரந்துவிட்டு க்ஷத்திரியதர்மப்பிரகாரம் நடக்கவேணுமே தவிர தெய்வ நிர்ணயங்களைச் செலுத்தக்கூடாதென்று யோசித்து இந்தசமுத்திரத்தைக்கடந்து இலங்கைக்கி யெப்படி போகலாம் நாம் ஒருவழியாய்ப்போய்ச் சேர்ந்தாலும் வானரப் படைகள் யெழுபத்திரண்டு வெள்ளமும் போய்ச்சேரவேணும் யிதற்கு யென்னயோசனையென்று நானாவிதங்களாய் யோசித்துக் கொண்டும் மகாதுயரத்தையடைந்து நமக்கு தகப்பன் மரணமாய்ப்போய் தாய்மார்கள் அவமங்கிலியமடைந்தும் இராச்சியங்களை விட்டுப்பிரிந்துஞ் சீதையைப்பரிகொடுத்தும் மிருக்கப்பட்ட விசனத்திலும்மகாதுக்கமாகநேரிட்டது இந்தசமுத்திரத்தைக்கடந்து இலங்கைக்கிப்போய் ராவணனைக்கொன்று சீதையை மீட்டுவருகிவருகிறது ஆனால் அகஸ்தியமகாமுனிசொல்லிய வாக்குந்தப்பிப்போமா அவர் வாக்குப்படியே கெந்தமாதனத்தில் ராவணனைக் கொன்ற தோஷந்தீர சிவபூசை பண்ணாமல் போமாவென்று வெ

குவிதங்களாய் யோசனைபண்ணுகிறபோது விபீஷணனுஞ் சொல்லுவான்.

இலங்கைக்குப் போகவேணுமானால் வானராதிகளால் சமுத்திரத்திற்கு அணைக்கட்டி அப்பாலதில் நடந்து போகவேணுமென்று சொல்ல சுவாமியும் அந்தவார்த்தையை ஒப்புக்கொண்டு சமுத்திரம் ஆழம் நிகளம் மரிந்து அணைகட்டவேணுமென்றுவ்ருணனைநோக்கி யேழுநாள் தெர்ப்பாசனத்தில் வருணமந்திரத்தைத் தியானித்துக் கொண்டிருந்தார், அதுவரிந்துவருணனும் வராதது கண்டு நிமிஷத்தில் சுவாமிக்கு கோபம் வந்து ராமபாணத்தைப் பிரயோகஞ் செய்தார், வருணனும் பயந்து சரணுகதியடைந்து தோத்திரமுஞ்செய்தான் சுவாமியுந் தயவுவந்து இந்த சமுத்திர ஆழமும் இலங்கைக்குபோக நிகளம்யென்னவென்றுகேட்டு அணைக்கட்டவேண்டியதையுஞ்சொல்ல வருணனுங்கேட்டு சுவாமி யிவடத்திலிருந்து இலங்கைக்கு நூறுயோசனை தூரமிருக்கிறது ஆழங்காணக்கூடாது அணைபோடவேண்டுமானால் போட்டகல் மிதக்கும்படியாய் வரப்பிரசாதங்களினால் பிரந்திருக்கிறுன் வானரப் படைத்தலைவரில் நளனென்று ஒருவன் சுவாமிகூடவே வந்திருக்கிறுன் அவன் பூர்வஜென்மத்தில் மயனுகிய சிற்பனுக்கும் அவனுக்கு சுவாமி உத்திரவுகொடுத்து வானரப்படைகளால் ஒத்தாசை செய்தால் அவனும் கட்டுவானென்றுசொல்ல சுவாமியும் அவனை அழைத்து வெகுமானஞ்செய்து நீ தண்ணீரிலே போட்டகல் மிதக்கும்படி உன்னுடைய தகப்பனுடைய வரப்பிரசாதம் பெற்றவனைபடியினால் அனுமார் முதலாகிய வானரப்படை வீரர்களான வானர வீரர்கள் கொண்டுவந்து கொடுக்கிற பர்வதங்களை வாங்கி குடங்கையினால் இலங்கைகுப் போகும்படி வருணனுடைய முதுகின்பேரில் அணைக்கட்டென்று ஸ்ரீராமசுவாமி வரப்பிரசாதங் கொடுத்து யாதொருவிக்கினங்களும் வராமல் நிறைவேற்றும்படிக்கு விக்னேஸ்வரனைப் பூசைசெய்து அனுக்கிரகம் பெற்றுக்கொண்டு அப்பால் நவக்கிரகங்களையும் விதிப்படி நவபானஸ்தாபிதஞ் செய்து பிராணப்பிரதிஷ்டைசெய்து அப்பால் சனிப்பிரிதியாய் யென்னைவைத்து சிவப்பிரதிஷ்டைசெய்து திலதீஸ்பரரை பூசை செய்து இவர்களுடைய அனுக்கிரகங்களையெல்லாம்பெற்றுக்கொண்டு நளனுக்கு சேதுபந்தனத்துக்கு தேங்காய்தொட்டுக் கொடு

த்து அனுமார்முதலான பெரியோர்களான படைத்தலைவரையும் வானரப்படைகளையும் நாலுதிக்கு திசைகளிலேயும்போய் பருவதங்களையுங்கொண்டுவந்து கொடுக்கும்படி உத்திரகொடுக்க ஸ்ரீராமருடைய வாக்கியப்படி வானராதிகளெல்லாம் பருவதங்களை அளவு சங்கையில்லாமல் கொண்டுவந்து மேலுமேலுங்கொடுக்க ஸ்ரீராமசுவாமியும் லக்ஷுமணரும் ஜெயம்ஜெயமென்று வாக்குகொடுக்க நளனுகியவன்வாங்கி கட்டினதிருவணையானது நவபாஷானமுதல் தெற்பசயணம் மத்தியாக புல்லாரண்யங்கடசியாப் ஈசாண்ய அக்கினிதிக்கு அளவாய்ப் பத்துயோசனை விஸ்தீரணம் அகலமும் அதிலிருந்து அக்கினிதிசை பிரவேசமாய் தெற்குமுகமாய் இலங்கையைநோக்கி பவளமால்மலைவரைக்கும் நூறுயோசனைநிகளமுஞ் செய்து சேதுபந்தன முடிவாயிருக்கும் இப்படி ஸ்ரீராமசுவாமியாலே அனேகம் நதிகள், சுனைகள், ரிஷிகள், சஞ்சாரஞ்செய்துக் கொண்டிருந்த பருவதங்களை ஸ்ரீராமர் வாக்கியப்பிரகாரம் வானராதிகளால் கொண்டுவந்து கொடுக்க நளன் வாங்கி அடைக்கிறபோது சமுத்திரத்தை யெப்போதுங் கண்பார்க்கவந்த ஸ்ரீராமச்சந்திரமூர்த்தி நடக்கும்போதுபட்ட பாதர்ரவிந்தங்களுடையசங்கு, சக்கரரேகைகள் சேதுவில்பிரகாசித்துக்கொண்டிருக்கும் அப்படிக்கொற்ற பருவதங்கள் சங்குசக்கரங்களில்அலைமோதிசப்தத்துடன் ஆடம்பரஞ்செய்து கெர்ச்சிதங்களைப்பண்ணி தென்சமுத்திரமானது மகா ஆனந்த சந்தோஷங்களையடைந்து கொண்டிருக்கும்படி, அலைமோதப்பட்ட சமுத்திரஜலத்துக்கு சேதுதீர்த்தமென்றுபெயர் அனேகயுகங்களாய் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது இப்படிக்கொத்த சேதுவில் ஸ்தானம் பண்ணினபேர்களையுஞ் சேதுவைக்கண்ணுல் கண்டபேர்களையுஞ் சேதுவுடையகாத்துப் பட்டபேர்களையும் புண்ணியபுருஷாள், புண்ணியசாலிகள், கிருதார்த்தர்கள் மகாயெக்கிய சாலிகளென்று வேதங்களாலே முறையிட்டு கொண்டிருக்கிறது, மேலும் இந்தச்சேதுவில்அனேகங்கோடானகோடி தீர்த்தங்கள் மகாபாதகங்களைத் தீர்க்கும்படி வரப்பிர சாதங்கள் பெற்றது அதிலும் முக்கியமாய் சக்கரதீர்த்தம், வேதாளதீர்த்தம், பாபவினசதீர்த்தஞ், சீதாகுண்டம்அமுததீர்த்தம்,பிர்மகுண்டம்,அனுமகுண்டம், அகஸ்தியதீர்த்தம்,இராமதீர்த்தம், லக்ஷுமண தீர்த்தம், ஜடாமகுட தீர்த்தம், லட்சுமிதீர்த்தம், அக்கினிதீர்த்தம், சிவதீர்த்தம்,சங்குதீர்த்தம், கயாதீர்த்

தம், கெங்காதீர்த்தம், சாவித்திரி தீர்த்தம், காயத்திரி தீர்த்தம், கோடிதீர்த்தம், தனுக்கோடிதீர்த்தம், ஆகியஇந்த இருபத்துநாலு தீர்த்தமும், முக்கியமானதுகள் இதுகள்விசேஷமென்று சூதபுராணிகர்சொல்ல நைமியசாரண்ணியத்து ரிஷிகள்கேட்டு ஆனந்தசந்தோஷ ஆச்சரியங்களையடைந்து இப்படிக்கட்டின சேதுவிலே இந்த இருபத்துநாலு தீர்த்தமும், ஆதிமுதன்மையாய்விளங்குகிற சக்கரதீர்த்தமு வந்த காரணமென்ன வென்று ரிஷிகள் கேழ்க்க சூதமாமுனிவர் சொல்லுகிறார் பென்றவாறு.

சேதுபந்தனமகுத்துவம்-முற்றிற்று.

உ

கடவுள்துணை.

தருமபுஷ்கரணி யென்ற

சக்கரத்தீர்த்த மகுத்துவம்.

முன்னொருகாலத்தில் காலவமகாரிஷி யாகப்பட்டவர் தெட்சணத்தில் புல்லாரண்ணியத்தில் பாலோடை யென்ற மகாநதிக்திக்கருகான்மையாக மகாவிஷ்ணுவை நோக்கித் தபசு பண்ணிக்கொண்டிருந்தார். அப்படிக்கித் தபசில் யிருக்கப்பட்ட காலவ மகாரிஷியானவர் ஊணுறக்க மில்லாமல் பொரிபுலன்களை யடக்கி வாய் மௌனங்கொண்டு சிந்தையடக்கி வாயுவைப் பக்ஷணம்பண்ணிக்கொண்டு மழையோடு மழையாகவுங் காற்றோடு காற்றாகவும் நெறுப்போடு நெறுப்பாகவும் அஷ்டாக்ஷரங்களை இடைவிடாமல் தியானித்துக்கொண்டு தேவவருஷத்தில் ஆயிரம்வருஷந் தபசு பண்ணிக் கொண்டிருக்கிறபோது மகாவிஷ்ணுவானவர் கிருபை கூர்ந்து சங்குசக்கர கெதாபாணியாய் மகரகுண்டலகேயூரபீதாம்பரதாரியாய் மகாலக்ஷ்மி சமேதராய் கெருடவாகன ரூடராய்யெழுந்தருளி வைகுண்டலோகத்தைவிட்டுப் புறப்பட்டு புல்லாரண்ணிய க்ஷேத்திரத்தில் தபசுபண்ணிக் கொண்டிருக்கிற காலவமகா

ரிஷிமுன்னாகவந்து காட்சிகொடுத்தார் அப்போதுரிஷியுஞ்சந்தோஷங்களையடைந்து தபசுவிட்டிரங்கி வணங்கி நமஸ்காரம் பண்ணி ஆனந்த கூத்தாடி கைகொட்டி ஆனந்த பரவசங்களை யடைந்து தோத்திரஞ்செய்தார் அப்போதுமகாவிஷ்ணுவுஞ்சந்தோஷத்தை யடைந்து உமக்குவேண்டிய வரங்கள் யென்னவென்று கேழ்க்க காலவமகாமுனியுஞ் சொல்லுவார் சுவாமி வேதவேதாந்தமூர்த்தி தேவரீரைப்போலே அடியேனுஞ் சொரூபம் பெற்று வைகுண்டத்திலே யெப்போதுஞ் சுவாமியுடைய சரணாரவிந்தத்தை நித்திய சுத்தபரிபூரண பரமபாகவதருடனே வணங்கி கொண்டிருக்கும் படியாய் வரங்கொடுக்க வேணுமென்று கேட்டார் அப்போது ஸ்ரீமந்நாராயணமூர்த்தி சொல்லுவார் வாருங்காலவ மகாரிஷியே நீர் ஒருவருங் கேளாத வரத்தைக்கேட்டீர் ஆகிலும்நாம் அந்தபடியே வரங்கொடுக்க வேணுமானால் இந்த கர்மபூமியிலே இன்னம் பிராரப்தம் நீர் அனுபவிக்கவேண்டி யிருப்பதினால் அந்த பிராரப்த வினை துலையும்படியாய் நீரிப்போது தபசுபண்ணிக்கொண்டிருந்த விடத்துக்கு இன்னுஞ்சற்றே உத்தரபாரிசத்திலேதருமபுஸ்கரணி யென்று ஒருதடாகமிருக்கிறது அந்தத்தடாகமிதற்கு முன்னொரு காலத்தில் தர்ம தேவதையானது தான்சுதாவாய் ஈஸ்பரனை நோக்கி இந்த க்ஷேத்திரத்தில் தபசுபண்ணிக் கொண்டிருக்கிறபோது ஈஸ்பரன் பார்வதி சமேதராய் மான்மழுச் சதுர்ப்புஜங்களகண்ட திருநேத்திர சூலபாணியாய் சந்திரசடாதாரியாய் சிவகணங்களுடனே தர்மதேவதை முன்பாக பிரத்தியட்சமாகி உனக்கு வேண்டிய வரப்பிரசாத மென்னவென்று கேழ்க்க தருமதேவதையும் வணங்கித் தோத்திரஞ்செய்து சுவாமி அடியேன் சதாகாலமுஞ் சுவாமிக்குப் பணிவிடைசெய்து சுவாமியை அடியேன் சுமந்துக் கொண்டு இருக்கவேணுமென்றுவரங்கேழ்க்க அப்போதுபரமேஸ்வரனுஞ் சந்தோஷத்தை யடைந்து அந்த யிடத்தில் வொருதடாகத்தை தெய்வீகமாக உண்டுபண்ணி அதில் தருமதேவதையை ஸ்தானம் பண்ணும்படி சொன்னார் அந்தப்படியே தர்மதேவதை போய் தடாகத்தில் ஸ்தானம் பண்ணவும் முன்சொரூப மறைந்து நந்திசொரூபமாய் நாலு காலும் வாலுங்கொம்புகளுமாக வந்து முன்னே நின்றது உடனேபரமேஸ்வரனு மந்தரிஷப வாகனத்தில் பார்வதி சமேதராய் எழுந்தருளி சகலதேவருக்குங் காட்சிகொடுத்து இந்தத் தடாகத்தில் தர்மதேவதை தீர்த்தமாடி ரிஷபமாய்

வந்து நம்மைத்தாங்கினபடியினால் இந்தத்தடாகத்துக்கு தர்மபுஸ்கரணியென்று நாமதேயஞ் சொல்லப்படும் இதில் ஸ்நானம் பண்ணின பேர்களுக்கும் நினைத்தபடியே சொரூபத்தைப் பெருவார்களென்று வாக்கு கொடுத்துப்போட்டு சகல தேவதைகளுடனே கைலாசத்துக்குப்போய் விட்டார் அன்றுமுதல் அந்தத்தடாகத்துக்குத் தருமபுஸ்கரணியென்று பேருய் தெய்வீகத்தையடைந்திருக்கிறது அந்ததடாகத்தில் நீர்போய் ஸ்தானம்பண்ணி சதாகாலமதின் கரையில் தபசுபண்ணிக்கொண்டிரும் அப்படிக்குநீருந்தால் நம்மிட சொரூபத்தைப்பெற்று வைகுண்டத்துக்கு வருவீர் அப்படி நீரிருந்து தபசுபண்ணிக் கொண்டிருக்கும்போது உம்முடைய தபசுக்கு ஆருவது விக்கினஞ்செய்தாலுடனே நம்முடைய சக்கரம் வந்து அவர்களைச் சங்கரித்துப் போடுமென்று வாக்குக் கொடுத்து காலவமகாரிஷியிடஞ் சொல்லிக்கொண்டு மகாவிஷ்ணுவும் வைகுண்டத்துக்கு யெழுந்தருளிப் போய் விட்டார் அவர் போனதின் பிறகு காலவமகாரிஷியும் உதயம் மத்தியானஞ் சாயங்காலம் மூன்றுகாலமுந் தருமபுஸ்கரணியில் தீர்த்தமாடி அதன் கரையில் தன்னுடைய தேவபூசையாகிய சாளக்கிராமங்கள்வைத்துப் பிரதிஷ்டைசெய்து பூசைபண்ணிக்கொண்டுசங்கிரமம்சஷ்டி அஷ்டமி சதுர்த்தசிபவரனை அமாவாசை முதலாகிய பிதிர்தினங்களில் தர்ப்பன முதலாகியகிரிகைகளும் நடத்திவைத்துக்கொண்டு தபசுபண்ணிக் கொண்டிருக்கிறபோது காலவமகாரிஷியை ஒரு ராட்சதன் வந்து மாய்கையாய் கொண்டு தின்னப் பாய்ந்தெடுத்தான் அப்போது காலவமகாரிஷியும் மகாவிஷ்ணுவை நினைத்தார் உடனே மகாவிஷ்ணுவுஞ் சக்கரத்தை யேவினுர் உடனே சக்கரமும்வந்து அந்தராட்சதனைக்சங்கரித்துப்போட்டுக்காலவமகாரிஷியை விடுவித்தது மகாரிஷியுஞ் சந்தோஷத்தை யடைந்து யெப்போது மிடைவிடாமல் காத்துக்கொண் டிருக்கவேணுமென்று வேண்டிக் கொண்டார்.

அப்போது சக்கரஞ்சொல்லும் வாருமகாரிஷியே ஸ்ரீமன்ஞராயண மூர்த்தியினுடைய உத்திரவுப் பிரகாரம் நான் வந்து ராட்சதனைச் சங்கரித்துப் போட்டது சரியே இனிமேல் உம்முடைய வேண்டுதல் நிமித்தியம் நான் வந்து இருக்கவேணுமானல் மகாவிஷ்ணுவினுடைய உத்திரவு கேட்டுக்கொண்டு உம்மை வே

ண்டி வந்திருக்கிறேன். இப்போது நானிந்த ராட்சதனைக்கொன்ற பாவந்தீர யெனக்கு ஒருவகைச் சொல்லுமென்று சக்கரங்கேழ்க்கக் காலவமகாரிஷியுஞ் சந்தோஷத்தை யடைந்து இந்தத்தடாகத்திலே ஸ்தானம் பண்ணென்று சொல்ல உடனே சக்கரமும் ஸ்தானம்பண்ணத் தெய்வீகமாகத் தன்னுடைய தோஷந்தீர்ந்து பிரகாசமாய் விளங்கிக்கொண்டு சொல்லும் நானிந்தத் தடாகத்தில் தீர்த்தமாடினபடியினால் இன்றுமுதல்சக்கரதீர்த்தமென்று பெயர் விளங்கிக்கொண்டிருக்கக் கடவதென்று வாக்கு கொடுத்து இந்தத் தீர்த்தத்தில் யார்ஸ்னானம் பண்ணினாலும் அவர்களைப் பிடித்த பிர்மஹத்திகள், ஸ்திரீஹத்திகள், பேய் பிசாசு அலகைகூளி வேதாளங்களெல்லாம் விலகிப்போகக் கடவதென்று வாக்குக் கொடுத்து அந்தப்படியே பேரும்பிரதிஷ்டையும் விளங்கும்படி ஆசீர்வாதஞ்செய்து வாக்குக்கொடுக்கும்படி காலவமகாரிஷியை வேண்டிக்கொண்டு சக்கரமும் வைகுண்டத்துக்குப் போய்விட்டது.

அந்தப்படி உண்டானசக்கரதீர்த்தம் ஆதியிலே தருமபுஸ்கரணியென்று பேர்விளங்கிகொண்டிருந்து அப்பால்சக்கரதீர்த்தமென்றுபேராய்த்தேவிபட்டணத்தில்விளங்கிக்கொண்டிருக்கிறதுஇந்தச்சக்கரதீர்த்தத்தினுடையமகிமை யிப்படியாக்கும் இதற்குசமானமான தீர்த்தம் ஒரு இடத்திலுமில்லை ஆயிரங்கோடி சென்மங்களில் பண்ணின பாவங்களெல்லாமிந்தச் சேதுவிலே உண்டாயிருக்கிறசக்கரதீர்த்தத்தை நினைத்தாலும் விமோசனமாகும்கெங்காநதி மணிகர்னிகை கோதாவரி யமுனை சரஸ்வதி துங்கப்பத்திரி நர்மதை சிந்து காவேரிமுதலாகிய புண்ணியதீர்த்தங்களை ஆடியபலன் இந்தச் சக்கர தீர்த்தங் கொடுத்துக் கொண்டிருக்கிறது யென்று சூதமகா ரிஷி சொல்ல நைமியசாரண்ணியத்து ரிஷிகள் கேட்டு ஆனந்தச்சந்தோஷ ஆச்சரியங்கொண்டு இப்படிக்கொத்த சக்கரதீர்த்தக் கரையில் தபசுபண்ணிக்கொண்டிருந்த காலவமகாரிஷியை யெடுத்துக்கொண்டு போகவந்த ராட்சதன்யார் அவன்னிவரை யெடுக்கவந்து சக்கரத்தினால் மரணமாக வேண்டியடி காரணமென்னவென்று ரிஷிகள் கேழ்க்க சூதமகாமுனிவர் சொல்லுகிறார் யென்றவாறு.

க-வது சக்கரதீர்த்த மகுத்துவம்—முற்றிற்று.

உத்தமன் மருத்துவம்.

விசுவாவசுவென்கிற கந்தருவனுடையமகன் உத்தமனென்பவன்: திருவாலவாய்த்தடாகத்தில் ஜலக்கிரீடைசெய்து நிருவாணமாய்நின்றதற்காகவசிஷ்டராற் சாபம்பெற்றுப், பதினறுவருடம் இராக்கதனய்த் திரிகையில், மேல்விளக்கிய காலவமகாரிஷியை மேல்விளக்கிய இராக்ஷஸனக நின்று தின்ன வெத்தனிக்கும்போது, சொற்ற சக்கரத்தாலிறந்து சாபந்தவிர்ந்து பழையபதியையெய்தியிருக்கிருன்.

விதுவன் மருத்துவம்,

அஷ்டவசுக்களி லொருவனுகிய விதூமனும் தேவநடனமாதராகிய அலம்புஸையும் பிரமாவினுற் சாபம்பெற்று அவ்விதூமனென்பவன் பாண்டுவமிசத்து ஜெனமேஜெயன் மகன் சதாநீசனுக்குஞ் சகஸ்திராநிகனென்னு மகனுய்ப்பிரந்திழிந்தான். அவ்வலம் புசையென்பவள் அயோதிக்கரசனுன கிருதவன்மா வென்பவனுக்கு மிருகாவதியென்கிற புத்திரியாய்ப் பிறந்திருந்தாள். அஞ்ஞான்று அவ்விருவரும் விவாகம் பண்ணிக்கொண்டு வாழுநாளில் திலோத்தமை சபத்தால் கச-வருஷம் பிரிந்திருந்தார்கள். அப்போது கருப்பவதியாயிருந்த அம்மிருகாவதியீன்ற உதயனனென்கிற பிள்ளையுடனும் அம்மிருகாவதி யுடனும் சகஸ்திராநீகனிருந்து நாடாண்டு, புத்திரனுக்குப் பட்டங்மட்டி வைத்துவிட்டு இருவருந் துறவெய்திச்சக்கரதீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து ஜென்மசாபல்யமாகிப் பழையபதியை யெய்தினர்கள்.

தேவிபட்டண மருத்துவம்.

திதியென்பவளின்மகள் மகிஷமுகமாகவிருந்து சுபாரிசமுனியைநோக்கிப் புத்திரப்பேற்றுக்காகத் தவஞ்செய்தாள். அம்முனிவரனுக்கிரகத்தால் அவள்கட்டின்கண் சாபகாரணப்படி வரமுனி

யென்பவர் மகிடாசுரனாய்ப்பிறந்து தேவர்களைத்தொந்தரிக்க நேரிட்டது. அஃதொழிக்கவென்று பரமசிவனானவர் ரௌத்திராகாரமாய்க் கோபப்பட்டவுடனே சகல தேவர்களிடத்திலுமிருந்து கோபாக்கினிகள் தோன்றின. அவைகளை ஒரு பெண்சொரூபமாய் வரும்படி பரமசிவன்நினைத்தார். உடனே அக்கினிவர்ணமாய் மகா கோரரூபமாய்ப் பிரமாண்ட வடிவாய்ச் சிவனுடைய கோபாவேசமே முகமாகவும், விஷ்ணுவினுடையசினச்சுவாலையே கரங்களாகவும், பிரமாவினொளியே பாதங்களாகவும், எமனொளியேஉரோமத்தொகுதியாகவும், சந்திரனொளியே இரண்டு தனங்களாகவும், வருணனொளியே தொடைமுழந்தாள்களாகவும், ஆதபனொளியே கால்நகங்களாகவும், அஷ்டவசுக்களினொளியே கைநகங்களாகவும், பிரகஸ்பதியினொளியே நாசியாகவும், அனற்கடவுளொளியேகண்களாகவும், நவப்பிரமாவினொளியே வெண்ணகைத் தந்தங்களாகவும், ஏனைத்தேவர்களொளி ஏற்ற அவயவங்களாகவும் ஓர்தேவி தோன்றிநின்றனள். அவள்சர்வதேவர்களினாயுதங்களையும், வரப்பிரசாதங்களையும், துர்க்காதேவியென்னும் ஆக்குவயத்தையும், ஈஸ்பரனுடைய வுத்தரவையும்பெற்று மகிடாசுரனோடு யுத்தஞ் செய்கையில், அம்மகிடன் ஆற்றாதோடிச் சக்கரதீர்த்தத்தின்கண் மறைந்தான். அவனைத்தேவி அசரீரிவாக்காற்றெரிந்து, தனதுவாகனமாகிய சிம்மத்தைக்கொண்டு அத்தீர்த்தமுழுவதையுங் கிரகிக்கும்படிச்செய்து, மகிடனைக்கண்டுபிடித்துக்காலால் மிதித்துக்கொண்டு, சூலத்தாற் றொண்டையிற்குத்தி, வாளாற் சிரசையரிந்து கொன்று மகிஷமர்த்தனியெனப் பெயர்பெற்றனள். உடனே அச்சக்கரதீர்த்தக்கரையிற்றானே அத்துர்க்காதேவியைத்தேவர்களெல்லாம் வாழ்த்தித்துதித்து, அத்தீர்த்தத்தினிடமாய்ஆகாயகங்கையைநிரப்பி, யாவரும் ஸ்நானஞ்செய்து, தேவிக்கு ஆலயமுண்டாக்கி, உத்சவ நடாத்தித் தேவிபட்டணமென்று வழங்க வாழ்த்தினார்கள். அதுமுதல் இரக்தநிறவர்னத் துர்க்காதேவியானவள் ஆங்கு வீற்றிருக்கின்றனள்.

அந்தச் சக்கரதீர்த்தத்தில் முழுகினவர்கட்கு "நினைத்தபொருள் சித்திக்குக" என்று அத்தேவி வரமுமளித்திருக்கிறாள்.

உ

கடவுள் துணை.

உ-வது வேதாளதீர்த்த மகுத்துவம்.

காலவமகாரிஷி புத்திரி காந்திமதி யென்பவளைப் புணரவென்று பலாத்காரஞ்செய்த சுதரிசனனென்னுங் கந்தருவனை,அவ்விருடி கண்ணுற்றுத், தசை உதிரம் இவைகளையருந்தி ஸ்திரீகளைப் பலாத்காரஞ்செய்து, அருக்கருடையவும் வேதாளத்துடையவுஞ் செய்கையாகும். ஆகலின், நீசெய்த பலாத்காரத்திற்கு முதலில் மானுடவுருவடைந்து பின்னர் வேதாளமாகுதியென்றும், அவனுடைய சகோதரனாகிய சுகன்னனைநோக்கி நீ! இவன் செய்தவன் செய்கையைத்தடுப்பதின்றிப் பார்த்திருந்ததான்மானிடவுருவாகுதியென்றுஞ்சபித்துத்தன்புத்திரியையழைத்துச்சென்றனர். இருடியிட்ட சாபப்படி யமுனையாற்றங்கரையிலுள்ள கோவிந்தசாமியென்னும் வேதியனுக்குச் சுதரிசனன் விசயதத்தனென்கிற புத்திரனாகவும்சுகன்னன் அசோகத்தனென்கிறபுத்திரனாகவும்பிறந்திருக்கும்போது, அங்குப்பன்னிரண்டாண்டுமழையின்மையாற்பஞ்சநேர்ந்தது. அக்காலம், அக்கோவிந்தசாமியென்னும் வேதியன் மனைவிமக்களுடன் தன்னூரைவிட்டுக்காசிப்பதியையடைந்து,அப்பதிக்கு வடகீழ்த்திசையிற்றபஞ்செய்கிற கபாலமாலாப்ரணனென்னுமுனியை வணங்கிக்கொண்டு, ஒருபாழ்ங்கோவிலையபங்கனமடைந்தனன். அன்றிரவு, தந்தை விசயதத்தனுடனும் தாய் அசோகதத்தனுடனும் நித்திரைபோனார்கள் சிறிது நேரங்கழித்து விசயதத்தனுக்குச் சுரமுங்குளிருமுண்டாயிற்று. அதைத்தணிக்கவென்றுவிசயதத்தன் விரும்பியவாறு தந்தையாகிய வேதியன் நெருப்புக்காக எங்குமலைந்தும் அகாலமானதாற்கிட்டாமல் வந்துசேர்ந்து நெருப்பில்லையென்றான் அதை அம்மைந்தன்கேட்டு, இல்லையென்பதுபொய், அதோவெளிச்சந்தெரிகிறதென்றான்பிதா, அவ்வெளிச்சம்மயாணத்திற் பிணத்தைப்பற்றிக்கொண்டெரிகிற தீ,அங்குச் செல்லத்தூரமும்அச்சமுமாயிருப்பதன்றி,அத்தீயைத்தீண்டினும் ஆயுள்குறையும் அதனாலுதவாதென்றான், மகன்; குளிருக்காற்றாது அங்குச்செல்வேனென்றெழுக, பிதாவுமுடன்சென்று எரிகிற

பிரேதத்தை இருவருமடுத்தார்கள். அங்ஙனம்,விசயதத்தனுக்குக் குளிர்சற்றுநீங்கியபின், அவன்கமலம்போல மிகச்சிவந்தெரிகிற இஃதென்னையென்றான், பிதா, அஃதுமண்டையிற் பற்றிக்கொண்டு விளைந்தெரியுங்கனலென்றான். அப்போதுபுதல்வன், ஒருகாஷ்டத்தால் அம்மண்டையிற்புடைக்க, அதுதகர்ந்துமூளைசிதறி, அவன் முகத்திற்பட்டது. அதையவன்நாவால்நக்கிச் சுவைத்துக்கொண்டு அக்கபாலத்தையெடுத்து, மூளைமுழுவதையும் ஆவலோடு புசித்தவுடன், ஆகாயமளாவியகோரரூபத்தோடு வேதாளமாகிப்பேரொலிமுழக்கினான். அதுகண்டபிதா கோவிந்தசாமி, அஞ்சித் தனது பத்தினியும் மற்றொரு புத்திரனுமிருக்கிற இடத்தைக்குறுகி விசனித்திருந்தனன். வேதாளமாய்ச் சென்றவன், கபாலத்தைத் தகர்த்த காரணத்தாற் கபாலபோடகனென்கிற நாமம்பெற்றுப் பூதவேதாளங்களுக்கு அரசனான நராஸ்தி பூஷணனுடையசேனைகட்குச்சேனைத்தலைவனாயிருந்துதித்திரசேனனென்கிறவீரனால் அந்த நராஸ்திபூஷணன் மாண்டபின் அச்சேனைகளுக்குத்தானே அரசனாயிருந்தான் சின்னாட்சென்று அசோகதத்தனுக்கும் அப்பெரிய வேதாளத்திற்கும் ஒரு தாமரைத் தடாகத்தின் மூலம் போர் விளைந்தது, அங்ஙனம் வேதாளவரசன் சைதன்னிய முழுதுமடிந்தவுடன் அசோகதத்தன் வேதாளத்தைக்கொல்லவெனவலி மீக்கொண்டெழும்போது விக்கினத்திகவுத்துகன் வந்து "கொல்லாதே அவனுனது தமயன்"என்று வரலாறுகூறியவுடன்அசோகதத்தன் சாபநீங்கிப் பழைய சுகன்னனானான். அந்தவிக்கினத்திகவுத்துகன்கூறியவாறுகபாலபோடகன்சேதுமார்க்கத்திலுள்ளஒரு புண்ணிய தீர்த்தத்தின்கரையை யடைந்தபோழ்துவாயுவினியகத்தால் அத்தீர்த்தத்தினின்றும் ஒருதிவலை யெழுந்துஅவனுடம்பிற் படவிசயதத்தனாகிய பிராமணனுருவடைந்தான். அங்ஙனஞ்சங்கற்பஞ் செய்துகொண்டுஅத்தடாகத்தின்மண் இவன்முழுகப்புராதன சுதரிசனனென்கிறகந்தருவனாகித் தனதுசகோதரனுடன்கந்தருவலோகத்தையடைந்தான் அதுமுதலதற்கு வேதாளதீர்த்தமெனப் பெயர்விளங்கிற்று. அந்தத்தீர்த்தத்திற்கு உத்தரபாகத்திலுள்ள ஓர்சத்திசன்னிதானத்தைத்தில்லைவனநாயகிஆதலயமெனஇப்பொழுதுசொல்லப்படும். விளங்கியவேதாளதீர்த்தம் மேற்சொற்றகந்தமாதனகிரியின் வடசாரலி லிருக்கிறதெனப் புராணம் புகல்கின்றது. கந்தமாதனம் யேதுபந்தனத்தாற் சமதளப் பட்டுவிட்டது

பற்றி அதுஉந்நதமாகத் தோன்றத்தக்கதில்லை. அந்தச்சேதுபந்தனத்தையுந் தென் சமுத்திர மலசிக் கொண்டுவந்து சமுத்திரமாயிருக்கின்றது. இராமலிங்கத்திற்கு வாயுமூலைப்பக்கமா யிப்போதிருக்கின்ற கந்தமாதனமென்னு மணற்குன்று புராணத்திற்சொல்லப்படுகிற கந்தமாதனமன்று.

௩-வது பாவவிநாச தீர்த்தமகுத்துவம்.

திடமதியென்கிற ஒருசூத்திரனுக்குச் சுமதியென்கிற ஓர்பிரமச்சாரிப் பிராமணன் பிராமணகிருத்தியமாகிய வேள்விமுதலியவைகட்குரிய மந்திரோபதேசங்களைத் கற்பித்ததனால், அங்ஙனம் இருவிருக்கு முண்டாய கொடும்பவங்கணிமித்தம்; அனந்தஜன்மம் பிறந்திறந்து நரகங்களை யனுபவித்துக்கடாசியில் அப்பிராமணன் பிராமணப்பிறவிபிறந்து பேய்பிடித்தலைகையில், அகஸ்தியருத்தாரப்படி மேற்சொன்ன வேதாளதீர்த்தத்திற்குக் கிழக்கேயுள்ளபாவநாசமென்கிற ஓர் புண்ணியதீர்த்தத்தில் முழுகிப் பாவந்தொலைத்தனன், மேற்படி திடமதியென்னும் சூத்திரன். இறுதியிற் கழுகாய்பிறந்து பிணங்களைத்தின்று மேற்படி தீர்த்தத்தின் ஜலத்தைக் குடித்தும் அதனுழைமூழ்கியும் நின்றதினால் அது அவனுக்குஜன்மசாபல்யத்தைத்தந்து தேவபோகத்தையுங் கொடுத்தது. அத்தீர்த்தம் சேதுமார்க்கத்திலுள அஃதிருக்கிற ஊரை இப்பொழுது வெற்றிலைமண்டபமெனச் சொல்லப்படும்.

௪-வது சீதாகுண்ட தீர்த்தமகுத்துவம்,

விந்தாரணியத்திலிருந்த திரிவக்கிரனென்னும் இராக்ஷஸன் மனைவி சுசீலைக்கும், சுசி மகாரிஷிக்கும் புத்திரனாய்ப்பிறந்து, வைசயந்தமென்னும் பட்டணத்திலிருந்த கபாலபரணனென்கிறராக்ஷசனை, இந்திரன் வஜ்ராயுதத்தால் வெட்டிக்கொன்றுவிட்டார். அவனுடைய பிரமஹத்தியை, ஆகண்டலன், அயனுத்தரவுப்படி பாவநாசத்திற்குப் பூர்வதிக்கிலுள்ள சீதாதீர்த்தக்கரையிற்சிவனைநோக்

கி வேள்விசெய்து வணங்கியும், அத்தீர்த்தத்தில் மூழ்கியுந் தீர்த் துக்கொண்டார். அத்தீர்த்தமானது இலங்கேசனெடுத்துச்சென்ற சீதாதேவியின் கற்புநிலைமையை வெளிப்படுத்தும்பொருட்டுஇரா மராக்கியாபித்தப்படி சீதாபிராட்டியார் அக்கினிப்பிரவேசமான விடமாம், அதைச்சீதாகுண்டமெனப்படும். அப்படிஅக்கினிப்பிர வேசமானபின் அப்பிராட்டியார் ஸ்நானஞ்செய்வதற்கு நிருமித்த தீர்த்தம் அதுவாகும்.

ரு-வது மங்கலதீர்த்த மருத்துவம்.

சந்திரகுலத்து விக்கிரமாட்டியனுடைய புத்திரனன மனோ சவர்ராஜனும், அவன் பத்தினி சுமித்திரையும், மகன் சந்திரகாந்த னும், நீதியாயரசாண்டு வருங்கால், அரசன்பிராரத்தப்படி கொடு ங்கோன் மன்னனானன். அப்போது ஊணதேசத்துக் கோலபனெ ன்கிற இராஜா அவ்வரசனுடைய நாட்டை யபகரித்துக்கொண் டான். உடனே மனோசவன் குடும்பியாகிய பாரியுடனும் மைந்த னுடனுங் கானெய்தி அங்கு பட்டினிகிடத்தலினாலும் புத்திரவா ஞ்சையினாலும் மூர்ச்சித்துக்கிடந்தான். அதுகண்டு பெண்டீரும் பிள்ளையும் அதிகம்பலையுற்றார்கள். அஞ்ஞான்றுபராசரிஷி தண்டு கமண்டல தாரியாய் அவர்தோன்றினர். அவரிடம் அவர்கள்விண் ணப்பித்துக் கொண்டதற்கிரங்கி அவ்விருடி சொன்னவண்ணம் அம்மனோசவன் சேதுமார்க்கத்திற் சீதாகுண்டத்திற்கருகிலுள்ள தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து மூன்றுமாதம்வரை சிராத்த நடா த்தி முனியுபதேசித்த மந்திரத்தைஜெபித்தான். அதன்மேல் அவ ன் இரந்த துரகமுதலிய வாகனதிகளும், ஆயுதம் ஆபரணம் ஆ டைமுதலியவைகளும் அந்தத்தீர்த்தத்தில் ஒவ்வொன்றாய்மிதந்து வர அவைகளை யொப்புக்கொண்டு அங்ஙனம்பராசரிஷியால் ஆசி ர்வதித்து முடிசூட்டப்பெற்றுத் தன்னாடுசென்று கோலபனை யெ திர்த்து ஜெயித்துத் தானரசனாயிருந்து செங்கோல் செலுத்தி ஞன். அப்பால் தன்குரிசிலுக்குப்பட்டத்தை நல்கிவிட்டு மேற்படி தீர்த்தக்கரை யருகிருந்து தவம்புரிந்து தேகமூழியவுடன் பரம சிவனின் பதியையடைந்தான். உடனே அவன்பத்தினி சுமித்தி

ரையென்பாள் தன்னுடைய மங்கலத்துடன் சககமனஞ்செய்து பதியை யெய்தினள். அஃது மங்கலதீர்த்தமெனப் பெயர் விளங் கப்பெற்றுச் சேதுமார்க்கத்தி லிருக்கின்றது.

சு-வது அமுததீர்த்த மகுத்துவம்.

அகஸ்தியர்சகோதரரான நாரணமகாரிஷியென்பவர் ஹிமா சலச் சார்பில் பரமனைநோக்கி அடியார் தொண்டும் சிவபூஜையும் ஆயிரமாண்டு நடாத்தியும் முத்திகிடையாததுபற்றி மீட்டு மகா யிரமாண்டு பஞ்சாக்கினி மத்தியிற் றபமிருந்தார். அப்போது பர மசிவன் தரிசனங்கொடுத்து "நீ! சேதுவிலுள்ள அமுததீர்த்தத் தில் முழுகி முத்தியைப்பெற்றுக்கொள்" என்றுத்தரவளித்தபடி அவர் மங்கலதீர்த்தத்திற்குக் கிழக்கிலுள்ள ஏகாந்தராம ஸ்தலத் தின்கண் அமுததீர்த்தத்தில் மூன்று வற்சரம்வரைமுழுகிச் சமா திகூடிப் பிரம்மசொரூபத்தையறிந்து மோக்கம்பெற்றார். [அமு தம்-மோக்கம்.]

ஏகாந்தராமசுவாமிகோவில்மகுத்துவம்.

ஏகாந்தராமமென்னும் ஸ்தலமானது ஸ்ரீராமரானவர், இலட் சுமணர், விபீஷணர், அனுமான், சுக்கிரீவன் முதலானவர்களுடன் இலங்கைக்குச்செல்லும் விஷயத்தைக்குறித்து ஏகாந்தமாயிருந்து இரகசியம்பேசிய விடமாகும். அப்படிப் பேசும்போது, சமுத்திர கோஷ்டம் பேச்சை மறைத்ததால், அந்நேரம் காகுத்தன்கைக் கோதண்டங்கொண்டுவடகடலிலூன்றி அவ்வொலியையடக்கினர் அதுபோல இன்றுமவ்விடத்திற் கடலொலியடக்கமாகவிருக்கின்ற தன்றே வடகடலென்றது, சேதுவென்னுந் திருவணைக்கு உத்தர பாகத்துள்ள கடலெனக்கொள்க! இந்தவடகடலில் எந்நாளும் நன் னீர்க்குமிழிகள் ஓரிடத்திலெழும்புகின்றன; அதை வில்லூன்றி யென்று ஜனங்கள் சொல்லுகிறார்கள்.

எ-வது பிரமகுண்ட தீர்த்த மகுத்துவம்.

பிரமாவும் விஷ்ணுவும் சண்டையிட்ட காலத்தில், ஜோதி லிங்கமாய்த்தோன்றிய அக்கினிசயிலத்தி னுச்சியையறிந்ததாய்ச் சொன்ன பிரமதேவனுடைய பொய்யைக்குறித்து, உலகின்கண் ணுனக்கும் பூஜையும் ஆலயமு மில்லாமற்போகக் கடவதென்று சிவபெருமான் சபித்த சாபத்தை யொழிக்கவென்று, வந்தித்துக் கெஞ்சிக் கேட்டுக்கொண்ட பிரமாவுக்குப் பரமன் பகர்ந்தபடி, அவர் கந்தமாதனகிரியில் சேதுவில்பௌண்டிரகமுதற் பலயாகங் களியற்றி முடித்துத் தேவர்களுக்குப் பூரணுகுதி கொடுத்துப் பொய்புகன்ற தோஷமுந்தொலைத்துப் பரமசிவனுனல்கிய வரப் பிரசாதமும்பெற்றூர். அப்படிப்பட்ட வேள்விக்குண்டத்துழிப் பூரணுகுதிசெய்ததானிரம்பியஜலத்தினிடை "ஸ்நானஞ்செய்தும் அதிலுண்டாகும் வெண்மிருத்திகையைத் தரித்தும் வருபவர்கட் கனேக புண்யங்களுண்டென்றும் இது பிரமகுண்டமெனப்பெயர் விளங்குமென்றும்" ஈஸ்வரன் திருவாக்கருளினராகும். அதைத் தான் பிரமகுண்டமெனப்பேசுவது. அஃது கூறிய அமுததீர்த்தத் திற்குக் கிழக்கே இராமேசர் பதியிலிருக்கின்றது.

அ-வது அனுமகுண்ட

தீர்த்த மகுத்துவம்.

இராவணனைக் கொன்றதாற் சம்பவித்தபிரமஹத்தியை, ஸ்ரீ ராமரானவர் தண்டகாரண்ய முநிவர்களுத்தாரப்படி சிவபூசை பண்ணித்தீர்ப்பதற்காகக் கந்தமாதனத்திலிருந்துகொண்டு, ஆஞ்ச னேயரைச் சிவலிங்கமெடுத்துவரும்படி யனுப்பியதில்; அவர் வரு வதற்குத் தாமதப்பட்டது கண்டு ஆனிமாசம், சுக்கிலபக்ஷம், புத வாரம் ஹஸ்த நக்ஷத்திரம், தசமிதிதி, விதிபாதயோகம், ரிஷப லக்னம் இவைகள்கூடிய உஷற்காலமாகிய சூரியோதயத்தில் சீதா

தேவி திருக்கரத்தான் மணல் கூட்டிப்பிடித்த பார்த்திபலிங்கத்தையே, அவ்விராகவன் சிவசின்னங்களையணிந்துகொண்டு தந்திரக்கிரமப்பிரகாரம் பூஜைசெய்து பிரசன்ன ஈச்சுர தரிசனங்கண்டு வேண்டியவரங்களும் பெற்றுக்கொண்டனர். உடனே, பகவானுகியபரமசிவனும் காகுத்தனைநோக்கி "உன்னால் ஸ்தாபிக்கப்பட்ட இலிங்கத்தைத் தரிசித்துளோர் பாவநீங்கிப் பரகதிபெறுவர்,இது சத்தியம்" என்றருளிச்செய்து இலிங்கத்தினிடமாய்மறைந்துபோனுர். தேவர்களும் முனிவர்களும்தனித்தனி இலிங்கங்களை அங்கு ஸ்தாபித்தனர். அப்பால்நருமதா நதிக்கரைக்குச்சென்று வெள்ளிமலையானருளால் இரண்டு காசிலிங்கங்கொணர்ந்த மாருதி மனவிதனங்கொண்டிருப்பதற்காக, இராகவன் ஆஞ்சனேயனுேக்கப்படி "இராமலிங்கத்தைப் பிடுங்கிவிட்டு நீ! கொடுவந்தலிங்கத்தைஸ்தாபிக்கக் கூடுமாயின் அவ்வணஞ்செய்" என்முர். அது கேட்ட மாருதி, மிகவு நல்லகாரியமென்று விஸ்வரூபங் கொண்டெழுந்து, தனதுவாலே இராமலிங்கத்தின்கண் மூன்றுசுற்றுச்சுற்றி யுன்னிக் கிளம்பியபோது, வாலறுப்புண்டு வடபாற் கூப்பிடுதொலையிற்குப் புறப்பாய்ந்து அவயவங்கள் சேதப்பட்டிரத்தப் பெருக்கெடுத்தோட மூர்ச்சித்துக்கிடங்குங்கால், மாருதியைச்சீதாதேவியாரும் இராமபத்திரரும் வந்தெடுத்துத்தேற்றித்தெளிவித்து, அனுமான் விழுந்த பள்ளத்தை அனுமகுண்டமெனுந் தீர்த்தமாயேற்படுத்தி "இதன் ஸ்நானத்தாற் குழந்தைகள் பிணிபகலும் புத்திரசம்பத்துண்டாகும் சரசுவதி, கங்கை, யமுனை முதலிய் நதிகளிலாடிய பலனுமுண்டாகும்" என வரமருளினுர். அதுவே பிரமகுண்டத்திற் கருகிலுள்ள அனுமகுண்டம்.

ஸ்ரீராமர் சம்மதப்படி இராமலிங்கத்திற்கு உத்திரபாகத்தில் ஆஞ்சனேயர் தான்கொடுவந்த இலிங்கங்களிலொன்றை ஸ்தாபித்து அதெற்கென்றும் முதற்பூஜை நடக்கும்படி செய்துகொண்டனர். ஒன்றை அவர் ஆத்மார்த்தமாய்ப்பூஜித்தார். இராமலிங்கத்தில் அனுமான் வால் மூன்றுசுற்ருய் விழுந்தவாறு மூன்றுவரைகளுமிருக்கின்றனவாம்.

கேகயதேசத்தரசனுகிய தருமசகனென்பான், தனதுபத்தினிமார்கள் நூறுபெயர்களுடனும் அனுமகுண்டத்தில் ஸ்நானம்

பண்ணிப், புத்திரகாமேஷ்டியாகஞ்செய்து, யாகத்தின் பிண்ட சேஷத்தை நூறுபத்தினிகளுக்குங் கொடுத்து நூறுபிள்ளைகளைப் பெற்று, மூந்திய குமாரனான சந்திரனுடன் இராச்சியமாண்டு பின்னும் அனுமகுண்டக்கரையிலேயே தவமிருந்து நற்கதிசேர்ந் தான். அவன்மனைவிகளு மவ்வழித்தானே அக்கினிப்பிரவேசமாகி அவனடைந்தபதி யுரைந்தார்கள்.

௬-வது அகஸ்தியதீர்த்த மகுத்துவம்.

விந்தகிரியை அடக்குவதற்காகத்தேவன் அகஸ்தியரையனுப் பும்போது, அவர் சிவபெருமானின் திருமணத்தரிசனம் பாராது யான் போவதுண்டோவென்றார். அதற்குக்கர்த்தன் உனக்குவே தாரண்யமென்னுந் தலத்தில் அந்தத்தரிசனங்கொடுக்குமென்ற தற்கிசைந்து சென்ற அவ்வகஸ்தியர் விந்தகிரியைத் தரைமட்ட மாயடக்கித் தென்றிசைநோக்கிவந்து கந்தமாதனத்தின்கண் ணெ ழுந்தருளியிருந்தார். அப்போதவ்விடத்திற்றானே அவர் ஓர் தீர்த் தமுண்டுசெய்து அதில் ஸ்நாநம்பண்ணிச் சிறிதுநாட் டவமியற்றி இறுதியிலதற் கனேகமகிமைகளுண்டாக வரப்பிரசாதம்வழங்கிப் பொதிகைக்குப்போயினர். அதுதான் அனுமகுண்டத்திற்குக்கிழ க்கே அக்கினிமூலைப் பாரிசமாய் அகஸ்திய தீர்த்தமெனப் பெயர் விளங்கிக் கொண்டிருக்கின்றது.

வேதாரண்யத்திலுள்ள தீர்க்கதருமனென்கிற பிராமணனுக் குக் கக்கீவானென்கிற புத்திரனொருவனுளன். அவன் சிலசாஸ்தி ரங்கள் கற்றுக்கொள்ளவேண்டுமென உதங்கமுனிவரிடம் அறுப தாண்டுவரையிருந்து, கற்றுக்கொண்டு குருவை வணங்கிச்சுவாமீ தங்கள் கிருபையால் யாவுங் கற்றுணர்ந்தேன், இனி ஒரு கன்னி கையைக்கூடி இல்லறநடாத்த வனுக்கிரகஞ் செய்யவேண்டுமென் றான். அதற்கவ்வுதங்கர் சொன்னவாறே, அந்தப்பிராமணன் அக ஸ்தியர்தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து, அவ்விடத்திற்றானேமூன்று வருடம்வரை நிஷ்டைசாதித்திருந்தனன். ஓர்நாள் அவனெதிராக அத்தீர்த்தத்துக்குள்ளிருந்து நான்கு கோடை ஐராவதம் வெளி யேவந்தது. அதன்மேல் அவனேறிக்கொண்டு நடந்தான். அதை

மதுராபுரிக்கரசனுகிய சுவநயனென்பவன் கண்டு அவ்வேதியனை யழைத்துக்கொண்டு அகஸ்தியர்தீர்த்தக்கரைவந்துசேர்ந்துதனது புத்திரியாகிய புண்யவதியென்பவளைத்தருவித்து அவனுக்குப்பாணிக்கிரகணஞ் செய்துகொடுத்தான். அப்பால் சுக்கிவான்முதலிய யாவரும் அந்தத்தீர்த்தத்தில்மூழ்கி அக்கரையைவிட்டு நீங்கித்தங்கள் தங்களூர்போய்ச் சேர்ந்தார்கள். வெள்ளையானையும் அத்தீர்த்தத்தில்மூழ்கி மறைந்துவிட்டது.

௧௦-வது இராமதீர்த்த மகத்துவம்.

ஸ்ரீராமர் ராமலிங்கப்பிரதிஷ்டைசெய்து ஆலய நிருமித்து ஆங்காங்குரிய தேவதைகளை ஸ்தாபனஞ்செய்து, வேதியர்களையழைத்துப் பட்டின மூண்டுபண்ணி, அவர்கட்காய வயலுடைக் கிராமங்களுந் திரவியமுங்கொடுத்து, இராமலிங்காரச்சனைக்காய பொருள்களும் பூமிகளும் ஆபரணுதிகளும் நறியகோக்களும் யானைகளும் நல்கி அயோத்தியாபுரிக் கெழுந்தருளும்போது தம்பேரால் ஒருதீர்த்தமுண்டாக்கி அதில் வானராதிகணங்களுடன் தாமும் ஸ்நானம்பண்ணி அந்தத் தீர்த்தத்திற்கு வேண்டிய மகிமையும் வரப்பிரசாதமுமுண்டாகுகவென்று கடாக்ஷித்தார். அதற்கு இப்பொழுது இராமீசர்பதியில் இராமதீர்த்தமெனப் பெயர் விளங்காநிற்கும்.

சுதீக்கிணனென்கிற பிராமணன் அந்த இராமதீர்த்தக் கரையில் விஷ்ணுவைநோக்கித் தபமிருந்து அதில்ஸ்நானம் பண்ணியும் இராம மந்திரத்தையே ஜெபித்தும் குருபதேசமின்றி ஸ்ரீராமரையே குருவாகத் தியானித்தும் கடைசியில் சர்வசித்தியும் பொருந்தி ஸ்தூலவடிவத்துடன் தேவலோகமுதலிய பதிகட்கெல்லாஞ் சென்று தேவர்களுடன் கூடிவாழ்ந்து வேண்டிய சிறப்புப் பெறலானுன். இன்னமும் பாண்டவசிரேஷ்டனுன தருமராஜன் பாரதச்சமரில் அசுவத்தாமாவென்னும் யானை யிறக்கத் துரோணபுத்திரனுன அசுவத்தாம னிறந்தானென்பது போலத் திட்டாந்தரஞ் சொன்னதுகேட்டுப் புத்திரசோபத்தால் தழுவணையிற்சாய்ந்திருக்கிற துரோணுசாரியைத் திருஷ்டத்துய்மன் பாணப்பிரயோக

ஞ்செய்து தலையையறுத்த காரணத்தால்உதிஷ்டிரனுக்குற்றதோஷத்தைப் பரிகரித்துப் பட்டாபிஷேகஞ் செய்யவேண்டுமென்று ஆகாயவாணி சாற்றியபடிவேதவியாசர் சம்மதப்பிரகாரம் தௌமியாசாரியுடன் தருமராஜன்முதலியோர் இராமதீர்த்தக்கரையையடைந்து அதில் ஒரு திங்கள்வரை ஸ்நானம்பண்ணிப் பலதானங்கள்வழங்கி இராமலிங்க தரிசனமுஞ் செய்தார்கள். அப்போது துரோணரிறந்ததானேரிட்டதோஷந்தொலைந்ததாகஆகாயவாணி சொல்லக்கேட்டு அஸ்தினுபுரிசேர்ந்து உதிஷ்டிரர் பட்டாபிஷேகம்பெற் றுய்ந்திருந்தார். அக்காலம் அஸ்தினுபுரியைக் காத்திருந்தவன் சகாதேவனுவான்.

௧௧-வது இலட்சுமண தீர்த்த மகுத்துவம்.

இலக்ஷுமணரானவர்: இந்திரஜித்துவைவதைத்ததோஷ நீங்கவென்று தம்பேரால் சிவலிங்கப்பிரதிஷ்டையொன்று கந்தமாதனத்தின்கண் செய்தார். அது: இராமலிங்கப் பிரதிஷ்டைக்கும், இராமதீர்த்தத்திற்கும் பச்சிமபாகத்திருக்கின்றது. அதனருகில் தம்பேரால் இலக்ஷுமணதீர்த்தமென வொன்றுண்டாக்கி, அதில் ஸ்நானஞ்செய்து, சிவதரிசனம்பண்ணித்தந்நோக்கத்தைநிறைவேற்றிக்கொண்டார். நைமிசாரண்யத்திற்கு வந்த பலபத்திராமர், அவணுறுமுனிவர்கட்குப் புராணசாரங்களைப் புகன்றுகொண்டிருந்த சூதமாமுனிவர் தனக்குக் கீழ்ப்படிய வில்லையென் றகங்காரங்கொண்டு சூதகரைக் கொன்றுவிட்டார். அந்நேரம் முனிவர்கள்வேண்டுகோட்படி அப்பலபத்திரர்சூதகரைத்தபோபலத்தாலுயிர்த்தெழும்படி செய்து•ஆங்கியற்று முனிவர் யாகாதிகிருத்தியங்களுக் கிடையூறுண்டு செயும் வற்கலாசுரனைத்தம்மிடமுள்ளகலப்பையாயுதத்தான் மாட்டிவதைத்துத் தீர்த்தயாத்திரைகள்செய்தார் அதிலுந் தாம்வதைத்த அசுரவேதியனுடைய பிரமஹத்திசரிவரநீங்காமல் எதிரில்வந்துவந்து தோன்றி நிற்பதுகண்டுகவலையுற்று மகரிஷிகள் சொன்னவாறு இலக்ஷுமணதீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்துவேண்டித் தானதருமங்கள்வழங்கி இலக்ஷுமணேச்வரரை வழிபட்டு வாழ்த்தித்தற்பின்பிரமஹத்தி விலகிவிட்டதெ

ன்றுகாயவாக்குப் பிறந்தது. அப்பால்பலபத்திரர் சேதுதனுக்கோடிமுதலிய தீர்த்தங்களாடி இராமீசர்தரிசனமுங்கண்டு துவாரகைக்குப் போயினர்.

கஉ-வது ஜடாமகுட தீர்த்தமகுத்துவம்.

ஸ்ரீராமர் லக்ஷ்மணர் இருவரும் தங்கள் ஜடாமகுடத்தின்கண் ராவணாதி ராக்ஷதர்களுடைய ரக்தம் படிந்திருக்குமென்பதை யுத்தேசித்து ஜடைகளைக் கழுவுவதற்காக ஓர் தடாகமுண்டுபண்ணி அதில் அந்தப்படி சுத்திசெய்து கொண்டார்கள். அதையே ஜடாதீர்த்தமென்று சொல்லப்படும். அதில் வியாசர்குமாரர் சுகரென்பவர், அகண்டபரிபூரண சச்சிதாநந்த சொரூபஞானதரிசனமுண்டாவதற்கு அந்தக்கரஞ் சுத்தப்படாதிருந்தது குறித்துத் தந்தையாகிய வியாசரிடந் தெரிவித்துக்கொண்டார். அதற்கவர் நிகழ்த்தியபடி, சுகமுனிவர் ஜடாதீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து கரணசுத்த விஸ்ராந்தியை யெய்தினர். இன்னமும், வருணராஜபுத்திரனான பிருகுமாமுனியென்பவரும் தூர்வாசமகாரிஷியும் தத்தாத்திரேயரும் அதில் ஸ்நானம்பண்ணியும் அவ்வுழித்தவமிழைத்தும் அனேகமகிமை எய்தினர்கள். அந்தத்தீர்த்தம் ஸ்ரீராமலிங்கமூர்த்திக்கு வலப்பாரிசமாய் ஒன்றரைக் கடிகைவழி தூரத்திலுளது.

கங-வது ஸ்ரீஇலட்சுமி தீர்த்தமகுத்துவம்.

ஓர்காலத்தில் மகாவிஷ்ணுவை மகாலட்சுமியானவள் விட்டுப்பிரிந்து கந்தமாதனகிரிச் சார்பிலே விளங்கிய மகரிஷிக்கண்மூலம் ஓர் பன்னகசாலை யியற்றிக்கொண்டு நாரதர்வாக்கியப்படி சிவலிங்கப் பிரதிஷ்டைசெய்து தன்பேரால் ஒரு தடாகமுண்டுபண்ணித் தவமிழைத்திருந்தாள். அப்போது ஹரியானவர் இலக்குமிதேவியைக் காணமற்றேடிக் கந்தமாதனத்திற்கண்டு நல்லசமாதானங்கள் பணிந்து அவளைத் தமதுபதிக் கழைத்துக்கொண்டு போம்போது அம்மஹாலட்சுமியானவள் அந்தத்தீர்த்தத்திற்கு மாண்புறுவரங்க ளளித்துப்போயினள். அதனுன்மகத்துவமாய் விளங்

கிய அந்தத்தடாகத்திற்கு இலட்சுமிதீர்த்தமெனும் பெயருண்டாயிற்று.

இதில் தருமராஜனைவர் தம்பிமார்களுடன் கிருஷ்ணபகவான் உத்தரவுப்படி ஒருமாதமளவுந் தங்கியிருந்து ஸ்நானம்பண்ணி உபவாசமுதலியவிரதங்களிருந்து திருமகளைக்குறித்துப்பக்தியாய்த் தவமியற்றி மற்றுமுள சேதுதனுக்கோடியாதி தீர்த்தங்களாடி இராமபிரானாகிய இராமநாத சுவாமியைத்தரிசித்துஇந்திரப்பிரஸ்தம் போய்ச்சேர்ந்து தங்களுடைய தந்தையாகிய பாண்டுமகாராஜாவைத் தேவேந்திரசபைக் குரிமைப்பட்டிருக்க ராஜசூயயாகஞ்செய்யப் பாண்டுசொன்னதென நாரதர்நவின்றவாறு தம்பியரைக்கொண்டு திக்குவிஜயஞ்செய்வித்துத் தாம்மூழ்கியதீர்த்தமகுத்துவதபோபலத்தால் வேண்டியதிரவியங்களைச் சுவாதீனமாமாகக்கொண்டு ருசு0-நாளும் யாகத்தை நிறைவேற்றிப் பூரணாகுதிகொடுத்துச் சம்ராட்டெனப் பெயர்பெறலானார். இலட்சுமி தீர்த்தத்தில் மூழ்கிய பலனால் தேவர்கள் கற்பக நிழலையும், குபேரன் நவநிதியையும், நளகூபரன் அரம்பையின் இன்பநலத்தையு மடைந்ததுண்டென்று தருமராஜனுக்குக் கிருஷ்ணமூர்த்திசொல்லினர். இத்தீர்த்தம் இராமீசருக் கெதிரிலுளது.

கச-வது அக்கினிதீர்த்த மகுத்துவம்.

சீதாபிராட்டியாரின் கற்பைப்பரிட்சித்தவனும் செவந்தமேனிவக்கிரதந்தம் ஏழும் இவைகளையுடைத்தானுவனுமானஅக்கினிதேவன் சமுத்திரஸ்நானம் பண்ணிவந்து ஸ்ரீராமரைத் தரிசித்தகாலை அவர் "அக்கினி பகவானே! நீர் முழுகிய சமுத்திரஸ்நானத்திற்கு அக்கினிதீர்த்தமெனப் பெயர்விளங்கும், அதில் ஸ்நானம் பண்ணுகிறவர்களுடைய பாவங்கள் தீரும் ஸ்திரீகள் கற்புடையவர்களாவார்கள், பரிசுத்தமாகிக் குழந்தைகளைப் பெறுவார்கள், பூதப்பிரேத பைசாசங்களாலும்" என்பதாய் வரங்களை அத்தீர்த்தத்திற்குக் கொடுத்திருக்கிறார். பாடலிபுத்திரமென்னும் பட்டணத்திற் பசுமானென்றொரு வைசியனுக்குள்ள எட்டுப்பிள்ளைக

ளில் துட்பண்ணி யென்கிறவன் பாடலிபுத்திரத்திலுள்ள சிறுவர் களையெல்லாம் விளையாடவென் றழைத்துக்கொண்டுபோய் ஊருக் கிரண்டு மூன்று கடிகைவழிதூரத்துள்ள கிணறு, ஆறு, தடாகங் களில் அமிழ்த்தியமிழ்த்திக் கொன்றுகொண்டேவந்தான். அவன் ஒருநாள் ஒருதடாகத்தில், தாமரைப்பூக் கொய்யவென்று ஐந்து குழந்தைகளை அழைத்துப்போய் அதேவிதஞ்செய்து ஊருக்குவந் தபின்னர் அமிழ்ந்திய பிள்ளைக ளாயுள்விருத்தியாலெழுந்துவந்து வினாவினர்கட்கு நடந்தசங்கதியை நவின்றார்கள். அதுபற்றி அவ் வூரரச னுண்மையுணர்ந்து, தனது விகதனை பசுமான்செட்டி யையும் அவன்மகன் துட்பண்ணியனையு மழைத்துப்பசுமான் சம் மதப்படிப் பிள்ளைக் கொலைகாரனாகிய துட்பண்ணியனைப் பட்டி னத்திற்குப் புறம்பாய் வெகுதூரத்திலுள்ள காட்டிற்றுரத்துக, இனி நாட்டி லிவன் வரக்கூடாது என்று கட்டளையிடப்பட் டவ் விதந் துரத்தப்பட்டான். அப்படித் துரத்தப்பட்டேகிய துட்ப ண்ணியன், அவனுள் ஓர் இருடிகுமாரனை குளத்துச்சேற்று ளமி ழ்த்திக் கொலைசெய்ததைத்தெரிந்த அவ்விருடி நீ ! எமது பிள்ளை யைக் கொன்றமையாற் பேயாயலையக்கடவாயெனச் சபித்தார். அப்பாலவன் அவ்வடவியின்க ணுண்டாய் ஊழிமாருதத்தாலும் மழையாலும் மிகவருந்தி ஆகாரங்கிட்டாமற் செத்தகளிற்றின் வாய்வழிநுழைந்து அவற்றைப் பீறிக்கொண்டு வெளிவந்து மீட் டும் நரியைப்போ லதிலிருந்தான். புனகம்பெருவெள்ளத்தா லுரு ட்டப்பட்டெடுபட்டுயிர்பிரிந்து அலகையாகி அனேக கற்பகாலம் ஆகாரமிலா துழன்றழுதுதிரிந்தான். அப்போதுபொதிகைக்குறு முனிவரானவர் தண்டகாரணியத்திலிருந்தார். அவரையவன்கண் டு வணங்கித் தன்வரலாறு கூறினன். அதுகண்ட அகஸ்தியர் இவ ன் துன்பத்தைத் தீர்க்குமுபாயஞ் செய்வாமென்றெண்ணித் தம து சீடர்களிற் சுதீக்கிணனென்பவரை விளித்து "நீ ! இவனுக்கா கச் சேதுமத்தியிலுள்ள அக்கினிதீர்த்தத்தில் ஸ்நானம்பண்ணி இவன் வருதி" என்றனுப்பியபடி சுதிக்கிணனென்பவர் சென்று தினமூன்று சங்கற்பஞ்செய்து ஸ்நானம்பண்ணி இராமநாதசுவா மியைத் தரிசித்து அவ்வக்கினிதீர்த்தங் கொண்டுவந்து பைசாச மாயிருக்கிற துட்பண்ணியன் சென்னியிற் புரோட்சித்தனர். உட னே அவன் பைசாசரூபமொழிந்து தேவரூபம்பெற்று அகஸ்திய ரை வணங்கிக்கொண்டபின்னர் தேவலோகத்திற் இரதத்தின்மீ

தெடுக்கப்பட்டான். அந்த அக்கினிதீர்த்தம் இப்போது இராமீசர் சன்னிதானத்திற் கெதிரில் சமுத்திரக்கரையா யிருந்துகொண்டிருக்கிறது.

கரு-வது சக்கரதீர்த்தமாகிய முனிதீர்த்த மகுத்துவம்.

முன்னொருநாளில் அகிற்புத்தநீய ரென்றொரு முனிவருளர். அவர் விஷ்ணுவைக் குறித்துத் தவம்புரிந்து சுதரிசனமாகிய சக்கரத்தைத் தானியற்றுந் தவத்திற் கிடையூறில்லாதிருக்கக் காத்திருக்கவேண்டுமென வரமேற்றுக்கொண்டு கந்தமாதனத்தில் தபமியற்றும் வேலை, அசுராதிகளைமடித்து அம்முனிவருண்டுபண்ணியிருக்கிற தீர்த்தத்திற்குளித்துக்கொண்டு அச்சக்கரமிருந்ததால் அதற்குச்சக்கரதீர்த்தமென்றுமுனிதீர்த்தமென்றும்பெயருண்டாயிற்றுஇராக்ஷஸர்களைநாசஞ்செய்வதற்காகப்பிரமாவின்உத்தரப்படிஅந்தச்சக்கரதீர்த்தத்தருகில்யாகசாலைநிருமித்துருத்துவிக்குகள் ஹோதா-அனுஹோதா-உத்காதா-பிரஸ்தாதா-அத்வரியூ முதலிய வகைக்காகவியாழன்-இந்திரகுமாரசயந்தன்-விசுவாமித்திரன்-அக்கினிவருணன் வாயு பராசரர்-அகஸ்தியர்-சுநச்சேபன்-மதுசந்தன் என்னும் பதினறுபெயர்களை நியமித்து,யாகத்துக்குச்சாக்ஷிதேவதையாகஈசுரனைவைத்து;இந்திரன்யாககர்த்தாவாகவிருந்து,மஹேசுரமென்ற யாகத்தைநடாத்திப்பூரணுகுதி கொடுக்கும்போது,அவிப்பாக சேஷத்தை ருத்துவிக்குகள்முதலாய பெயர்களுக்கு அத்வரியூ வாயிருந்த அஷ்டாவக்கிரர் பாகித்தளித்தார்,அதில்மிகப்பிரகாசத்தோடும் விளங்கிய பிராசித்ர வென்னப்பட்ட பாகத்தைச் சவிதாவென்ற சூரியன் கரத்தளித்தார். அவரதை வாங்கினவுடனே அது அவருடைய கையிரண்டையும் அற்றுவிழும்படி செய்தது. அவ்வவதாரஞ்சவிதா கோபித்து எனது கரங்கூடினலாயிற்று இலதேல் யாகத்தை நிறைவேற்றவொட்டேனென் றுத்திரப்படுகையில் அஷ்டாவக்கிரர் சொன்னவண்ணம் சக்கரதீர்த்தத்திற் சவிதாவாகிய சூரியனைத் தேவர்கள் ஸ்நானம் பண்ணுவித்தார்கள் அப்போழ் தற்றுப்போன கரங்களிரண்டு முண்டாயின.

அல்லாமல், முன்னாளிற் சாமளாபுரமென்கிற பட்டினத்திலுள்ள அரியர னென்னும் வேதியன் தண்டகாரண்ய ரிஷிகளைத்தரிசிக்கவந்தகாலை வேடர்கள் இலக்குநாட்டு யோச்சியஅம்பு அந்தப் பிராமணன் காலைக் கண்டித்துவிட்டது. அக்கா லங்குள்ளரிஷிகள் உத்தரப்படி, சக்கரதீர்த்தத்தின்மூழ்கிஇராமநாதனைத்தரிசித்துத் தான் முன்னனைய வுண்டாகித் தன்னூர்போய்ச்சேர்ந்து முடிவில் நற்கதியுமடைந்தான். இந்தத்தீர்த்தம்:கெடுதியானஎந்த அவயவத்தையுங் கூட்டிவைக்கும் புண்ணிய முடையதுமன்றிச் சிந்தித்த காரியத்தையுஞ் சேர்த்துவைக்கு மென்றும்.

கக-வது சிவதீர்த்த மகத்துவம்.

கந்தமாதனச்சாரலிற் சிவபூஜை செய்துகொண்டிருந்தஅகஸ்தியருக்கும் கௌதமருக்கும் இஷ்டசித்தியை யுதவும்படியாய்ச் சிவபெருமானைவர்: தமது சூலத்தாலொருதீர்த்தத்தையுண்டாக்கிக் கொடுத்தார். அதைச் சிவதீர்த்தமென்று மகரிஷிகளாற் பெயரிட்டழைப்பதாயிற்று.

ஓர்காலத்திற் பிரமதேவனும் கருடமூர்த்தியும் நீ! சிறியவன் நான் பெரியவனென்றிறுமாப்புக்கொண்டகந்தை மேலிடுவதைக் குறித்து, நான்குமறைகளும்: உங்களிருவருக்கு மேலாக ஒருவனுளன்; நீங்கள்அகம்பிரமதத்துவங்கொள்ளாதீர்களென்றுசொல்லியுங்கேளா அவ்விருவருக்கு முன்னதாக, வேதத்தினுடையஉச்சியிலே ஸ்வயம்பிரகாசமாய்க் குடிலையென்னும் பிரணவந்தோன்றி. பிரமவிஷ்ணுக்காள் ! நீங்க ளறியாமையாய் அகம்பிரம தத்துவங் கொண்டீர்கள்; பரமசிவனை மறந்து வாதுபடிக்கின்றீர்கள்; இது தகுதியன்றென்று உறுத்தி யுரைத்தும் அவர்கள் அங்கீகரியாவவதரம் ; ஈசுரனைவர்: ஜோதிமயமா யெங்கும் பிரகாசித்து நின்றார். அப்போழ்து அயன் மனமருண்டு, அந்தஜோதிக்குள் ஹரனுடையசொரூபங் காணப்படுதல் கண்டும் முன்னரனைய அகந்தை பேசுகையில், ஆண்டவனாகிய தில்லைத் தாண்டவனாரிடமிருந்து "காலபைரவ வா" என்று ஒரு சப்தம் பிறந்தது. அங்கிமிடம்: மூலதாரராய் வீரப்பல் வக்கிரதந்த ரிலங்க மகாவுக்ர சௌ

டீரிய சொரூபத்துடன் சிவந்த குஞ்சிச்சடைகள் பிரகாசிக்கக்கால பைரவர் தோன்றிப் பிரமதேவனோடெதிர்த்து, விஸ்வரூபங்கொண்டு, எங்கும் பைரவராய் நின்று விஷ்ணுவுந் திடுக்கிட அயன் நடுமுகமாகிய ஊர்த்துவவதனத்தை நகத்தாற்கிள்ளி உயிரையுங் கவர்ந்தார். அப்பால் பரமனருள்வாரிசுரந்து, பிரமனை யுயிருடனெழுப்பி, எல்லாத் தேவர்களும் வணங்கப்பெற்றுப் பைரவரை நோக்கிச்சொல்லுகிறார், "நீ! பிரமன்சென்னி கொய்ததில் அச்சிர மூனதுகரத் தொட்டிக்கொண்டமையால், இனி அம்மண்டையோட்டிற் பலியேற்றுண்டு, புண்ணியக்ஷேத்திரங்கடோறுஞ்சென்று முழுகி, இறுதியில் நாம் விளங்கிபிராநின்ற ஸ்தலமாகியகந்தமாதனகிரியிலுள்ள சிவதீர்த்தத்திலும் ஸ்நானம்பண்ணி, ஆவது முடித்து உனதெண்ணப்பிரகாரம் வந்துசேர்" என்றுக்யாபித்த வண்ணம் அவர் மேற்படி சிவதீர்த்தத்தில் ஸ்நானம்பண்ணி நோக்கத்தை முடித்துக்கொண்டார். இப்போது அந்தத் தீர்த்தமானது இராமநாதனுடைய சன்னிதானத்திலிருக்கின்றது. பைரவர் கையிலிருந்த பிரமகபாலத்தைக் காசிக்ஷேத்திரத்திற் கொடுபோய்ப்புதைத்துவிட்டார். அவ்விடம் இப்போதும் பிரமகபாலமென ஓர்தீர்த்தமாய்க் காசியில் விளங்கிக்கொண் டிருக்கின்றது.

கஎ-வது சங்கதீர்த்த மகுத்துவம்.

கந்தமாதனகிரிச்சார்பிலே சங்கமாமுனியென்பவர்தவஞ்செய்தனர். அவராலே யுண்டாக்கப்பட்ட தீர்த்தத்திற்குச் சங்கதீர்த்தமென்று பெயர் வற்சநாபனென்னும் பிராமண சிரேஷ்டனொருவன் தபஞ்செய்ததில் மேலே புத்துக்களும் விருக்ஷங்களுமுண்டாயிருந்தன வேதியன் தபத்தைத் தேவேந்திரன் பரிக்ஷிக்கவென்று மேகங்களையனுப்பி இடிமின்னல்களுடன் வருஷிக்கும்படி செய்தார் அதைத்தருமதேவதை யோர்ந்து, ஒருமகிஷரூபமாய் வந்து நின்று அம்முனியைத் தன்மடிக்குளிருத்தி, ஓர்மழைத்திவலைகூட மேலே விழாமற்றானே முதுகிற்றாங்கியிருந்தது. மழைகள் வருஷித்த [illegible]ந்து ஒய்ந்தோடிப் போய்ப்பின்னர் மகிஷம் வெளிப்பட்டு ஒருசேற்றினிடை நான்குபாதமு மமிழநின்றது. பின்பு வற்சநாப

ஞகிய தவசி நடந்தனவெல்லாங் கியானத்தாலுணர்ந்து இருப்பிடம்விட்டு வெளிப்பட்டுமகிஷத்தை வணங்கிக்கொண்டு வேமுருவிடத்திலிருந்து மெய்ப்பொருளில்மனஞ்செலுத்தும்போது அது கூடாமைகண்டு இதுநன்றி மறந்ததினுல் வந்தகுற்றம், ஆகலின், இங்ஙனம் பாவியானேம், இதற்கென்செய்வது? நன்றிமறத்தலுக்குப் பிராயச்சித்தமு மில்லையே! இனியுயிரை விடுவதுதான் சரியென்றெண்ணி ஓர்வரையிலேறி விழற்கேகுகையில் மீட்டுந் தருமதேவதை "நீ! உயிரிழக்கவேண்டாம்; தென்சமுத்திரக் கரையிற் கந்தமாதனத்தின் கண்ணுள்ள சங்க தீர்த்தத்தின் மூழ்கி இராமநாதனைத்தரிசி" என்றதிர்த்தபடி வற்சநாபன் செய்து அப்பவம் போக்கினுன். இந்தத் தீர்த்தத்தில், தாய் தந்தை குரு இவர்கட்கிழைத்த குற்றமு மொழியும்.

கஅ. கக. உ௰. கயை, கங்கை, யமுனை,

தீர்த்த மகுத்துவம்,

முற்காலத்திற், கந்தமாதனவரையின்கண் பரசிவனை நோக்கித் தவமிழைத்த இரயுக்குவ முனியென்கிற வேதியன்; பிறவிக்கான்முடத்தால் ஒருசிறிய வண்டிலி லேறிக்கொண்டு நடவித்திரியலானுர். அவர்: யமுனை கயை கங்கையென்னு மூன்றுநதிகளிலும் ஸ்நானம்பண்ண வெண்ணுற்று, அவைகளை நோக்கி அன்னுகாரநீத்து, மநுவோதி அருந்தவஞ்செய்கையில்; அவர்க்குமிகவுந்தினவுள்ள சொறிசிரங்குமுதலிய பிணிகள் சம்பவித்தன. அவைகளையெல்லாம் லட்சியஞ் செய்யாமல் அவரதுதவஞ்சிறந்துவந்ததால், அவர்க்கு அம்மூன்றுநதிகளும் மூன்றுஸ்திரீகளாய்த் தரிசனமாகி அப்பூசுரன் வேண்டிக்கொண்ட பிரகாரம் பிறவாகமாகப் பெருகி வந்து"எங்களை யதாஸ்தானத்திற் றரிசித்து பூஜிக்கும்பலனை இங்குங் கொடுக்கத்தகும்" என்று குயின்று, ஜலத்திடை மறைந்துவிட்டார்கள். முனிவு மவைகளில் மூழ்கிப் பவித்திரரானுர். அம்மூன்று தீர்த்தங்களும்: இப்பொழுது இராமீசர் பதியிலுள்ளன. சானசுருதி யென்றும் பௌத்திர னென்றும் பெயருடையான்: மிகவு நீதியா யுலகாண்டு அன்னதானங்க ளளவிறந்தனவாய்ச்சதா

காலந் தன்னுடைய ராஜ்யமுற்றுஞ் சர்வஜாதியார்கட்கும் நெடுநாளாக வழங்கினன். அதைப்பார்க்கவென்று தேவேந்திராதிதேவர்கண் முனிவர்களியாவரும் அம்சபக்ஷி வடிவங்களாய் வந்து கண்ணுற்று வியப்புற்று அவ்வரசனைக்கடைத்தேறும்படி செய்ய வென்றருள்பாலித்து; "இவ்வரசனை நாமேன் பரவவேண்டும்? இவனென்னமகாத்மாவா? வேதநியாயந் தெரியாதவன், இவனைநாம் புகழவேண்டியதில்லைத் தென்றிசையிற் சேதுமத்தியிற் பிரமக்கியான ஸ்வரூபியாய் விளங்கிக் கொண்டிருக்கிற இரயுக்குவமுனியைப் புகழ்வதுநியாயம்" என்று சொல்லிக்கொண்டுசென்றார்கள். அவ்வாறுசொன்ன அனைத்தையும் மேன்மாடியினின்று கேட்டுக்கொண்டிருந்த சானசுருதிராஜன் மிகவும் வியசனமுற்று, அம்முனிவரைத் தான் தரிசிக்கவேண்டுமென்பதா பெண்ணித், தனது சாரதியா லவரிருப்பிடந்தெரிந்து சென்று கண்டுஅவர்பாதங்களை வந்தித்து வாழ்த்தித் தான்கொடுவந்த பசு பொன் முதலியவைகளைக் காணிக்கையாகக் கொடுத்தான். அவைகளையெல்லாஞ் சர்வசங்க பரித்தியாகஞ் செய்திராநின்ற முனிவர் ஏற்றுக்கொளாமல், ஸ்ரீராமநாதனுடைய சன்னிதானத்திற்கே சமர்ப்பித்துஅரசனே! பிறவித்துன்பம் நீக்க வேண்டுமாயின் இருவினைப்பற்று மொழிந்திருக்கவேண்டும். அதற்கிந்த முத்தீர்த்தங்களிலு முழ்கி அஞ்ஞானத்தையொழித்து மெய்ஞ்ஞானத்தை யெய்துக என்று ஏகாட்சரத்தை யுபதேசித்தார். அரையன், அவ்வுபதேசம் பெற்றுச் சங்கற்பப்படி யமுனை கயை கங்கையென்னுந் தீர்த்தங்களில்ஸ்நானம் பண்ணிப் பிரமக்கியானமடைந்து குருவுடனே யுய்ந்துஅவருடன் அரிய ஆத்மமோட்சத்தை யெய்தினன்.

உ௪-வது கோடி தீர்த்தம் மகுத்துவம்.

கந்தமாதனத்தின் மத்தியிற் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள ஸ்ரீராமலிங்கத்திற்கு அபிடேகஞ் செய்வென்று இராமரானவர் தமது இலிங்கத்திற்கருகிலுட்கார்ந்து கொண்டு, பாகிரதியை நினைத்துத் தமது கோதண்டக்கோடியாற் பூமியைத்தோண்டிஅங்ஙனம் அக்கோதண்டமழுந்த வூன்றியெடுத்தார். அந்தப்பிலத்துவாரத்து வழியாய்ப் பாதாளப் பிரவேசமாய்க் கங்கை பெருகிவந்

தது. அதைஇராமலிங்கத்தில் இராமர்கரத்தால் அபிடேகஞ்செய்யலாயிற்று. இராகவனுடைய கோதண்டக் கொடியால் வெளிப்பட்ட அந்தத்தீர்த்தத்திற் கிப்பொழுது கோடிதீர்த்தமெனப் பெயர் விளங்காநிற்கும். அதில் கிருஷ்ணமூர்த்தி யானவர் நாரதருறைத்தவாறு சங்கற்பப்படிகந்தமாதீனத்திலுள்ளதீர்த்தங்களெல்லாமாடிக் கடைசியில் ஸ்நானஞ்செய்து இராமீசரைத் தரிசித்துக் கஞ்சனைக்கொன்ற பழியை நிவர்த்தி செய்துகொண்டு மதுராபுரி போய்ச் சேர்ந்திருக்கிறார். இத்தீர்த்தமானது மற்றைத் தீர்த்தங்களைப்போலல்லாமல் ஆன்மாக்களை அதிதமோஷத்திற்கு முயர்த்த ஹேதுவாயிருப்பதால், மோட்சத்தைவிரும்பினோர், இதில்ஸ்நானஞ்செய்து புண்ணியம்பெற்றவுடன்யாத்திரைவரை வேறுதீர்த்தங்களில் முழுகுதல் நியாயமன்றென்று, இதைக் கடாசியாய் உபயோகித்துக் கொள்ளப்படும். அப்படியே ஸ்ரீராமரும் நடாத்தித்தமது பதிக்கேகி யிருக்கிறார். இராமலிங்கத்திற் கருகிலிருக்கிற இந்தத் தீர்த்தம் மகாபுண்ணியமுள தாதலால், இத்தைப்பந்தபாசப்பட்டு மரிப்பவர்கள் நாக்கிலூற்றினும் அங்ஙனம் பாசவினை யகலுமென்பது சாமானிய சம்மதமாம்.

உ௨-வது சாத்தியாமுததீர்த்த மகுத்துவம்.

ஸ்ரீ ராமலிங்கத்திற் கருகில் சாத்தியாமுத தீர்த்தமென ஒன்றுண்டு அதுதன்கண் ஸ்நானம்பண்ணுநரெண்ணத்தை அசாத்தியமில்லாது சாத்தியமா யளிக்கும் நல்லபல னுடைத்து ஆகலின், அதற்குச் சாத்தியாமுததீர்த்தமெனப் பெயராம் புரூரவனென்கிற சக்கரவர்த்திக்கு கூo வருஷ மனைவியாயிருந்து ஆயுவென்னுங்குழந்தையைப் பெற்றுக்கொடுத்த ஊர்வசியென்பாள் தேவர்களில் மித்திராவருணனை யிகழ்ந்து அவனால் நீ! பூலோகத்தில் நரனைக்கூடிப்பின்பமனுபவிக்கக் கடவாயென்ற சாபமேற்றுப் புரூரவனுடைய சிங்காரவனத்தில் வந்திருந்து விஞ்ஞானஞ் செய்துகொண் டிருந்தாள். அப்போது புரூரவராஜன் அவளைக்கண்டு சந்தித்து அவள் கேட்டுக்கொண்டபடி அவள்பிள்ளைபோல் வளர்க்கிற இரண்டாட்டுக் கடாக்களை யாருங் கவர்ந்துகொண்டு போகாது தான்காக்கிறதென்றும், நிருவாணமாய் அவள்பார்வைக் கெப்போதாவதுதான்

காணப்படுவதில்லை யென்றுந், தன்னுடைய உச்சிட்டத்தை அவளுக்குண்பிப்ப தில்லையென்றும், இவைகள் தவறில் அவள்தன்னை விட்டகன்று தேவலோகம் போய்விடலா மென்றும் பரவசஞ்செய்துகொடுத்து நாட்டை மந்திரிபா லொப்புவித்துத்தன்பதிக்கருகிலுள்ள சரஸ்வதிநதிதீர்த்தத்தில் சயித்திரவனத்தில் ஓர் சிங்காரமணிமேடையின்கண்சர்வகாலமும் அவளைப்பிரியாமற்போகபோக்கியங்களை அனுபவித்துக் கொண்டிருக்குங்கால், தேவர்களேவுதற்படி விசுவாவசுவென்னுங் கந்தருவன் இரவிலேவந்து அவ்வாடு இரண்டையும் பிடித்துக் கக்கத்திலிடுக்கிக் கொண் டாகாயத்திற் சென்றான். அப்போது ஆட்டின் சப்தங்கேட்டு, யாரோ கள்ளன் கடாக்களை யெடுத்துப்போகிறா னென்றூர்வசி யரசனுக்குரைத்தாள். உடனே அரசன் கட்கதரனாய் வெளிப்பட்டுக் கள்வனைப் பிடிக்கவெனச் செல்லும் விரைவில், அவள் வஸ்திர நழுவிக் கீழே விழுந்துவிட்ட தறிந்த கந்தருவன், தன்வல்லமையா லோர்வெளிச்சத்தை யுண்டுசெய்தான் அந்நேர மரசனைப் பின்றொடர்ந்துவந்த ஊர்வசி அரசனுடைய நிருவாணக் கோலத்தைக்கண்டு வெட்கி ராஜன் பரவசந் தப்பிப்போனானென்று மறைந்து தேவருலகம் போய்ச்சேர்ந்தாள். பின்னர்ப் புரூரவன் ஆடுகளையுங் கரடவனையுங் கண்டுகொளற் கியலாதிருப்பிடம்வந் தூர்வசியைக்காணாதுபரிதவித்துச் சேரணியெங்குந் திரிந்தலையும்போது, குருக்ஷேத்திரத்திற் சில தேவமாதர்களுடன் ஊர்வசியைக்கண்டு. என்னை நீ ! பிரியலாமோ? என்று வினாவினான். அவனுக் குத்தரமாக அவ்வூர்வசி பிரமாணம் பிசகியதாற் பிரிந்தேன், நீர்வருந்தவேண்டாம், பத்து மாதஞ்சென் றிவ்விடம்வாரும்; உமது புத்திரனைப்பெற்றளிப்பே னென்றாள். அந்தப்படிவந்த அரசனிடம் மேற்சொற்றஆயுவென்னுங் குழந்தையை ஊர்வசி மீன்றளிப்ப அவ்வரசன்பெற்று அன்றிரவு அவளோடு கூடியிருந்தான். அங்ஙனம் அரசன் அவள் பிரிவாற்றாமையைக் குறித்து வருந்தும்போது ஊர்வசி அரசனே ! நீர் தும்புரு முதலானவர்களைச் சந்தித்து அவர்களிடம் நானும்மைச் சேர்ந்திருக்கும் படியான மார்க்கத்தைத் தேடிக்கொள்ளுமென்று சொல்லிப்போயினாள். அந்தப்படி புரூரவன் அவர்களைக் கண்டிறைஞ்சி அவ்வரங்கேட்டான். அதற்கந்தத் தும்புரு முதலியோர் உன்னெண்ணப்படி யாகவெனின் "இதோ நாங்கள்கொடுக்கிற அக்கினி ஸ்தாலியை யெடுத்துக்கொண்டுபோய்மூன்றுகூறாய்

அக்கினியெடுத்து யாகாதி கிருத்தியங்களை நடாத்து! அதன்மேல் தேவலோகஞ்சென்று ஊர்வசியுடன் கூடிவாழ்வாய்'' என்றுரைத்து மறைந்தார்கள். அவ்வரத்தை அவன் மதியாமல் அக்கினி ஸ்தாலியை அவ்வனத்திற்றனே போட்டுவிட் டேர்சென்று, பின்னும் விடிந்தவுடன் அதைப்பார்க்கவெனவந்துநோக்கினன். ஆங்கதைக் காணுது ஒருஅரசமரத்தைமட்டும் நூதனமாக்கண்டான். இஃது அக்கினிஸ்தாலியே யெனக்கணித்து அதைவெட்டி உச-அங்குலப் பிரமாணமாய் அரணிசெய்துநெருப்புண்டாக்கி மூன்றுகூறுய்வகுத்து அனேகயாகங்களை நடாத்தித் தேவானுக்கிரகம் பெற்றுத் தேவலோகத்துக்குப் போக்குவரத் துள்ளவனுய் ஊர்வசியுடன் சேர்ந்து களித்திருந்தான். அஞ்ஞான்று இந்திரசபையில் நடனஞ்செய்த ஊர்வசியைப் புரூரவ னேக்கி நகைக்கவும் ஊர்வசி புரூரவனை நோக்கி நகைக்கவும் நேரிட்டதால். ஊர்வசியி னிர்த்தனம், சுருதிலயத்துக்குக் குறைவாய்க் காணப்பட்டது. அப்போது நிர்த்தனத்துக்குக் கர்த்தாவாகிய தும்புரு வெகுண்டு இந்தப்புரூரவன் இவளைக் கூடாமற் போகக்கடவதென்றுசபித்தான். அதைத் தீர்க்கும்வகை யாதென் றுருத்துயருடன் அரசன் சொல்லிக்கொள்வதைத் தேவராஜ னறிந்துரைத்த பிரகாரஞ் சாற்றிய சாத்தியாமுத தீர்த்தத்தில் அப் புரூரவனென்னுஞ் சக்கரவர்த்தி ஸ்நானஞ் செய்தான். அங்ஙனமந்தச் சாப நீங்கித்தேவர்கள்பதவியைப் பெற்று முற்போல ஊர்வசியுடன் கூடி அரையன் வாழ்ந்திருந்தனன்.

உரு-வது சர்வதீர்த்த மகுத்துவம்.

பிருகுவின் சந்ததியான சுதரிசனனென்னும் பூசுரன் பிறவிக் குருடனு யிருந்ததுமன்றிக் கொடியவியாதியானும் நரைதிரைமூப்புத் தண்மையானும் மெய்தளர்ந்து துர்ப்பல முடையவனுயுமிருந்தான். அவன்,சர்வதீர்த்தங்களிலு மாடவேண்டுமென்றவாவுற்றுச் சிவனடியார்கட்குத் தாழ்வின்றி அன்னம்படைத்து, ஸ்ரீராமநாதனுகிய ஈஸ்வரனைச் சதாகாலமுஞ் சிந்தையிலிருத்தி, ஆடிப்பாடிக் கந்தமாதனத்தின்கண்ணே அன்னுகாரந்துறந்து, பத்துவருடந்

தவஞ்செய்துக்கொண்டிருந்ததிற் கிரங்கிக் கயிலாசபதி பிரசன்னராகி, அப்பிராமணோத்தமனுக்குக் கண்கொடுத்து, எண்ணுற்றபிரகாரம் எவ்விடத்துமுள்ள யாவத்தீர்த்தங்களையும் அவ்விடத்தழைத்துத் தமது விடையாகிய ரிஷபத்தின்காலால் தோண்டப்பட்ட பள்ளத்தில் அடங்கும்படி கட்டளையிட்டு முனியைநோக்கி, "நீ இதில் ஸ்னானஞ்செய்குதி" என்றுக்ஞாபித்தார். அதுபோல் ஸ்நானம்பண்ணினவுடனே திவ்யதேகம்பெற்று மன்மதசொரூபம்போலப் பால்யப் பிராயத்துடன் விளங்கித் தம்மைவணங்கிநின்ற அம்முனியை ஹரன் அருட்கண்ணுற்று, "ஏ சுதரிசன! நின்னிமித்தம் சகல லோகங்களிலுமுள்ள சர்வதீர்த்தங்களையும் இவணழைத் திதினிரப்பி யிருக்கின்றமையால் இதற்குச் சர்வதீர்த்தமென்றும், நமது மனசால் னினைத்தழைத்தமையால் மானசதீர்த்தமென்றும், இன்றுமுதற் பெயர்விளங்கும், இந்தத் தீர்த்தத்திற் கனேக புண்ணியமுண்டாயிருக்கும்" என்றருளிச் செய்துமறைந்தனர். பின்னர் சுதரிசனன் முத்திபெற்றனன். அதுதான் இராமீசர் தளியுட் சர்வதீர்த்தமென விளங்கிக்கொண்டிருக்கின்றது.

உச — வது

தனுகோடிதீர்த்த மகுத்துவம்.

இராமசுவாமி இராவண சம்மாரமுடித்துச் சேதுவழியாய் வந்து சேதுவிற்றங்கியிருக்கும்போது விபீஷணன்வணங்கிக்கேட்டுக் கொண்டவாறு திருவணைவழியாய் வலியுள்ளவர்கள் ஏனோர்க்குத் துன்புசெய்யும்படி இலங்கையிலிருந்து பிரவேசியாதிருக்கவென்று கட்டியதிருவணையைத் தமது பாரகோதண்டத்தின்கோடியாற் குறுக்கேகீறி யுடைத்து இருசமுத்திரமும் பொருதுமாறு விட்டனர். அதனாலது இராம தனுக்கோடி தீர்த்தமென விளங்காநிற்கும். அந்தத் தனுக்கோடி தீர்த்தமெனுஞ்சமுத்திரத்தில் ஸ்நானஞ்செய்பவர்கட்கு மனவாக்குக் காயங்களாற்செய்த யாவத்பாவங்களும் நாசமாவதுமன்றி அனேக புண்ணியமுஞ் சித்திக்கும். அதிமகத்துவமுள்ள அதன்பெருமை பேசிடற் கெளிதன்று. அத்தை நினைத்தாலுங் கேட்டாலுந் தரிசித்தாலும் அங்குள்ளகாற்று

மேலேபட்டாலும் மிகுவிசேஷ மென்னின், பின்னைப்பேசவேண்டிய பேறேதிருக்கின்றது. இந்தப் புண்ணியதீர்த்தஞ் சேதுமார்க்கத்தில் கந்தமாதனத்திலுள்ள யாவத் தீர்த்தங்களுக்குங்கீழ்க்கடைசியிற் சமுத்திரமாயுளது.

பாரதயுத்தம் பதினெட்டாநாளிரவில் அசுவத்தாமன் துரியோதனனிடஞ் சேனாதிபதிப்பட்டம்பெற்றுச் சிவபெருமானை நோக்கி ஒருமுகூர்த்தகாலம் இந்திரிய நிக்கிரகங்கண்டு தவஞ்செய்து மகிமையுள்ள வாளாயுதம்பெற்றுவந்து பாண்டவர்களில்லாத நேரம் அவர்கள் பாசறைக்குட் பிரவேசித்து, அங்குநித்திரைசெய்துக்கொண்டிருந்த திருஷ்டத்துய்மன் முதலிய சகலரையும்வெட்டிமடித்து, உபபஞ்ச பாண்டவர்களாகிய ஐந்துசிசுக்களையும் பாண்டவர்கள் தானென்று தலைகளையறுத்துத், துரியோதனனிடங் காண்பித்தனர். அந்தச் சிசுஹத்தியாலும் அரையர்களை நித்திரையிற்கொன்ற தோஷத்தாலும் பீடிக்கப்பட்ட அசுவத்தாமன் தண்டகாரண்ய ரிஷிகளாலும் காசிப்பிராமணராலும் இகழப்பட்டு மனநொந்து வேதவியாசரைத்தரிசித்தார். அவருத்தாரப்படிஅவ்வசுவத்தாமாவென்பவர் தனுக்கோடி தீர்த்தத்தில் முப்பதுநாள் வரையில் ஸ்நானஞ்செய்து திரிசந்திகாலத்தும் இராமநாதனைத்தரிசித்து வந்ததில் ஈஸ்வரன் இலிங்கத்திலிருந்துதோன்றிப் பிரசன்னதரிசனங்கொடுத்து "உன்னைப்பிடித்திருந்த தோஷங்கள் தீர்ந்துவிட்டன" என்று திருவாய்மலர்ந்தருளி ஆசீர்வதித்து மீண்டுமிலிங்கத்திடை மறைந்துபோயினர்.

சந்திரகுலத்து நந்தனென்னுமரசனுக்கு மைந்தனாயுதித்துத் தருமசிரேஷ்டனாயிருந்த தருமகுத்தனென்னு மரசன் அடவியில் வேட்டையாடி அஸ்தமித்தநேரத்தில் ஓர்விருக்ஷத்திலேறி யுட்கார்ந்திருக்கையிற் சிங்கத்தாற் றுரத்தப்பட் டவ்விருக்ஷத்திலேறிய ஓர்கரடி அரசனைப்பார்த்து என்னைக்கண்டு நீர் பயப்படவேண்டாம் நானும்முடைய துணையாகவே இதிலிருப்பேனென்றுரைத்து அரசனருகிலிருந்தது. அப்போது தருமகுத்தனுக்கு நித்திரை மயக்கமுண்டாவதைக்கரடியறிந்து என்மடியிற்பாதிராத்திரிவரையில் நீர் படுத்துத்துயிலும் நீர் விழித்ததின்மே லும்முடைய மடியில் யானும் அப்படியே துயிலுகின்றேனென்றதற் கரசனிணங்கி

அதன்மடியிற் றலைசாய்த்துக் கண்வளர்ந்தான். அதுகண்டசிங்கம் ஏ! கரடி உன்மடியிற் சயனிப்பவனைக் கீழேதள்ளிவிடு, நானெடுத்துக்கொண்டேகுவ னென்றதற்கிணங்காதிருந்த கரடி மடியிற் றுயிலுபவன் விழித்துக்கொண்டபின் அவன் மடியில் கரடி கண்வளர்கையில், அந்தச்சிங்கம் அரசனை விளித்துப் பருதி யுதயமானல் யான்போய்விடுவேன். போனவுடன் கரடிக்கு அச்சமில்லை அதுவோ பொல்லாமிருகம். நீ அதை விரைவிற்கீழே தள்ளிவிடு யானெடுத்துக்கொண்டு போகிறேன். இல்லேதல் பின்பு உனக்கே அபாயம்வருமென்றது. அதுகேட்ட அரசன், பீதிமிக்கொண்டப்படியே தள்ளினன். உடனே கரடி நகங்களையூன்றிக் கிளையைத் தழுவிப்பிடித் திருந்துகொண்டு அடா சண்டாளராஜனே! என்னையறியா மூடாத்மாவே! நான் பிருகுமகாரிஷிபினுடைய பரம்பரையிற்றேன்றிய சானகாட்ட னென்னுமுனிவன் நினைத்த வுருவெடுத்துச் சஞ்சரித்துத் திரியக்கூடியவன். இப்படிப்பட்ட என்னை நித்திரையில் நம்பிக்கைத்துரோகஞ்செய்த நீ பயித்தியம்பிடித் தலையக்கடவைஎன்று சபித்துச் சிங்கத்தைப்பார்த்து, ஏசிங்கம்! நீஅளகேசனென்னுங் குபேரனுடைய மந்திரியாகிய பத்திரனென்பவனன்றே? நீயு முன்மனைவியுமாக இமயகிரியருகிற் கிரீடைசெய்கையில், ஆங்குச் சமித்தொடிக்கவேண்டிவந்த கௌதமரைக்கண்டு உன் தேவிமட்டும் வஸ்திரந்தரித்தும் நீ திகம்பரமாயு நின்றதை அவர் நோக்கி வெகுண்டு இவ்வித மிருகமாய்ப்போம்படி சபித்தார். அதனலெம்போலிகளையுந் தொடர்ந்தனை என்றநிமிடம் சிங்கத்திற்குப் பூர்வக்கியானந்தோன்றிப் பழையபத்திரனென்னுஞ்சொரூபம்பெற்று உம்மைத் தரிசித்ததாற் சாபவிமோசனமானேனென்றுரைத்து வாழ்த்திக்கொண்டு யதாஸ்தானம் போய்விட்டான். முனிவரும் தன்னேக்கம்போலெய்தினர். புகைம் தருமகுத்தனுக்குப் பயித்தியந்தொடர்ந்தது. அதை அவன் தந்தையும் அமைச்சர் முதலானவர்களும் சைமினி ரிஷிபிடத்திற் தெரிவித்தார்கள். அவர்நடந்த வகை இற்றென்று சொன்னதன்மேல், அவர்நிகழ்த்தியவகைத்துஅப்பயித்தியவரசன்இராமதனுக்கோடிதீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து, அனேக தானங்கள்வழங்கி, அப்பயித்தியத்தை நிவர்த்திசெய்துகொண்டு, இராமநாதனைத் தரிசித்து, வேண்டிய ஆபரணதிகள் நீட்டித் தன்னகரம் புகுந்து அரசுசெய்தனன்.

பிருகத்துய்மனென்னுமரசன் நடாத்திய தீர்க்கச்சத்ரயாகத்திற்குப் பௌரோகிதர்களாக விருந்த பராவசு, அருவாவசவென்னுந் தமையன் தம்பி இருவர்களில் பராவசுவென்பவன், தன்தந்தையாகிய ரயிப்பியன் புலித்தோலைப்போர்த்திருந்த தறியாமற் புலிதான் ஆச்சிரமத்தி லிருக்கிறதென் றெண்ணித் தன்கைத்தண்டாற் புடைத்தான் உடனே தாதை யிறந்ததைக்குறித்துத்தானுந் தம்பியும் புலம்பியழுது இறுதியிலிளையானைநோக்கி சகோதரனே நான் யாகத்தை நிறைவேற்றுகின்றேன், நீ தந்தை கொலையுண்ட பிரம ஹத்தியை யேற்றுக்கொண்டு காட்டிற்சென்று தவமியற்றுதி என்றபடி இளையோனானவன் சூரியனை நோக்கித் தபஞ் செய்தபோது, சூரியன் தேவர்களுடன் தரிசனமாகிப் பிதாபிழைக்கவென வரங்கொடுத்தனன். பின்னர் "உன்தமயனு னேரிட்ட பிரமஹத்தி யகல அவனைத் தனுக்கோடி தீர்த்தஸ்நானஞ்செய்யும்படிசெய்" என்று தேவர்கள் திரோபவித்தனர். அந்தவிதந்தானுந் தமையனுகிய பராவசுவுஞ் சென்று அந்தச் சமுத்திரதீர்த்தத்திற் குடைந்து இராமலிங்க தரிசனங் கண்டு தங்களிருப்பிடம் வந்தவுடன், மரித்தபிதாவை உயிருடன்பார்த்துப் பிரமஹத்தி தோஷமுந் தொலைந்து சந்துஷ்டியா யிருந்தார்கள்.

ஓர்பட்டினத்தருகிலுள்ளகானில்வாசஞ்செய்யும்நரியொன்று சுடலைப் பிணத்தைஇழுத்துத்தின்னுகையில். அதன் மித்திரனுன மற்கடமொன்று கண்டு; நண்பனே ! நீ என்ன பாவஞ் செய்தையோபிணந்தின்னுஞ் ஜென்மமானுயே என்றது. அதுகேட்டசம்பு; கேளாய் ஞேயா ! யான்பூர்வத்தில் தேவசன்மாவென்னும்பூசுரனுயிருக்குங்கால்ஒரு வேதியனுக்குக்கொடுக்கிறதாக வாக்குத்தத்தஞ் செய்த பதார்த்தத்தைக் கோடாத் தொழிப்பால் இந்த ஜென்மம் லபித்ததென்று நவின்றது. அதுகேட்ட கபி; ஏ ஆர்வலா ! நானும் முந்தி ஜென்மத்தில் விஸ்வநாதனென்னும் வேதியனுடையகுமாரன் வேதநாதனென ஆக்குவயம் பெற்றிருக்குங்கால், ஒரு விப்பிரனுடைய வீட்டுக் கொல்லையின் கண்ணுள்ள காய்க்கறிபதார்த்தங்களை வேலியைத்தாண்டிப்போய்த் திருடிக்கொடுவந்து சமைத்துண்டதோஷத்தால் இப்படித் தாண்டித்தாண்டித்தத்தித்தத்தித் திரிகின்ற சென்மமானேன்; நீயு நானு மக்காலத்துப் பிரியாத நேசர்களா யிருந்தவாறே இக்காலத்தும் பிரார்த்துவப்படிஒன்று

பட்டிருக்கின்றோம். அல்லாமல் இப்பிறவி வாய்க்குமுன்னம் சிவப ணிவிடை முதலிய கயிங்கரியங்களை நான்செய்திருத்தல் குறித்து, இப்பவத்தும் பூர்வக்கியானமகலாதிருக்கின்றதென்றது. இவ்விதம் பரவிக்கொண்ட இரண்டுபிராணிகளும் இந்தஜென்மம் எப்படிக் கடைத்தேறுமென்றுருக் கவலையுடன் ஊணுறக்கமின்றி இருக் கும் வேளை ஆண்டு வந்த சிந்துதீபமுனியைக் கண்டடிவணங்கித் தங்கள் குறையை விண்ணப்பித்துக் கொண்டன. அதுதெளிந்த அம்முனிவர் சொற்பிரகாரம் ஸ்ரீசேதுதனுக்கோடிதீர்த்தத்திற் றூனே ஸ்நானஞ்செய்து கொண்டு அவன் வாழ்ந்திருந்த அக்கபிக் குஞ் சம்புவுக்குந்தேவதேகங்கிடைத்துத் தேவபோகங்களையனுப விக்கப் புண்ணியமுண்டாயிற்று. உடனே அவர்தேவவிமானத்தே றித் தேவுலகடைந்து இந்திரனோடிருந்து களிசிறந்துவாழ்ந்தனர்.

மாராஷ்டதேசத்திலுள்ளஎச்சதேவனென்னும்நற்பிராமண னுக்குச் சுமதியென்னும் ஒரு துற்புத்திரன் பிறந்து, தன்பதிதுற ந்து புற்கலமென்னுந் தேசம் புகுந்து ஓர் வேசிவச் சிறுமியுடன் கூடி அவளுக்காகப் பொருள் கொணர்ந்தளித்தும் பிராமணி கத்தைமறந்து வேடரோடு வேடனாகத் திரிந் துயிர்வதை செய்து ஊனுண்டு கட்குடித்துத் திரியுங்கால், ஓர் வேதியன் வீட்டிற் கள் ளஞ்செய்து அவ்வேதியனையுங்கொன்றுவிட்டான். அங்ஙனம் அவ னைப் பிரமஹத்தி வந்து பிடித்துக்கொண் டலைக்கும்போது தெய் வாதீனமா யூர்சேர்ந்து தன்றந்தையிடஞ் சென்றான். அங்ஙனம் எச்சதேவனைப் பிரமஹத்தி நோக்கி இவன் பிராமணனைக்கொன் றான், கட்குடித்தான் பொன்றிருடினான் உங்களுக்குதவாமற் புளி ந்தனானான். ஆதலால், நீ! இவனுக்கிரங்காதே இரங்குவாயேல் உன்னையும், உன்மனைவியையும், அவன் மனைவியையுங் கொல்வது மன்றி உன் குல முழுதும் நாசஞ்செய்வேனென்றது. அவ்வசன மோர்ந்த எச்சதேவன் புத்திரனை விடுக்க மனமில்லாதிருப்பதைப் பிரமஹத்தி கண்டு வெகுண்டு, தன் கையினால் சுமதியினுடைய உடம்பிலே என்பு முரியும்படி ஓங்கியறைந்தது அவ்வறையுண்ட சுமதியானவன் அலறிக்கொண்டு நிலத்தில் விழுந்தனன், தந்தை யாகிய அந்தணன்றனது ஏகபுத்திரனாகிய சுமதிபடுந்துன்பத்தைக் கண்ணுற்று மனமாற்றாமல் மிக வருந்திக் கொண்டிருந்தனன். அப்போழ்து அம்மனையில் துர்வாசமகாரிஷி வந்தார். அவரைத்

தாயுந் தந்தையும் வணங்கிப் புத்திரனுக் குண்டாயிருக்கிற விபத்துவைப்பற்றி விண்ணப்பஞ் செய்த தோர்ந்த அவ்விருடி உரைத்தவண்ணம் எச்சதேவன் தன்மகனாகிய சுமதியைக்கூட்டி வந்து அவனை இராமதனுக்கோடியில் தன்னோடு ஆறுமதிவரைஸ்நானஞ் செய்வித்தான். அஞ்ஞான்று "பீடித்திருந்த பிரமஹத்தியும் மற்றுந்தோஷமுந் தொலைந்து திவ்யபுருஷனாகச் சுமதிவிளங்கினான்" என்று அசரீரி வாக்குண்டாயிற்று. அப்பாற் பிதா புத்திரனை அழைத்துக்கொண்டு இராமலிங்க தரிசனஞ்செய்தூர்புக்கு வாழ்ந்திருந்தான்.

பாண்டியதேசவாசியாய் இத்துமவாகனென்னும் பிராமணனுடையமனைவி மஹாரூபவதியா யிருந்தாள். அவள் நல்லபருவத்தில் துர்விநீதனென்னும் ஓராண்குழந்தையை ஈன்றபின், இத்துமவாகன்நிரியாண மெய்திவிட்டான். அப்பால் தாயும்பிள்ளையும் பாண்டியநாட்டி லுய்யுங்கால்துவாதசவருஷம்வானிரங்காதுலகம்வருந்துங் காரணம்பற்றி அவ்விருவருங் கோகர்னமெனும் பதியடைந்துயிர் வாழ்ந்திருந்தார்கள். அப்போது பால்யதிசையடைந்திருந்தபுத்திரனாகிய துர்விநீதன் காமவிடாய்கொண்டு தாய்பேரில்மோஹித்து மாதுருகமனஞ்செய்து அவ்விடாய் தணிந்தபின்பு, தான் செய்தசெய்கை பெரும்பாவ மெனவலித்து, எண்ணரிய துக்கசாகரத்தழுந்தி மகரிஷிகளுறையும் வனமெய்தி, அவர்களிடம் தன் கொடும்பவந் தொலையற் குபாயமருள்கவெனக் குறையிரந்துகொண்டான் அஞ்ஞான்று வேதவியாசருக்குக்கருணைசுரந்து, "அடா பாவி பதிதா! நீயுமுன்றாயும் இராமதனுக்கோடி தீர்த்தத்தில், உத்தராயந புண்ணிய காலத்தில், சூரியன் மகரத்துக்கு வந்த திங்களில், சந்திர சூரியர் சேர்ந்த அமாவாசியில், உஷற்காலத்தில், சங்கற்பப்படி ஸ்நானஞ்செய்து நீ செய்த மாதுருக மனதோஷந் தீர்த்துக்கொள்" என்றுத்தரவு செய்தபிரகாரம் தாயு மகனும் முப்பதுதினம்வரை அந்தச் தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து இராமீசரைத் தரிசித்து மறுபடியும் வியாசரைக்கண்டு வணங்கி அவர் சொன்ன நற்போதகங்களைச் செவிகுளிரக்கேட்டுக் கோகர்னஞ் சென்று துர்விநீதன் ஒருபெண்ணை விவாகஞ் செய்துகொண்டு வாழ்ந்திருந்தான். கடைசியில் அம்மாதாவும் மகனு நற்கதி புகுந்தார்கள்.

கௌதம நதிக்கரையில் ஆசாரமற்ற துராசாரனென்னும்ஓர் விப்பிரன் பதிதனாய் பாதகரோடுகூடி அகிர்த்தியங்களையே செய்துகொண்டிருந்தான். அதனால் அவன் ஒருவேதாளம் பிடித்துக்கொண்டு அகோராத்ரமாகப்பலவிடங்களுந் திரிந்தலையும்படிசெய்து வருவதாயிற்று. அஃது ஓர்நாள், அவனைத்தனுக்கோடி தீர்த்தத்தினருகிலு மழைத்துக்கொண்டுவந்து இந்தச்சமுத்திரத்திலவனை அமிழ்த்திவிடுவோமென்றமிழ்த்தின நிமிடம், வேதாளம் அலறிக்கொண்டேகி முன்ஜன்மத்திற்பாரத்துவாசருடைய புத்திரனாய் வேதநிதியென்னும் பிராமணனாயிருக்குங்கால் கன்யாமாசமாகிய புரட்டாசிமாசங் கன்னியிற் சூரியன்வருகிறபோது, சந்திரன்கலை குறைந்த மாளயபட்சமான புண்ணியகாலத்திற் பிதிர்தேவதைகட்குரிய மாளயசிராார்த்தம் அக்கினிஹோத்திரங்களைச் செய்யாதிருந்த குறைவால் "நீ! வேதாளமாய்ப்போகக்கடவை" என்றுபிதிர்க்கள்கொடுத்த சாபந்தீர்ந்துதேவதேகம் பெற்று மால்பதமடைந்தான் துராசாரனும் பரிசுத்தஹிருதயமுடையவனாய் இவ்விடம் யாதோ? எப்படி இங்குவந்தோமெனச்சிந்தித்துநிற்கையில் ஆங்கு ஸ்நானத்திற்காகத் தத்தாத்திரமுனிவர்வந்தார். அவரைத்துராசாரன்வணங்கிச் சங்கதிவினவினன். அதுபற்றிஅம்முனிசிரேஷ்டர் ஒருமுகூர்த்தமளவுஞ்சித்தத்தைநிலைநிறுத்திநோக்கிஅவ்வேதியன் பூர்வமெல்லாங் கியானத்தாலுணர்ந்து நடந்த விர்த்தாந்தங்களையுபதேசித் தனுப்பப்பட்டபின் அவன் தன்னூர் சேர்ந்து கிரமப்படி மாளயசிரார்த்தங்களைநடாத்தி அந்தியத்தில் நற்கதிபுக்கனன். [கௌதமநதி-கோதாவிரி.]

தாய் தந்தையர் மரித்ததிதிகளிற்சிராத்தஞ் செய்யாவிடினும் மேற்கூறிய மாளயசிராத்தம் அவசியஞ்செய்யவேண்டும். அஃது புரட்டாதிமாதமுதற் கார்த்திகை மாதம்வரை கூடும். ஆயினும் புரட்டாதிமாதத்து அபரபக்கமே சிலாக்கியம். அப்பக்கத்திற் சூதகமுதலிய இடையூறு ஏதேனுமுண்டாயின் அதன்பின்வருந் திதிகளையுபயோகப் படுத்துவதென்றும் இச்சிராத்தம் உத்தமவேதியர்களை விளித்தியற்றி யூட்டவேண்டும் இலதேற் சிராத்தம்நாசமாம் இச்சிராத்தத்தில் தந்தைவழியின் மூவருக்குந் தாய்வழியின் மூவருக்கும், விசுவதேவரிருவருக்கும், விஷ்ணுவொருவருக்குமாக ஒன்பது வேதியருக்குத் திருப்திசெய்யவேண்டும், வறியனாயின்,

தந்தைவழி தாய்வழியென்ற இரண்டிற்கும் விசுவதேவர்விஷ்ணுவென்ற இரண்டிற்குமாக நான்குவேதியர்கட்கு ஊட்டலாம் தன் கையிலொன்றுமில்லாதவன், வேதியரிடம் யாசித்தேனுமியற்றுக! அரிதெனின், அரையரிடம் யாசித்தியற்றுக! அரிதெனின் வணிககரிடம் யாசித்தியற்றுக! அரிதெனின், சற்சூத்திரரிடம்யாசித்தியற்றுக! அரிதெனின், பாற்பசவுக்கேதேனும்வாயிறையிடுக! அரிதெனின்விலங்குகள் வசிக்கிறகாட்டிற்சென்று இருகரங்களாலும்வயிற்றின்மோதிக்கொண்டுகதியிலேன் என்செய்வேனெனக்கண்ணீருகுத்து எமது பிதிர்க்களே கேண்மின்! யான்யாதுமிலேன் தருவாருமில்ர் அதனுன்மாளயமாற்ற வலியற்றேன் கருணையுளீர்! பிழைபொறுத்தருண்மினெனவாயான் முழக்கல்வேண்டும். இன்னணஞ்செய்யின் அளப்பில்லா அந்தணருக்கருத்துமின்பந் தென்புலத்தார்க்குளதாகும் செய்தவனும் எல்லாநலமுமடைவன் இச்சிராத்தத்திற்குப்பதிதர் கரத்திருந்து யாதொன்றும் யாசித் துபயோகிக்கொணுது இயன்றபூரியும் அவசியங் கொடுக்கவேண்டும். இன்னமும்; புரட்டாதிமாதமுழுதும் ஒரு பூசுரனுக்கேயூட்டிடினும் ஐப்பசிமாதத்தில் அபரபக்கத்தி லூட்டிடினும் அபரபக்கத்துச் சப்தமி துவாதசிதொடங்கி அமாவாசையளவும் மூன்று பூசுரருக்கு ஊட்டிடினும் நன்மையுண்டாம் இத்தை மகவில்லாக் கைணியும் புருடணிமித்தஞ் செய்யவேண்டும்.

இன்னமு மிப்படிக்காய பாவநிவாரண சரித்திரங்கள், இராமதனுக்கோடிக்கு அளவிறந்தன வுள அவைகளை நவில்வ்தெனின் யாவருக்குஞ் சாத்தியமன்றென் றறிக. இம்மட்டிற்சேதுவிற்பிரதானமான இருபத்துநான்கு தீர்த்தங்களின் விவரணங்களையுந்துலக்சிச் சொல்லலாயிற்று இதன்மேலுஞ் சொல்வதியாதெனின்.

உரு–வது

பாலோடை தீர்த்தமகுத்துவம்.

முற்கூறிய தேவிபட்டினத்திற்குமேற்பாரிசமாய்ச்சேதுவில் புல்லாரண்யமென்னும் வனத்தில் தச்சிணபக்கம் ஸ்ரீராமச்சந்திர

ன்தருப்பைபிற் சயனம்பண்ணிய இடமே, இப்பொழுது திருப்புல்லாணியெனப் பெயர் விளங்கிக்கொண்டு ஒருக்ஷேத்திரமாகவிருக்கின்றது. அவ்விடத்தில் (க்ஷீரகுண்டம்) பாலோடையென்றுஓர் தீர்த்தமுண்டு. அதன்வரலாறேதென்னில்; முற்கலமா முனியென்பவர் அவ்விடத்தில் விஷ்ணுவைக்குறித்துத் தவமிழைத்துஒருயாகமுஞ் செய்தார். அப்போதுவிஷ்ணு, லட்சுமிசமேதராய்ப்பிரசன்னராகி, அவிப்பாகமுண்டு, அம்முனிவர்,க்ஷீரயாகஞ்செய்யவேண்டும். அதற்குக் காலை மாலை இரண்டுகாலங்களினும் பால்குறைவில்லாதிருக்க அனுக்கிரகஞ் செய்குதியென்று கேட்டுக்கொண்டபடி-அவ்வுழித்தானே விஸ்வகருமாவினல் விசித்திரமான தடாகங் கட்டுவிக்கும்படிக்கும், அதனிடைக் காமதேனுவைப்பால்கறந்து அக்காலங்களில் நிரப்பும் படிக்குந் திட்டஞ்செய்து."அதற்கிதுமுதற்பாலோடையென்று பெயர் விளங்கும், இதனுடை ஸ்நானம் பண்ணினவர்கள் பவித்திரராவார்கள்" என அனுக்கிரகஞ்செய்தபடிஓர்தீர்த்தமாய் விளங்கிக்கொண்டிருக்கிறது. அங்கணேஅம்முற்கலமுனி பலயாண்டு வேள்விசெய்து முடிவில்விஷ்ணுவுருவடைந்தனர். காசிபர் மனைவிகளாகிய விநதையென்பவளுங்கத்துருவையென்பவளுந் தேவேந்திரனுடைய சுவேதப்பரியாகிய உச்சைச்சிரவத்தைக்கண்டு கத்துருவை, இப்பரியின்வாலிற்கறுப்பிறக்கிறதென்க விநதை அல்லவென்றாள். உடனே இருவருக்கும் வாக்குவாதம்வந்து சொன்னபடி மெய்ப்பிக்காதார் மெய்ப்பித்தார்க்கு அடிமையாவதென்று சபதஞ்செய்து கொள்ளலானார்கள். அப்போது கத்துருவை தன்மக்களாகிய சர்ப்பங்களையழைத்து, நீங்கள் உச்சைச் சிரவத்தின்வாலிற் கறுப்புண் டாக்குங்கோ ளென்றாள். அதற்குக் கார்க்கோடகன் தவிர மற்றப் பாந்தள்க ளொவ்வாமல் தாயிட்ட சாபத்திற் குள்ளாயின. கார்க்கோடகனவன் தேவலோகஞ்சென்று சுவேதப்பரியின் வாலில் தனது சாமர்த்தியத்தாற் கறுப்புக்காட்டி விநதையையும் அவள்புத்திரன்கலுழனையும் அடிமைத்தரங்கொண்ட வஞ்சகக் குத்திரத்தைக் காசிபர்தெரிவித்தபடி ஒழிக்கவென்று கத்துருவையும் அவள் பிள்ளைகளான நாகங்களும் பாலோடைக்கரையையெய்திஅவ்வோடையில்மூன்று பகல் கத்துருவை ஸ்நானஞ் செய்தனள் அப்போழ்து "உனது தீமை தீர்ந்தது" என்று அசரீரி வசனம்பிறந்தது. அதைக்கேட்டு மகிழ்வெய்திய தாயுமக்களுந் தங்கள் பதியுறைந்து வாழ்ந்திருந்தனர்.

உ

கடவுள் துணை.

உசு-வது கபிதீர்த்த மருத்துவம்.

ஸ்ரீராமருடைய சைன்னியங்களானவானரகணங்களெல்லாம் ஓர்தடாகமுண்டுசெய்து அதில் ஸ்நானம்பண்ணிக்கரையேறி இதற்கனேக புண்ணியமுண்டாயிருக்கக் கடவதென்று வரங்கொடுத்தன. பிறவும் அவைகள் காகுத்தனைப்பணிந்து தேவரீர் இந்தத் தீர்த்தத்திற்கு நல்லவரங்களுண்டாகக் கடாக்ஷிக்கவேண்டுமெனலும், ராகவன் களிசிறந்து "கங்கை பிரயாகையாதி நதிகளின்மூழ்குகிறபலனும், வேதநான்கு மோதுகிற பலனும், சிவனை விஷ்ணுவைப் பிரமனை வழிபடுகிற பலனும் மகம் பல புரிகிற பலனும், மஹாமந்திரம் பல ஓதுகிறபலனும் இதிற் குடைகிறவர்கட்குஉண்டாகுக" என்றருளினன். அஞ்ஞான்று அவ்வரத்தை வழுத்தி அயன், ஆதித்தன், ஈந்திரன், இந்திராதி எண்டிசைப் பாலர், விசுவதேவர், வசுக்கள், சாத்தியராதிவானோர். குற்சகர், அத்ததிரி, பிருகு, கௌதமர், அகஸ்தியர், கண்ணுவர், கௌசிகர், சுதீக்கிணர், பராசரர், ஜனகர், நாரதர்முதலிய மாதவரனைவரும் அத்தீர்த்தத்தில்முழுகி இது கபிதீர்த்தமென்ற பேர்கொண்டு நீடூழி விளங்குகவென்று மருளினர். இத்தீர்த்தம் சேதுவில் இராமேசருடைய பதிக்கு மேற்குத்திக்கில் ஆறுகடிகை வழிதூரத்திருக்கின்றது. இந்தத் தீர்த்தமிருக்குந் தலத்தை இப்போது பாம்பன் எனப்பெயர் பன்னுவர். முற்காலத்திற் காதிமைந்தனன கௌசிகர் வசிஷ்டரைப்போல்தாமும் பிரம்மரிஷி யாகவேண்டுமென்று வடதிசையில் ஓராரண்யத்தில் கௌசிகநதி தீரத்தில் புனல்பொறிகளையொடுக்கி விடயங்களில் விருப்பு வெறுப்பின்றி ஆனி ஆடி மதிகளிற் பஞ்சாக்கினி மத்தியிலும், மாசி பங்குனியில் ஜலத்திலும், புரட்டாசி ஆவணி மற்ற மதிகளில் வெள்ளிடையிலும் நிருவாணமாய் நட்ட கற்போல் தேவ வருஷத்தில் ஆயிரமாண்டு தபஞ்செய்தார். அதை அழிக்கவென்று உம்பர்களா லனுப்பப்பட்ட அரம்பையானவளை விசுவாமித்திரர் வீக்ஷணித்து நீ! கல்லாய் நிற்குதி என்று சபித்தார். அந்தப்படி அவள் பதினுபிரவருஷ நின்றபோது, ஆங்குஹரனைக்குறித்துத் தவமியற்றிய அகஸ்

தியர் சிஷியனாகிய சுவேதமாமுனிவருடைய நோன்புக்கிடையூறு விளைத்த அங்காரசையென்னும் இராக்கத ஸ்திரீயைக் கொன்று விடென்று அம்முனிவர் அரம்பை யாகிய கற்சிலையை யேவினார். உடனே சிலையுமவளைத் துரத்திக்கொண்டே யாமியத்திக்குநோக்கிச்சென்றது. இறுதியிலந்த இராக்ஷசியானவள் கபிதீர்த்தத்தின் கண்ணே வீழ்ந்தாள். தொடர்ந்துவந்த கல்லுருவானது, அவளையமிழ்த்தி வதைத்து அந்நீரில் நனைந்தவுடனே பண்டை அரம்பையாகி இராமலிங்கத்தை வணங்கிக்கொண்டு தேவருலகு புக்கனள். அரக்கியானவளும் கபிதீர்த்தமகத்துவத்தால், முந்திய அகஸ்தியர் சாபந் தவிர்ந்து தேவப்பெண்ணாகிய கிருதாசியென்னும் பழைய சொரூபம்பெற்று அமரருலகெய்தினாள். [கபி-குரங்கு.]

௨௭ - ௨அ - வது

சரசுவதி, காயத்திரி தீர்த்தமகுத்துவம்.

ஓர்காலத்திற் சிருஷ்டிதேவனாகியபிரமாவானவர், மிகச்சௌந்தரியவதியாகிய (வாக்கின்றைபல்)வாணியென்னும் ஓர்பெண்ணையுண்டுபண்ணி, அவளைக்கூடற்கு மோஹித்தார். அதுதெரிந்தஅப்பெண் சம்மதியாது ஓர்மானாகச் செல்லுகையில் பிரமா கலையாயாகத் தொடர்ந்தார். அஃதோர்ந்த கருணசகாய சுவாமியாஞ் சிவபெருமானார் வில்லும் அம்புங் கைக்கொண்டு ஓர் வேடனாயெதிர்ப்பட்டுக் கலையாய் நின்ற அயன்பேரில் ஒரு பகழியைவிட்டுச் சிரசைக்கண்டித்து உயிரைவாங்கிவிட்டார். அது தெரிந்த சரச்சுவதியும் காத்திரியும் தங்கணாயக னுயிர்பெறும்படி கந்தமாதனத்தின்கண் இரண்டு தீர்த்தங்களை யுண்டுசெய்து கொண்டு அவற்றினிடமாய்த் திரிசந்தி காலந்தோறும் ஸ்நானஞ்செய்து கிரமப்படி பஞ்சாட்சர மந்திரத்தை யுச்சரித்தபடியே நெடுநாளாக நல்ல தபத்தைச் செய்தார்கள். அதற்குப் பரமசிவன் காக்ஷிகொடுத்துப் பிரமதேவனை உயிர்பெறும்படிசெய்து அவனுக்கு வேதநீதிகளைப்போதித்து, அவ்விரண்டு தீர்த்தங்கட்கும் நல்ல வரப்பிரசாதநல்கி அந்தர்த்தானமாய் ஆவரணித்துவிட்டார். அந்தத்தீர்த்தங்களிரண்டும் சரசுவதிதீர்த்தமென்றும், காயத்திரிதீர்த்தமென்

றும், பெயர் பெற்று இராமேசர் பதியிலிருந்துகொண் டிருக்கின்றன.

அபிமன்னுவின் புத்திரனான பரிச்சித்துராஜாவுக்குச் சிரிங்கிரிஷி சாபத்தால் தக்ககன்தீண்டுவானென்றபயமுண்டாகிச் சமுத்திரத்தின்மே லிருப்பிடமுண்டாக்கி அங்குத்தானே அவ்வரசனிருக்கிற வவதரம் தக்ககனாகிய பாந்தள் ஓர் பிராமணனாகச் சமுத்திரக்கரையி லுலாவிற்று. அப்போது காசிபனென்னும் வேதியனாகிய மஹாவிஷமந்திரவாதி அவ்வேதியனைக்கண்டு தன்மந்திரபலத்தை வழுத்தி அங்ஙன் விஷாக்கினியால் தக்ககன் பட்டுப்போம்படிசெய்த வடவிருக்கத்தை முற்போலத் தளிர்த் திருக்கும்படி செய்தான். அதை அந்த நாகமெச்சி அனேக நாகமணிகளை யுமிழ்ந்து இவைகளை நீரெடுத்துக்கொண்டுபோம், என்னியதியைமுடித்துக்கொள்கிறே னென்றதற்கிணங்கி, அம்மணிகளைக் கைப்பற்றிச்சென்ற காசிபன் பரிச்சித்து பாம்புகடித் திறந்தானென்னுமொழி வெளிவந்ததன்மேல், யாவராலு நிந்திக்கப்பட்டான். அப்பால் காசிபன் மனதாரச்செய்த பிழையைப் போக்கவென்று சாகல்லியமா முனிவர் சாற்றியபடி, சரச்சுவதி, காயத்திரியென்னும் இரண்டு தீர்த்தங்களிலும் ஸ்நானம் பண்ணியிருந்தனன். அப்போது அவ்விரண்டு சத்திகளுந் தோன்றி, அறம் வளரும்படிக்கும், மறமொழியும்படிக்கும், இராஜத்துரோகந் தொலையும்படிக்குங் கடாக்ஷித்து அத்தடங்களுண் மறைந்துபோனார்கள்.

உ௯-வது

இரணவிமோசன தீர்த்தமகத்துவம்.

கந்தமாதனத்தில் இரண விமோசன மென ஒரு தீர்த்தமுண்டு. அதில் ஸ்நானஞ்செய்பவர்களுக்கு இரணமென்கிற மூவகைக் கடனுந்தீர்ந்து பவித்திரமுண்டாம். ஏனைய கடனுந் தீரும். தரித்திரமுமகலும். மூவகைக்கடன் யாதெனில், ரிஷிதபோதனர்கள் கடன், தேவாதிகள் கடன் பிதிர்க்கள் கடன் என்றும். பிரமசரிய நிலையில் வேதாகம புராண விசாரணையில்லாததுரிஷிதபோ

தனர்கள் கடனாகும். யாகாதி கிருத்தியங்களியற்றாதது தேவாதிகள் கடனாகும். புத்திரப்பேறில்லாதது பிதிர்க்கள் கடனாகும்.

௩௦-வது,
பாண்டவதீர்த்த மகுத்துவம்.

பாண்டவர்கள் ராஜசூயயாகம் நிறைவேற்றுமுன், இலட்சுமிதீர்த்தமாடவந்தகாலே: அவர்களா லுண்டுபண்ணப்பட்டது பாண்டவதீர்த்தமாகும் அதுவுங் கந்தமாதனச் சார்பி லிருக்கின்றது. அதில் ஸ்நானஞ் செய்வர்கட்கும் புநிதம் லபிக்கும் அவ்விடத்திற் பிராமண போஜனஞ் செய்விக்கின் மிக்கபலன் சித்தியாம்.

௩௧-வது தேவதீர்த்த மகுத்துவம்.

தேவர்கள் மஹேசுரயாகஞ்செய்தபோதுண்டாக்கியது ஒரு தீர்த்தம், அதுதேவதீர்த்தமெனப் பெயர் விளங்கிக்கொண்டு கந்தமாதனச் சாரலிலிருக்கின்றது அதனுடைய ஸ்நானமும்மிகு விசேஷமே இஷ்டகாமிய சித்தியை அளிக்கும்.

௩௨-வது சுக்கிரீவதீர்த்த மகுத்துவம்.

வானர ராஜனாகிய சுக்கிரீவனா லுண்டாக்கப்பட்டது ஓர்தீர்த்தம் அதுகந்தமாதனச்சார்பில் சுக்கிரீவதீர்த்தமெனப்பெயர்விளங்காநிற்கும் அதனுடைய ஸ்நானமும் மிக்க மகுத்துவமுள்ளதே.

௩௩-வது நளதீர்த்த மகுத்துவம்.

சேனாதிபதியாகிய நளனாலுண்டுசெய்தது நளதீர்த்தமாகும் அதுவுந் தன்னிடம் ஸ்நானஞ் செய்வார்கட்கு நல்லபுண்ணிய நல்கிக்கொண்டு சேதுவிலிருக்கின்றது.

௩௪-வது நீலதீர்த்த மகுத்துவம்.

நீலனாலே உண்டுபண்ணியது நீல தீர்த்தமாகும், அதுவுந்தன்பால் முழுகுபவர்கட்குத் தக்க சுகந் தந்துகொண்டு சேதுவிலிருக்கின்றது.

௩௫-வது பசுக்கண்ணதீர்த்த மகுத்துவம்.

வானரவீரனான பசுக்கண்ணனா லுண்டாகியது பசுக்கண்ண தீர்த்தமாகும். அதுவும் தன்னுழை ஸ்நானஞ் செய்வாருக்கு நற்பலனை யுதவிக்கொண்டு சேதுவி லிருக்கின்றது.

௩௬-வது அங்கததீர்த்த மகுத்துவம்.

இது வாலிமைந்தனான அங்கதனா லுண்டாக்கப்பட்ட தீர்த்தம்.

௩௭-வது கயதீர்த்த மகுத்துவம்.

இது கயனாலுண்டாக்கப்பட்ட தீர்த்தம்.

௩௮-வது சரபதீர்த்த மகுத்துவம்.

இது சரபனா லுண்டாக்கப்பட்ட தீர்த்தம்.

௩௯-வது நரதீர்த்த மகுத்துவம்.

நரனாலுண்டாக்கப்பட்ட தீர்த்தம்.

௪௰-வது பனசதீர்த்த மகுத்துவம்.

இது பனசனா லுண்டாக்கப்பட்ட தீர்த்தம்.

௪௧-வது கவையதீர்த்த மகுத்துவம்

கவையனா லுண்டாக்கப்பட்ட தீர்த்தம்.

௪௨-வது குமுததீர்த்த மகுத்துவம்.

குமுதனா லுண்டாக்கப்பட்ட தீர்த்தம்.

மற்றும்வானர வீரர்களாலுண்டாக்கப்பட்ட தீர்த்தங்களுஞ் சேதுவி லிருக்கின்றன. அவைகளில் தோய்வார்கட்கும், நல்ல க்ஷேமாரோக்கியங்க ளுண்டாகும்.

௪௩-வது விபீஷணதீர்த்த மகுத்துவம்.

இராவண சகோதரனும் விபீஷணனா லுண்டுசெய்த விபீஷண தீர்த்தமுஞ் சேதுவி லிருக்கின்றது. அதன் ஸ்நானமுநலனுளதே.

௪௪. ௪௫. ௪௬. ௪௭.

விபீஷணன் மந்திரிகளாய் வீரன், வீரகேதனன், நாரணன், நாரணியன், என்பவர்களுண்டாக்கிய நான்குதீர்த்தங்களுஞ்சேதுவில் அவரவர்பெயரால் விளங்கிக்கொண் டிருக்கின்றன. அவைகளிற் குடைவார்களும் நல்லபலன் எய்துவார்கள்.

௪௮-வது நாகதீர்த்த மகுத்துவம்.

அனந்தாதி அஷ்டநாகங்களானிருமித்த நாகதீர்த்தமென்று சேதுவிலுண்டு. அதனுடைய முழுக்கும் மகிமையுள்ளதே.

இன்னமுங் கந்தமாதனச் சார்பெங்கனுந் தேவர்களானும் முனிவர்களானுந் தங்கள் தங்கள் புண்ய பலன்களாற் பலசமையத்து முண்டாக்கப்பட்ட தீர்த்தங்கள் பலவுண்டென்றும் இங்ஙனம் அறியற்பாற்று. அப்படியே இராமேசருடைய தரிசனமுங் கயிங்கரியங்களும் சொலற்கரிய மகத்துவமா யிருக்கிறதென்றும் நீ யறிக.

ஸ்ரீராமசுவாமி

அர்ச்சனைசெய்த மகுத்துவம்.

இப்படிவேதவியாசர் மாணக்கராகிய சூதமகாரிஷியிடத்தில் ஸ்ரீராமநாதனுடைய மகிமைகளைக்கேட்ட ரிஷிகளெல்லாம் மகா ஆனந்தசந்தோஷங்களை யடைந்து விண்ணப்பஞ் செய்கிறார்கள். எப்படியென்றால், வாரீர் ? சூதமகாரிஷியே ! தேவரீருடைய மகிமை நாங்களென்னவென்று சொல்லப்போகிறோம் தமிழ் சாகரக் கடலிலே நீந்திக் குளித்துத்திரிவதுந் தேவரீரேயல்லாமல் வேறே ஒருவரையுங் கண்டதுமில்லை. தேவரீருக்கு ஒப்புச்சொல்லவும்மற்றொருவரையுங்காணோம். அல்லாமலும் வேதவியாச மகாரிஷியினுடைய அனுக்கிரகங்களைப்பெற்று சகலகேழ்விகளையும் அறிந்திருக்கிறீர்கள் தங்கள் வாக்கினால் சேதுமகுத்துவத்தைக் கேட்டவெங்களுக்கு வேறேஒன்றுந்தேவையில்லை. ஆகிலும்ஒருஉத்தரங் கேழ்க்கிறோம். அளவற்ற மகிமைபொருந்திய ஸ்ரீராமநாதனை தசரதகுமாரராகிய ஸ்ரீராமச்சந்திரமூர்த்தி யெப்படி பூசையண்ணினார் அந்தக்கிரமங்களை யெங்களுக்குச் சொல்லவேணுமென்று நைமியசாரண்யத்துரிஷிகள் கேழ்க்க சூதமகாமுனிசொல்லத் தொடங்கினார்.

கேளுங்கள் மகாரிஷிகளே ஸ்ரீராமச்சந்திரர் வானராதிகளுடன் புரப்பட்டு தெர்ப்பசயனத்தில் சயனஞ்செய்து முன்சொல்லியிருக்கிறபடிநளன்வானராதிகளால் சேதுபந்தனஞ்செய்துசுவேதகிரிபோய் சேனைகளிரங்கி இருந்துக்கொண்டு இலங்கைக்கதிபதியாகிய ராவனேஸ்பரன் முதலாகிய ராக்ஷதசயின்யங்களுடனெதிர்த்து யுத்தகளத்தில் ராவனேஸ்வரன்முதலாகிய சகலமானசைன்னியங்களையுஞ் சங்காரஞ்செய்து சரணாகதியென்று வந்தடைந்த விபீஷணருக்கு இலங்காபுரியை பட்டாபிஷேகஞ்சூட்டி அப்பால் சீதாதேவியையுங் கூட்டிக்கொண்டு புஷ்பகவிமானத்தில் அனுமார்முதலான வானரவீரர்களுடனும், அயோத்திக்கு வரும்போது கந்தமாதனகிரிச் சார்பில் வந்திரங்கி தீர்த்தங்களுக்கெல்லாம் மேலாகிய தனுக்கோடி தீர்த்தத்தை உண்டுபண்ணி சகலபடைகளையும் அழைத்துக்கொண்டு புஷ்பகவிமானத்தில் வரும்போது இராவனேஸ்வரனுடைய பிர்மஹத்தி பிடித்து புஷ்பகவிமானத்தை மரித்துஸ்ரீராமரைச்சுத்திக்கொண்டுவந்தது அதுகாரணத்தைகூடவந்த விபீஷணர் அரிந்து அந்ததோஷம் நீங்கச் சிவபூஜைபண்ணவேணுமென்றுகந்தமாதனகிரிச்சாரலில் சேதுக்கரையில்கொண்டுவந்து புஷ்பகவிமானத்தை நிறுத்தி அந்தச்சமயத்தில் அகஸ்தியரும் மகாரிஷிகளும் மற்றுமுள்ள பெரியோர்களும் இராவண சங்காரஞ்செய்து தங்களுடைய இடுக்கந்தீர்த்த ஸ்ரீராமச்சந்திரமூர்த்தியைவந்து காணவேணுமென்று ஆனந்தசந்தோஷங்களுடனே சிஷர்களையும் பத்தினிகளையுங் கூட்டிக்கொண்டு கூட்டங்கூட்டமாகப்புரப்பட்டு ஸ்ரீராமரை வந்துகண்டு ஆசீர்வாதஞ்செய்து அனேகதோத்திரங்கள்செய்ய ஸ்ரீராமச்சந்திரரும் ஆனந்தசந்தோஷத்துடனிருந்தார்.

அப்போது மகாரிஷிகளைப்பார்த்து இலங்கைக்கி இராஜனாகிய இராவனேஸ்வரனைக் கொன்ற தோஷந்தீர ஒரு பரிகாரஞ் சொல்ல வேணுமென்று கேழ்க்க அப்போது முனியீஸ்பரர்கள் யெல்லோருங்கேட்டு ஆலோசனைபன்னிச் சொல்லுவார்கள். வாரும் ஸ்ரீராமச்சந்திரமூர்த்தி தேவரீருக்கு தெரியாதது ஒன்றுமில்லை எங்களைக்கேட்டதினால் தெரிந்தமாத்திரம்சொல்லுகிறோம் கேளுமென்று ஸ்ரீராமச்சந்திரமூர்த்திக்குச் சொல்லுகிறார்கள். பூலோகத்தில்வந்து அவதரித்து ராஜாங்கத்துக்குள்பட்டிருப்பத

ஞல் க்ஷத்திரிய தருமப்படிக்கி தேவரீரைப் பிடித்திருக்கிற பிர்ம ஹத்திதோஷம் போகவேணுமாஞல் இந்த கெந்தமாதனகிரியில் சிவபூசைபண்ணிஞல் பிர்மஹத்திதோஷம் நிவர்த்தியாகிவிடும். மோட்சகங்களையும்கொடுக்கும். இதல்லாமல் கந்தமாதனத்திலொரு தடவைசிவபூசைபண்ணிஞல் காசிக்ஷேத்திரத்தில் அனேகங்கோடி இலிங்கப்பிரதிஷ்டை செய்தபலன் தேவரீராலே பூசிக்கப்பட்ட இந்த இராமலிங்கத்திஞல் கிடைக்கும். ஆனபடியிஞல் அதிசாக்கிரதையோடுஞ் சிவப்பிரதிஷ்டைக்கி ஆரம்பம் செய்யவேணுமென்று சொன்ஞர்கள்.

அந்தவார்த்தை ஸ்ரீராமச்சந்திரர்கேட்டு மனமகிழ்ச்சியுடன் சொல்லுவார் வாருங்கள் மகாரிஷிகளே அப்படியே செய்கிறேன் அந்தப்பிரதிஷ்டைப்பலன் நீடூளிகாலம்விளங்கும்படி பொருந்தின நாள்பார்த்துச்சொல்லுங்கள் யென்று கேழ்க அகஸ்தியர் முதலான சகலரிஷியீஸ்பராளுங்கூடி சாஸ்திரங்களை ஆராய்ந்து ஆனிமீ சுக்கிலபக்ஷம், புதவாரம், அஸ்தநக்ஷத்திரம், தசமி திதி ரிஷப லக்கினங்கூடிய சுபதினத்தில் உஷக்காலத்தில் சிவபிரதிஷ்டை செய்ய தேவரீருக்குப் பொருந்தி யிருக்குதென்று சொன்ஞர்கள் அதைக்கேட்டு உடனே ஸ்ரீராமச்சந்திரருஞ்சந்தோஷத்தையடைந்து கந்தமாதனகிரியி லிருந்துகொண்டு அனுமாரை அழைத்துச்சொல்லுவார் அனுமாரே நாளை உஷக்காலபூசைக்கி சிவலிங்கங்கொண்டு வரவேணும் ஆகையால்அதிசாக்கிரதையோடுபூலோககைலாசமாகியு காசிக்ஷேத்திரம்போய் சிவலிங்கங்கொண்டு வரவேணும் யென்று அனுப்பிவிட்டு சிவப்பிரதிஷ்டைக்கி ஆகவேண்டிய சாக்கிரதைகளை தாழ்வில்லாமல் சேகரித்தார்கள்.

இப்பால் ஸ்ரீராமச்சந்திர மூர்த்திபிடம் விடைபெற்றுக்கொண்டு கந்தமாதனத்திலிருந்து விஸ்வரூபங்கொண்டு ஆகாயமார்க்கத்திலெழும்பி காசிமகாக்ஷேத்திரத்தைக்கண்டு கங்காநதியில்ஸ்நானம்பண்ணி நிருவிகல்ப நிஷ்டைகூடியிருந்த ஈஸ்வரப் பிரசாதம் பெற்று லிங்கங்கொண்டுவருமுன்னுதாக ரிஷியீஸ்பரரால் முகூர்த்தம்வைத்த நாழிகைகள் ஆச்சுதென்று ரிஷியீஸ்பராளுஞ்சொல்ல ஸ்ரீராமச்சந்திரரும் அனுமார் வரவில்லையென்று யெதிர்பார்த்துக் கொண்டிருந்தார். அந்த சமயத்தில் அகஸ்தியர், கௌதமர், பரா

சர், வியாசர், சுகர் முதலான ரிஷிகளும் ஸ்ரீராமச்சந்திரரிடத்தில் அனுமார் இதுவரையில் வரவில்லை. முகூர்த்தவேளை தப்பிவிடும். ஆகையினால் மகாலக்ஷுமி ஆகிய சீதாதேவியுடைய இருகரங்களினால் மணலென்று சொல்லுகிற பூமியைஉருத்திப்பிடித்துப்பவளநிரம்பொருந்தி மகாலிங்கசொரூபம் வெகுரமணீகரமாய்தெய்வீகமாய் கர்ப்பூரதீபம்போல் பிரகாசிக்கின்ற மகாலிங்கம் ஆகச்சே அந்த இலிங்கத்தைவைத்துப் பூசிக்கலாமென்று சகலரிஷிகளுஞ் சொல்ல ஸ்ரீராமச்சந்திரருங் கேட்டு ஆனந்தசந்தோஷமாக யெல்லாம் பிரமமயமென்று அதிசாக்கிரதையோடுஞ் சீதாசமேதராய் இலக்ஷுமணர் முதலானவர்களோடும் ஸ்நானஞ்செய்து நேமநிஷ்டைகள் முடித்து விபூதிருத்திராக்ஷங்கள் அணிந்துசிவபூசைக்குண்டான சாமான்களும் புஷ்பங்களும் பத்திரங்களும் தருவித்துக் கொண்டு சொர்ணபீடத்தில் சீதாபிராட்டியால் பாணித்தமகாலிங்கத்தைவைத்து தவவேடம்பூண்டு புலித்தோலாசனத்தி லிருந்து அறுபதினாயிரங்கோடி தீர்த்தங்களைவரவழைத்து மந்திரதியானங்களுடன் அர்க்கியஞ் சமர்ப்பித்து ஸ்ரீராமச்சந்திரமூர்த்தி வடதிசைமுகமாகயிருந்து பூசைஸ்தானத்தை திக்குபந்தனஞ் செய்து மங்களவாத்தியத்துடன் வெண்தாமரைப் புஷ்பம்போலே யிருக்கிற யிறுதய ஆசனத்திலே சோதிமயமாயிருக்கிற இலிங்கத்தில் துவாதசாந்தத்தி லிருக்கிற சிவனைஆவாகனம்பன்னி சகலமந்திர தந்திர தியானங்களுடன் அபிஷேக நெய்வேதனஞ் சோடச உபசாரபூசைகளும் பகிர்முகமாகவும் மாதனபூசையாகப் பண்ணினவராய் மந்திரங்களினால் தாழ்ந்திரைஞ்சிதிக்குபந்தனம் அவகுண்டனங் தேனுமுத்திரை மகாமுத்திரையுங்கொடுத்துபூசாஸ்தானத்தை சுத்திசெய்து அர்க்கியபாத்தியங்கள் முன்னால்சொல்லுகின்ற கோடிதீர்த்தஜலத்தைமந்திரத்தினால்தியானித்துசுத்திசெய்துதன்னையும் புரோட்சித்துக்கொண்டு பூஜாதிரவியங்களையும் புரோட்சித்து அப்பால் சீதாலக்ஷுமி கையினால் நேமிக்கப்பட்ட சிவலிங்கத்துக்கு அஷ்டபுஷ்பஞ்சாத்தி சுத்தஜல மபிஷேகம்பண்ணிஎண்ணெக்காப்பு மஞ்சள்காப்பு நெல்லிக்காப்பு பஞ்சாமிருதம் பஞ்சகௌவியம்பசுவுநெய்இளநீர்வில்வக்குளம்புகள்கர்ப்பூரம்பால்தயிர் தேன் சர்க்கரை கருப்பஞ்சாறு வாழைப்பழம் மாம்பழம் பிலாப்பழமுதலான பழவர்க்கங்கள் ரசவர்க்கங்கள் இதுகளால் அபிஷேகஞ்செய்து மந்திரதியானஞ்செய்து கோடி தீர்த்தமும் அபிஷேகம்

பண்ணி அஷ்டபுஷ்பஞ்சாத்தி தூபதீபமும் அர்க்கியமுங் கொடுத்து நவரத்தினகஜிதமுள்ள சொர்ணபீடத்தில் உயர்ந்த பரிவட்ட பீதாம்பரங்கள்சாத்தி சந்தன களபகஸ்தூரிகள் அணிந்து அருகு கொன்றை வில்வம் முதலான சகலபுஷ்பங்களுஞ் சாத்திஇப்பால் மகாகணபதியையுந் தியானித்து பிரார்த்தித்துக்கொண்டு பஞ்சப்பிர்மங்களும் இருதய முதலான அங்கங்களுஞ் சிவனுடனேகூடி இருக்கிறவர்களாகிப் பாவித்து தூபதீபமுதலான சோடச உபசாரங்களுஞ் செய்து ஆசமன அர்க்கியங்கொடுத்து திவ்யான்னங்களுஞ் சித்திரான்னங்களும் பால் பழஞ் சர்க்கரை பலகாரங்களும் நெய்வேத்தியம் வைத்து நானுவிதமான கறிவர்க்கங்களும் வாசனை பொருந்திய ஜலம் முதலானதுகளும் படைத்து நிரிக்ஷணுதி சுத்தி பண்ணி அர்க்கிய ஜலத்தினுல் புரோக்ஷித்து மந்திரத்தினுல் அபிமந்திரித்து கெவுரிகையினுல் நிவேதித்த பாவனைசெய்து சுவாமியுடையகரங்களைத்துடைத்து தாம்பூல முதலானதும் திவ்யகரங்களால் நிவேதனஞ்செய்து சோடச உபசாரங்களுஞ்செய்து அஞ்சலிபுஷ்பஞ்சாத்தி கர்ப்பூரதீபங்கொடுத்து அனந்தாதிகளால்தோத்திரஞ்செய்து மூலத்தினுல் புஷ்பஞ்சாத்திரைஞ்சி மகாமுத்திரை பஞ்சமுகமுத்திரையுங்கொடுத்து ஜெபமாலையை நீரீச்சணுதி சுத்திசெய்து அபிமந்திரித்து இடதுகையினுல்புஷ்பங்கள்வைத்துக்கொண்டு ஜெபமாலையினுல் நூத்தெட்டு அர்ச்சனைசெய்து மந்திரவிதி பூர்வகமாய்ச்சாத்தி இருகரங்களுந் தனித்தனி மந்திரத்தினுலே பத்துருச்செபித்து சுவாமிக்கு அக்கினிதிக்கில் சடுத்தாசனம் பூசித்து அதில் சிவகிருபைஆசனத்தில் ஆவாகனுதி ஜெபாந்தமாக பூசித்து தோத்திரஞ்செய்து பின்பு சுவாமிக்கிமேல்புரத்தில்யோகபீடம் வித்தியாபீடம் பூசித்து அர்க்கியங்கொடுத்து சுவாமிக்கு புஷ்பஞ்சாத்தி நாமகரணம் இராமநாதனென்று அனேகவேதமந்திரச்சுருதிவாக்கியப் பிரமாணங்களினுல் ஸ்தோத்திரஞ்செய்து சீதாதேவிசமேதராய் இலக்ஷுமணருடனே யெழுந்திருந்து சகல தேவரிஷிகளுந் தபோதனுதிகளும் புடைசூழ்ந்துவர ஸ்ரீராமச்சந்திரமூர்த்தி முப்பிரதட்சணம்வந்து சாஷ்டாங்க அஷ்டாங்கப்பஞ்சாங்கத்துடன் நமஸ்காரஞ்செய்து எழுந்திருந்து சிரசின்மேல் இருகைகூப்பி ஆனந்தக்கூத்தாடி தேகம்மயிர்க்கூச்செறிய புளகாங்கிதராக கண்ணீர்த்ததும்பத் தோத்திரஞ்செய்து அடிக்கடி இருகரங்களைகொட்டி யாதொன்றுந் தோன்றுமல் எங்குஞ் சுயம்பிர

காசமாய் மகாஆனந்தங்களுடன் அன்புகள்பெருகி நிற்கிறபோது அந்த இராமலிங்கத்தில்யிருந்து கோடிசூரியப்பிரகாசம்போல் தேசஸ்துடன் மான்மழுச் சதுர்புஜங்காளகண்ட திரிநேத்திர சந்திர கெங்காதர சடதாரியாய் மகரகேயூர குண்டல மணிமகுடதாரியாய் ஆடையாபரண பூஷணாலங்கிர்தஅர்த்தநாரிபாகமாய்அறவாபரண கங்கண விபூதிருத்ராக்ஷதாரியாய் புலியாடையும் மத்தகஜ போர்வையும் ரிஷபவாகனமுந் தோற்றும்படி பார்வதிசமேதராக முப்பத்து முக்கோடி தேவர்களும் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷி கின்னரர் கிம்புருடர் கருடகாந்தருவர் சித்தவித்தியாதரர் கணநாதர் தும்புருநாரதர் அஷ்டவசுக்கள் முதலாகிய சிவபக்தர்களும் புடைசூழ பிரத்தியட்சமாய் யெழுந்தருளி ஸ்ரீராமச்சந்திரரைப் பார்த்து வாரும் ஸ்ரீராமச்சந்திராவென்றார். உடனே பிர்மஹத்தியும் ஸ்ரீமன் நாராயணனைக்கண்ட பனியெப்படி விலகுமோ அப்படிப்போலவும் வெப்புக்காலத்தில் வீசுகின்ற சண்டமாருதகாற்றுப்போலவும் பிர்மஹத்தி நிவர்த்தியாகிவிட்டது.

இப்பால் கைலாசபதியாகிய பரமேஸ்வரனும் ஸ்ரீராமச்சந்திரரைப்பார்த்துச் சொல்லுவார். வாராய் ஸ்ரீராமச்சந்திராசேதுதனுக்கோடியில் சங்கல்ப்ப விதிப்படி ஸ்நானஞ்செய்து பின்பு இந்தகந்தமாதனத்தில் சாஸ்திரயுக்தமாக பூசைமுதலான ஜெபங்கள் செய்து நம்மை வரவழைத்தபடியால் உம்முடைய துன்பமாகிய பாவங்களெல்லாம் நீங்கிவிட்டது. அதுபோல் பூலோகத்தில் பக்தி வைராக்கியமாய் சேதுதனுக்கோடி முதலிய சகலமானதீர்த்தங்களிலுஞ் சங்கல்ப்ப விதிப்படி ஸ்நானஞ்செய்து வணங்கி ஒழுக்கத்துடன் சாஸ்திரயுக்தமாக பூசைபண்ணினபேர்களுக்குச்சகலபாவ துன்பங்களும் விமோசனமாகி மோட்சசாம்பிராச்சிய கைவல்லியமாய் மேலான சாயுச்சிய பதங்களைப்பெற்று பிர்மானந்தத்தை அனுபவிக்கக் கடவர்களென்று வரங்கொடுத்து பின்னுஞ் சொல்லுவார் உம்மைப்போல் ஆர் இந்த கந்தமாதனத்தில் நம்மைப்பூசிக்கிறார்களோ அவர்களுக்கு அனேகவரப்பிரசாதங்களுடன் இஷ்டகாமிய மோட்சகாமியங்களும் பிர்மானந்தங்களு முண்டாகி சுகத்தை அடைவார்களென்று மறுபடியும் வரங்கொடுத்துபின்பு இராமலிங்கத்தில்தானே அந்தத் தேஜசுடனே மறைந்து ஸ்ரீராமநாதர் எழுந்தருளியிருந்தார்.

இப்படி ஸ்ரீராமநாதர் காட்சிகொடுத்து வரப்பிரசாதமானவுடன் அந்தவார்த்தையைக்கேட்ட சகலதேவாதிகளும் ரிஷியீஸ்பராளும் முனிவர்களுந் தபசிகளும் ரம்பாஸ்திரீகளும் விபீஷணன் சுக்கிரீபன் வானராதி முதலானபேர்களும் அவரவர்கள் தனித்தனியே மிர்த்திகைகளைப் பாணித்து வேதாகமப்பிரகாரந் தப்பாமல் சிவபூசைகள்செய்து அனேகதோத்திரங்கள் செய்துக்கொண்டிருந்தார்கள்.

கேட்டீர்களோ மகாரிஷிகளே இப்படியிருக்கிற சமயத்தில் பூலோக கைலாசமாகிய காசிக்ஷேத்திரத்திற்குச் சென்று லிங்கங்கொண்டு வரப்போன அனுமாரும்யீஸ்வரப்பிரசாதமாய் இரண்டு லிங்கம் வாங்கிக்கொண்டுமகாசாக்கிரதையோடேவிஸ்வரூபங்கொண்டு கந்தமாதனத்திலே வந்துகுதித்தார். இப்படிக்கிகுதித்தஅனுமார் ஸ்ரீராமச்சந்திரரையுஞ் சீதாதேவி இலக்ஷுமணரையும்சுக்ரீபனையும் நமஸ்காரஞ்செய்து எழுந்திருந்து பார்க்கிறபோது சிவபூசைநடந்து தோத்திரஞ் செய்கிறதை அனுமார் கண்டு உடனே மகாவிதனங்களும் ஆங்காரங்களும் பெருமூச்சுமுண்டாகி நாம் யென்னத்துக்கு அவ்வளவுதூரம்போய் லிங்கங்கொண்டுவந்தோம் வந்தும் பிரயோசனமில்லாம லிருக்கிறது. தாரைதாரையாய் கண்ணீரோட சொல்லுவார் வாருமய்யா சுவாமி தேவரீருக்கு எப்போது இந்த மனதுண்டாயிற்றோ. நான்தான் இந்த சன்மத்தில் ருகாதிகோபம் இடும்பைகளுடனே கூடிக்கொண்டு ஊண்தின்கிர பொருட்டா இன்பதுன்பங்கள் தெரியாமல் மற்கடப்புத்தியினால் நடந்துக்கொண்டு தேவராக்ஷதாள் மனிதர்களால் இம்சைகளடைந்து பிரயாசைப்படும்படியாய் யென்னுடைய மாதாபிதாஎன்னைப்பெற்று வளர்த்து பரிபாலஞ் செய்தார்கள். ஆகிலும் அப்படிக்கொத்தத் துன்பத்துக்கிடமாய்கரைகாணமல் அலைந்துதிரிந்த யென்னை தேவரீர் ரக்ஷிக்கவேணுமென்று நான்படுகின்ற சிரமங்களை யெல்லாந்தீர்த்து வெற்றி அடையும்படிக்கி கிருபைசெய்து அதினால் அனேகங் கீர்த்திகளைப் பெற்று சுத்தவீரதத்துவத்தோடும் யாவருங் கொண்டாடும்படி யென்னைப்பெற்ற மாதாவைப்போல் தேவரீர் ஆதறித்துக்கொண்டு வந்திருக்க இப்போது அடியேன் என்னகுற்றம் பண்ணினேன்.

தேவரீர் சீதாதேவியின் பொருட்டாக எவ்வளவு பிரயாசங்களை அடைந்தீர்கள். அதுமூலமாக சுக்கிரீவன் விபீஷணன் முத

லான வானராதிகள் தான்சுகமாய் பட்டாபிஷேகஞ் செய்துக்கொண்டுகவலைதுக்க முதலானதுநீங்கி சுகமாய் வாழ்ந்திருக்கவேண்டுமென்றும் தேவரீர்பின்னோடே ஏவல்பணிவிடை கேட்டுக்கொண்டும் வந்திருக்கிறார்கள். இப்பால் அடியேனுந் தேவரீருக்கு ஏவல்பணிவிடைசெய்து வந்தேன்.

ஆனால் சகலதேவர்களும் முனியீஸ்பராளும் வானராதிகளுஞ் சுத்தவீரர்களுங் கோடானகோடிபேர்க ளிருக்க அவர்களெல்லாம் விட்டுப்போட்டு யென்னைப்போய்சிவலிங்கங்கொண்டுவரச்சொன்னது இதற்குத்தானே இப்படி அவர்களெல்லாம் பார்த்துத் தூஷணிக்க அவமானம் பண்ணவேணுமென்று திருவுளத்தில் ஆலோசித்துக்கொண்டு அனிப்பிவித்தது இதற்குத்தானே நான் அனேகம் பிரயாசைகளடைந்து காசிக்குப் போய் சருகோடே சருகாய் தேகத்தை உலர்த்தி தவநிஷ்டைசெய்து கைலாசபதியிடத்தில் வரப்பிரசாதம்பெற்றுதேவரீர்பூசைக்கிச்சிவலிங்கங்கொண்டு வந்தேன் அதற்குள்ளாகயேதுகாரணத்தினால் மணலைக்குவித்துப் பூசைமுடித்துப் போட்டீர்கள் அதைக்குறித்து யோசித்துப்பேசவேண்டிய தென்னகாரணமிருக்கின்றது. ஆனால் ஒருகாரியம்முன் செய்த தபோபலத்தினால் இப்போது சோடசகலை பொருந்திய மகாலிங்கத்தை வைத்துப் பூசை பண்ணும்படியான நன்மையும் புண்ணியங்களும் பெற்றிருக்கவேண்டும். அதுபோலவே புண்ணியஞ் செய்யாத பேர்களுக்கு கொடுத்துவைக்காதென்றுவேதவாக்கியங்கள் முறையிடுகிறது. என்னளவில்நிசமாய்ப்பலித்ததென்று மகாவிசனத்தை யடைந்தவராய் தேவரீர் யிப்படி நினைத்து கைதவரவிட்டபோதே இனிமேலெனக்குக் கெதியென்ன யிருக்கின்றது. லோகத்தில் அவரவர்கள் செய்தபாவ புண்ணியங்கள் அவரவர்கள் அனுபவிப்பதுபோல் நான்செய்த பாவபுண்ணியம் நான்தான் அனுபவிக்கவேணும் இனிமேல் தேவரீருக்குஊழியஞ்செய்துசிரப்பிக்காத இந்த சடலத்தை இனிமேல் வைத்திருப்பதில் யாருக்கென்ன பிரயோஜனம் ஆனதால் உயிரைமாய்த்து கொண்டாலொழிய என்னுடைய கவலையுந் துன்பமுந் தீராதென்று அனுமாரானவர் அனேகவிதமாய்ப்பிரலாபித்துஎனதுபிராணாதாரமாகிய சகலஜனரக்ஷகாதீனதயாபரா தபோவைராக்கிய சுத்தவீராஆபத்பாந்தவா அநாதரக்ஷகா வென்று ஸ்ரீராமச்சந்திரருடைய பாதார

விந்தத்தில் அடித்து மோதிவிழுந்து அலரி கோவென்ற சத்தத்துடன் அழுது மூர்ச்சையாகிக் கிடக்கிற அனுமாரைப் பார்த்துக் குஞ்சிரிப்புக்கொண்டு பரிபூரணமாய்க் கிருபைகூர்ந்து ஸ்ரீராமச் சந்திரமூர்த்தி வாரியெடுத்துக்கட்டியணைத்து மேலேபட்டிருக்கிற தூசிகள் முதலான கண்ணீர்களையுந்துடைத்து முதுகைத்தடவிக் கொடுத்துச் சொல்லுவார் வாராய் அனுமானே! நீயேன் விசாரப் படுகிறாய் யென்னுடைய நிலைமையுந் தத்துவக்கியானமாகிய சரிதைகிரிகை யோகமான சுத்தசைதன்னியப் பிரகாசமான ஒளிவே எங்கும் நிறைந்திருக்கின்றது அதின்மகிமை உனக்குத் தெரியாதோ இதுவல்லாமல் நான்முதலாகிய சகல உயிர்களுடைய நிலைகளையும் அறிவாய். அதுவும் யானறிவேன் அது எப்படி யென்றால் சகல ஆத்மாக்களாகிய ஜீவன்களெல்லாம் ஒன்றே அல்லாமல் இரண்டல்ல அப்படி யூகித்துப்பார்க்கிறபோது நீவேறு நான்வேறாக மாட்டாதே ஆனால் பிறக்கிறதும்,இறக்கிறதும், முன்செய்தகர்மானுவப்படி நடக்கும் அந்த வினைக்கீடாய் பாவபுண்ணியம் நன்மை தீமை நரகசொர்க்கங்களுங் கிடைக்கும் யிவ்வளவு காரியங்களும் நிறைந்திருக்கும் நானுவிதரூபமான பேதாபேதங்களெல்லாம் மனக்கட்டே தவிர வேறில்லை நீயென்றும், நானென்றும், பேதமுண்டா நான்செய்தது நீசெய்தல்லவா நீசெய்த இன்பதுன்பம் நான் செய்ததல்லவா யெங்குஞ் சுயம்பிரகாசமாய் பிர்மானந்த காமியமாய் முன்பின்னில்லாமல் ஆண்பெண்ணிரண்டு அதில் அலியில்லாமல் ஆதியந்தம் ஆதாரம் நிராதாரஞ் சுகந்துக்கம்மில்லாமல் விளங்கிக்கொண்டிருப்பதுவே ஆத்மசொரூபம் அப்படிக்கொற்ற ஆத்மசொரூபத்தை நீதானவனுப்பார்த்து வணங்காமல் இப்படிக் கொற்ற அகங்காரம் மனதிலே எப்போது உண்டாயிற்றோ அது விரோதமல்லவா வீணான அகங்காரத்தை மேலிட்டால் பாவபுண்ணிய கிர்த்தியங்கள் தோற்றுமல் ஆத்மாவுக்குக் கெடுதலுண்டாகும் ஆனதால் இந்த அகங்காரத்தை நீக்கி தர்மசிந்தனைகள் மனதில் நினைத்து இந்திரிய நிக்கிரகம் போராண்மைகளையுந்தவிழ்த்துவிட்டு நன்றாய் யோசித்துப்பார்த்தால் சகலதேவாதிகளுந்துதிசெய்கின்ற கர்த்தனுடைய பாதாரவிந்தத்தில் மனஸ்கரித்து நமஸ்காரஞ்செய்து வணங்கித் தோத்திரஞ்செய்து அதுவே உள்ளும்பிரம்பாய் ஒன்றுகிநின்ற அறிவே சொரூபமாய் விளங்கப்படுகின்ற பிர்மசொரூபமாய் விளங்கப்படுகின்ற பிர்மசொரூபமே நிட்சய

மானவஸ்து மற்றப்பிரபஞ்சமெல்லாஞ் சுத்தப்பொய்யாகும் அப்போது நல்லது, பொல்லது, இரண்டும் மயக்கமாகும்.

அதினாலே கோடானகோடி ஜென்மங்கள் தேவமானிடமிருக பட்சி தாவரங்களாய் பிறக்கவேணும். இந்தவகை தெரியாமல்சகலமானபேர்களுங் கெட்டுப்போய் நன்மார்க்கங்களை அனுசரிக்காமல் மானிடதேகத்தைப்பெற்ற நமக்கு யென்னபேத மிருக்குதென்று அனுமாரானவருக்குச்சொல்லிப் பின்னும் ஸ்ரீராமச்சந்திரர் சொல்லுகிறார் வாராய் அனுமானே! இந்தயின்பதுன்பஞ் சுகந்துக்கம் நீ நானென்று ஆறெண்ணக்கூடும் அபிமானத்தினாலே மானத்தை காப்பாற்றுகின்ற பேர்களுக்கே பிறப்புயிறப்புமில்லை. இந்தப்பிறப்பில் இடும்புகள் போய்விட்டுதானால் இன்பதுன்பங்கள் போய்விடும். இப்படிச்சகல உயிர்களும் பிறந்துபிறந்து அழியும். உன்னைப்போல் விவேகமுள்ளபேர்கள் துஷ்டசாவுகாசமான யிடும்புகள் ஒருபொருளென்றெண்ணுவார்களா? அதுயெப்படியென்றால் ஒரு கண்ணில்லாத அந்தகன் பாதைமார்க்கம் போம்பொழுதுதெரியாமல் அப்பாதையி லிருக்கின்ற மடுவாகிய குழியில் விழுந்தால் மறுபடியும் அந்தப்பாதை வரக்கூடாதே? அப்படி வந்தால் மறுபடியும் அந்த மடுவான குழியில் தானே விழவேணும் வேறு நல்மார்க்கத்துக் கிடமுண்டா? அப்படிபோல்தான் கடவுளனுக்கிரகமுண்டாயிருக்கும்வரை உண்டாகிற இன்பதுன்ப கஷ்டங்கள் நீங்கி சுகம் அனுபவிக்கிறது அதற்குப்பிரமாணம்! எப்படியென்றால் வேதாந்தசாஸ்திர சுருதிவாக்கியங்களில் போதிக்கின்ற ஞானத்தை தெளிந்துபார்த்தால் மூன்றுவாக்கியத்துக்குள்ளே சகலமுந்தோற்றப்படுமாகையால் அப்படிக்கொற்ற வாக்கியார்த்தமும் அனுபவங்களும் பார்ப்பது தமிழ்ச்சாகரக் கடலாகிய வேதஞானக்கடலில் மூழ்கிக்கரையேறி இன்பதுன்பநீங்கி பரமசுகத்தை அனுபவிக்கின்ற ஆசாரியருடைய சன்னிதானத்தில் அவர் பாததாமரைக் கன்பனாய்ப் பணிவிடைசெய்து அவருடைய கிருபாகடாட்ச வீட்சண்ணியத்தினால் அபிமானம் அக்ஞானம் விவேகசூணியம் முதலானதும் நீ கிரகத்து வேஷாதிகளையும்போக்கினால் நீயே நானாய் நானே நீயாய் தோன்றும் அப்படித்தோன்றினால் கால் தேச வர்த்தமானமெல்லாம் ஒன்றாய் சுயம்பிரகாசமாய் வேறுபாடில்லாமல் எங்கும் தோற்றப்படும் அப்படிக்கில்லாமல் நீவீ

ஞன அகங்காரத்தினுல் தன்னைமரந்து இப்படித் துக்கத்தை யடைகிறுய் நீயாரு நானுரு மந்தஜீவ ஜெந்துக்கள்யாரு இரண் டாகப்பாவித்ததினுல் தான்பேதபபற்றது ஒன்ருகநினைத்துப்பார் த்தால் நீசெய்தேன்நான்செய்தேன் யென்றுவழக்குக்கிடமாய்யிரு க்கின்றது யிதுவெல்லாம் புராண நீதியினுல்உண்டாக்கப்பட்டது. மனதினுடைய வேற்றுமையே யல்லாது வேரில்லை அப்படி யிருப் பதால் நான்மனதார உனக்கு வஞ்சகம் நினைக்கவில்லை உன்னைக் குற்றமாய் யெண்ணவில்லை ஆனதால் சிவலிங்கப்பிரதிஷ்டைபண் ணிபூசை முடிப்பதர்க்கு வைத்திருந்த முகூர்த்தந் தவரிப்போகிற தாகயிருந்ததினுல் அந்த சமயத்துக்குநீவராததினுல் பெரியோர்க ளாகிய ரிஷிஸீஸ்பராள் சொல்ப்படி ஜானகியினுல்பாணித்தமிர்த் திகை லிங்கத்தைதானேவைத்து நாம் பூசை பண்ணிேனும் இது உண்மையானகாரியம். நான் உன்னை லேசாகநினைத்துத் தள்ளிப் போட்டு நான்பூசைபண்ணினதாய் கோபித்துக்கொண்டு விதனப் படுகிறது அழகல்ல கோபத்தை விட்டுப்போட்டு நீ காசியிலிரு ந்து கொண்டுவந்த இலிங்கத்தை உன்னுடைய பேராலே பிரதிஷ் டைசெய்து வணங்கு நீ அனேகம் ராக்ஷதாளைக்கொன்றிருக்கிற தோஷங்களெல்லாம் உன்னைவிட்டு நீங்கிப்போம் ஆனபடியினுல் சாம்பசிவமூர்த்தி கிருபைபெற்றுக்கொண்டு வந்த இலிங்கத்தை பிரதிஷ்டைசெய்து அற்சனை செய்வையானுல் நீ செய்யப்பட்ட அனுமலிங்கத்தைப் பூலோகத்தில் சகலமான ஜனங்களும் முன் னேவணங்கி அப்பால் நம்மிட்டபேரால் பிரதிஷ்டைசெய்த லிங்கத் தை பின்னுல் வணங்கினுர்களே ஆனுல் அவர்களுக்குச்சகலபாவங் களுஞ் சகலதோஷங்களும், சகலதுன்பங்களுஞ், சகலவினைப்போ கங்களும், பேய் பூத வேதாளங்களும், விலகிப்போய் இஷ்டகாமி யங்களும் மோக்ஷானந்தகளும், பெற்று தனகனவஸ்து வாகனுதி களுடன் சகலசம்பத்துக்களும் பெற்று, சுகமாய் வாழ்வார்கள் இப்படிக்கொத்த அனுமலிங்கத்தை இராமலிங்கத்துடன் ஒன்ரு ய்த்துதிசெய்து வருகின்றபுண்ணிய சாலிகளுக்கு யாகங்கள், யெ க்கியங்கள், தானதருமங்கள், ஸ்தலதெரிசனங்கள் இதுவெல்லாம் வேண்டியதில்லை. இதுவல்லாமல் இந்த கந்தமானகிரியில் நான் சீதை லெட்சுமணன் விபீஷணன் முதலாகியபேர் பூசைசெய்திரு க்கிறதில் அந்தந்தச் சிவலிங்கத்தில் பரமேஸ்வரன் நிரைந்து விள ங்குவதிலும் நீ பூசைசெய்கின்ற சிவலிங்கத்தில் பிரதானமாய்விள

ங்கக்கடவதென்றுஞ் சிரஞ்சீவியாகயிருக்க கடவதென்றும் வரப்பிரசாதங்குடுத்து வாராய் அனுமானே!யென்றறிவித்துப்பின்னஞ் சொல்லுகிறார் உன்னுடைய துன்பங்களெல்லாந்தீர்ந்து விடும்படியாய் காசியிலிருந்து கொண்டுவந்த சிவலிங்கத்தை பிரதிஷ்டைசெய்து வணங்கு உன்னால் பூசிக்கக்கப்பட்ட அனுமேசனையும் நம்மால் பூசிக்கப்பட்ட இராமேசனையும் ஆயிரம் யோசினைக்கப்புரமிருந்து நினைத்தபேர்களுக்கும் அனேகபுண்ணிய முண்டாகிஅஞ்ஞான பாசங்கள் நீங்கிப்பரமபதத்தை யடைவார்களென்றுஸ்ரீராமர் சொல்லிப் பிரதிஷ்டை செய்யச்சொல்ல அதற்கு அனுமான் சொல்லுகிறார்.

தேவரீர் பூசித்த லிங்கத்தைப் பேர்த்தெரிந்து போட்டு அடியேன் கொண்டுவந்திருக்கிற லிங்கத்தைப் பிரதிஷ்டைசெய்யவேணுமென்று சொன்னார் அப்போது ஸ்ரீராமர் சொல்லுவார் நான் பிரதிஷ்டை செய்திருக்கிற சிவலிங்கத்தை இனிமேல் பேதிக்கக் கூடாது. பாதாலலோக பரியந்தம் ஈரேழுபதினாலு புவனங்களூந் தட்டுருவும்படி வேரூன்றி எங்கும் வியாபித்திருக்கும் ஆனபடியினால் உன்னால் கூடாது. அசைக்கிறதற்கு யென்று ஸ்ரீராமர்சொல்லிமுன்னொரு காலத்தில் அக்கினிமலையாய் நின்ற சிவக்கொழுந்தின் அடிகண்டாலும் மகாமேருமுதலான அஷ்டகுல பருவதங்களின் அடிகண்டாலும் இந்தச்சிவலிங்கத்தின் அடிகாண முடியாது அப்படி உனக்குப் பலமிருந்தால் நான்செய்த சிவப்பிரதிஷ்டை லிங்கத்தைப் பிடுங்கிவிட்டு நீகொண்டுவந்திருக்கிறசிவலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்யென்று ஸ்ரீராமர்சொல்ல இந்த வார்த்தையைக் கேட்ட அனுமார் சந்தோஷத்தையடைந்து இந்த மிர்த்திகையான மண்ணை பேர்த்தெரிகிறதா கடினமென்றுத் தாவிக்குதி போட்டுக் கொண்டுபோய் சகல தேவாதிகளுந் தபோதனர்களாகிய ரிஷியீஸ்பரர்களுஞ் சித்தசாரணாதிகளுங் காணும்படியாய்ஓடிப்போய்சீதாதேவி கையினால் பாணித்த ஸ்ரீராமலிங்கத்தைப் பிடித்து அசைத்தார் அசையவில்லை மிர்த்திகைக்கு யெவ்வளவு பெலமென்று பஞ்ச பூதங்களையும் அடக்கி மகா உக்கிரமத்துடன் அசைத்தார் அசையவில்லை மூச்சடக்கிகொண்டு அனேகந்தடவை மகாவிசைகளோடே பேர்த்து அசைத்தார் அப்படியிருந்தும் ஸ்ரீராமலிங்கம் அணுவளவாவது அசைவுகொடுக்கவில்லை பின்னும்மகா ஆங்காரங்

கொண்டு வாலைமுறுக்கிப் பல்லை நெறநெறவென்றுகடித்து வாலி லேகட்டியிருக்கிற மணிகளெல்லாங் கணகணவென்று முழங்கிக் கொண்டு சத்தாடம்பரத்துடன் தலைக்குமேலே ஆகாசவெளியைப் பார்க்கவாலை நீட்டிக்கொண்டு மகாகெருவத்தோடே பிடித்தசைத் தார் அப்படியும் மசைவுக்கிடமில்லை பின்னும் அனுமாருக்குத் தோன்ருமல் மரம்போலவும் மலைகள்போலவும் வெகுவாகயென் னிக்கொண்டு மன்னுன இந்த மிர்த்திகைலிங்கத்துக்கு இவ்வளவு பெலமாவென்று விஸ்வரூபங்கொண்டு அனுமாரானவர் இரண்டு கரங்களையும் பூமியில் யூன்றிக்கொண்டு வாலினுல் சிவலிங்கத்தை செம்மையாய் யிருகும்படியாய் இலிங்கந்தெரியாமல் சுத்திஇருக்கி க்கொண்டு ஆகாசத்தில் உண்டான சந்திரசூரியாள் நட்சத்திரங் கள் புண்ணியலோகத்தார் முதலான சகலருங் கிடுகிடுவென்று திகிலெடுத்து நடுங்கும்படி ஆகாசத்தில் அந்தரலாகுகொண்டு கா லிரண்டையும் உயரத்தூக்கி வெகுசவுரிய புஜபல பராக்கிரமத்து டன் யெழும்பி விசைகொண்டசைக்கும்போது பூமி அந்தரசொர் க்கமூன்று லோகங்களும், அஷ்டதிசைகளும், ஈரேழுபதினுலுபுவ னங்களும், அண்டபிண்ட சராசரங்களும், அகிலலோகங்களும், அஷ்டகுலபருவதங்களுந், திக்குதிகாந்தரங்களுஞ், சத்தசமுத்தி ரங்களுஞ், சந்திரசூரியர் நட்சத்திரமுதலான சராசரங்களி லுள் ள எறும்பு கடையானைமுதல் யெண்பத்து நான்கு நூருயிரங் கோடி ஜீவாத்மாக்களும், அதினுடைய கெற்பங்களும் அசையப் பட்டு கணகணவென்றும், நெறநெறவென்றுங், கலகலவென்றும், வெப்புகாலத்திடிபோல் முழங்கியும் அல்லோகல்லோலமாய்ச் சுழ ண்டு அசைந்ததேயல்லாது ஸ்ரீராமராலேபிரதிஷ்டைசெய்து பூசி க்கப்பட்ட ஸ்ரீராமலிங்கங் கொஞ்சங்கூட அசையவில்லைஅப்பவுங் கர்த்தருடையசெயல் அனுமாருக்குத்தோற்ருமல் பின்னும் விசை கொண்டெழும்பி வாலைமுறுக்கி யிறுக்கி கெட்டிபண்ணி அசைக் கிறபோது அனுமாருடைய வாலானது நைந்து அறுந்து யெழும் பினவாக்கில் தலைகுப்புறக் கரணம்போட்டுக்கொண்டு கூப்பிடு தூரம் ஸ்ரீராமலிங்கத்துக்கு வடபாரிசத்தில் மகாமேருகொடுமுடி யை இந்தப்படித் தன்னுடைய பிதாவாகிய வாயுபகவான் பேர்த் தெரிந்ததுபோல் தாஞெரு கொடுமுடிபோல் அலறிக்கொண்டு பூமியிலே விழுந்தார்.

அப்படிவிழுந்த அனுமாருக்கு வாயினாலேயும், மூக்குனாலேயும், இரத்தங்கள்சிந்தி எலும்புகள் நொறுங்கி தலைமண்டைகள் உடைந்து கண்விழி பிதிங்கி நவத்துவாரங்கள் வழியே குபீர்குபீரென்று ரத்தங்கள் கொப்பளிக்க ஆறுகள்போல ரெத்தங்கள் பெருக அனுமார்விழுந்த அதிற்சியால் பூமியில் பெலத்துவாரம் போல் பள்ளமாய் தண்ணீர் ஊற்றுவரையில் பள்ளமாகித் தண்ணீர்பெருக இரத்தமுஞ் சலமும் ஒன்றோடொன்றாய் பெருகிச் சமுத்திரத்தில் அலைமோத இப்படி அனுமாரானவர் தலைகுப்புற்று மூர்ச்சையடைந்து நாக்குவெளியேநீட்டிக்கிடக்க தேவாதிகளும், வானராதிகளும், ரிஷிமுனிசித்தாதிகளும், அனுமாருடையவருத்தங்களைக்கண்டு ஆச்சரியமடைந்து ஸ்ரீராமச்சந்திரருடையஅன்புகளையும் ஸ்ரீராமநாதனுடைய கிருபானந்தமகிமைகளையும் நினைத்து புகழ்ந்து கொண்டாடி நின்றவர்களாய் ஸ்ரீராமலிங்கத்தின்பேரில் பாதிவால் சுத்தியிருக்கப் பாதிவாலறுந்து ஒருகூப்பிடுதூரம் அனுமார்போய் விழுந்ததை சகலமான பேர்களுங்கண்டு கிடுகிடுவென்று நடுங்கிவேர்த்து பிர்மித்து ஸ்ரீராமர்சீதை இலக்ஷுமணர் விபிஷணர் வானரவீராதிகள் தேவாதிகள் தவமுனிரிஷிகள் சித்தர்கள் எல்லோரும் நின்றநின்றபடியே கால்கை பதறிக்கொண்டு அனுமாரைப் பார்க்கிறபோது அவர் கிடக்கிற பரிதாபங்களைக் கண்டு சகிக்கமாட்டாமல் விசனப்படவும் அதுகண்ட ஸ்ரீராமச்சந்திரர் தாரைதாரையாய் கண்ணீர்சொரியும்படிபிரலாபித்தும் இலக்ஷுமணர்வாயிலும் வயிற்றிலும் அறைந்துக்கொண்டு துக்கப்படவுஞ், சீதாதேவியானவள் கோவென்று கூக்குரலிட்டு கடகடவென்று பூமியிலே விழுந்தழுதாள் யெழுந்திருந்து தன்னுடைய இரண்டுகையினாலேயும் அனுமாருடைய அவயவங்களை இரத்தவெள்ளத்திலிரங்கித்தடவியெடுத்தாள் அப்படியெடுக்கிறபோதுஅனுமாரானவர் நைந்துசுருண்டுபோயிருக்கிறதுகண்டு வானராதிகளும் தேவாதிகளுந்தவமுனி சித்தாதிகளுங்கண்டு அய்யோ அய்யோவென்று அபயமிட்டு முகத்தில் அறைந்துக்கொண்டு கோவென்றழுதார்கள் ஸ்ரீராமரும் அனுமாரைத் தோளோடே சேர்த்தணைத்து இந்த அவதியைப் பார்க்கவா யிருந்தோமென்று தோளோடே சேர்த்து அனுமார் தலையைத்தாங்கி மடிமேல் வைத்தார் அப்போது தலைநட்டமாக நிற்காமல் குப்புரவிழுகிறதை பக்கத்திலிருந்த சீதாதேவிகண்டு அடித்தும் விழுந்து யெழுந்து தன்னுடைய

இரண்டு கரங்களினாலேயுந் தலையைத்தாங்கிக்கொள்ள ஸ்ரீராமர் இலக்ஷுமணர் முதலான சகலமானபேர்களுங் கண்களைத்துடைத்தும், இரத்தங்களைத்துடைத்தும் கோவென்றலறி அபயமிட்டுப் புலம்புவார்கள்.

நீ இப்படிப்போயிருக்க நாங்கள் கண்ணாலே பார்க்கவுங் காலம்வந்ததே விபீஷணனை அடைக்கலங்கொள்ள நீதிசொன்னாயே! மகாவிவேகசாலியான நீஒன்றுந்தோற்றாமல் இப்படி அவதிக்குள்ளானாயே! இனியொன்றும் யோசியாமல் யென்ஜீவனைப் போக்கடிக்கிறேன். இனிமேல் உன்னைச் சாகக்கொடுத்துப் போட்டு நான் அயோத்திக்குப்போய் பட்டாபிஷேகஞ் செய்துக்கொண்டு வாழ்ந்திருக்கவுங் கூடுமோ? அரசாட்சிசெய்யவும் வேணுமா?நான் ராவணசங்காரஞ் செய்து பூஜையைமுடித்து யிவ்வளவு வெற்றி கொண்டுவந்தது. உன்னாலேயல்லாது மற்றப்பேராலே யில்லையே நானென்னசெய்யப் போகிறேன் உன்னை நம்பியிருந்தேன். அயோத்தியாபுரி பட்டணத்தில் என்தம்பிமாருடன் யென்னைச்சேர்த்து வைக்காமல் இரண்டாகஞ்செய்து போட்டாயே? அனுமானே! யென்று ஸ்ரீராமர் கண்ணீர் ஆராகவோட புலம்ப சீதாதேவி முதலானபேர்களும் அப்படியே அனுமாருடைய புஜபல பராக்கிரமங்களையும் மகிமைகளையும் நினைத்து நினைத்து கண்ணீர்கள் ஆராய்ப் பெருகிவோட,அழுது புலம்புகிறபோது ஸ்ரீராமச்சந்திரருடைய கண்ணீர்களானது அனுமாருடைய தேகத்தில்போய் பெருகிறதினால் மயிற்காலும் புகளிளெல்லாம் புகுந்து தாபசோப மயக்கங்களெல்லாந் தீர்ந்து கண்களை முழித்துப்பார்த்து உடம்பில்ச் செயலுண்டாகி தேகங்களெல்லாம் பலம்உண்டாக்கி ஸ்ரீராமச்சந்திரர் சீதாதேவி இலக்ஷுமணர் முதலானபேர்களுடையகண்ணீர்களால் ஸ்தானம்'பண்ணப்பட்டதினால் கந்தமாதனத்தில் சேதுவில் ஸ்ரீராமநாதனைத் தொட்டுப் பிடுங்கிப் போடவேணுமென்று நினைத்து அபசாரஞ்செய்த பாபம் விமோசனமாகி அஞ்ஞானங்களெல்லாந் தீர்ந்து ஞானோதயமாய் ராகத்துவேஷாதிகளற்று யெங்குஞ் சச்சிதானந்தமயமாய்த்தோற்றப்பட்டதினால் ஸ்ரீராமச்சந்திரமூர்த்தியையுஞ் சீதாதேவியையும் அனேகதோத்திரங்கள் செய்து வணங்கி சாஸ்திரநாமங்களால் ஸ்ரீராமச்சந்திரருடைய கருணைப் பிரவாகங்களையுஞ் சொல்லி தோத்திரஞ்செய்து அடியேன்செய்த

அபசாரங்களைப் பொருத்து இரக்ஷிக்கவேண்டிய தென்று சீதாலக்ஷுமிசமேதரான ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியை வணங்கி நமஸ்கரித்து எழுந்திருந்துகைகட்டி வாய்பொத்திக்கொண்டு நின்றாரப்போதுசகலத்திராளுஞ் சந்தோஷமடைந்து அனுமாரைக்கொண்டாடினார்கள்.

ஸ்ரீராமச்சந்திரரும் அனுமாரைப்பார்த்து சொல்லுவார்வீரரும் பிள்ளாய் அனுமானே ! நான்மகாரிஷிகள் வாக்கியப்படிக்கும் ஆகம்சாஸ்திரப்படிக்குஞ் சீதாதேவிகையினால் பாணித்த சிவலிங்கத்தைவைத்து பூசைபண்ணினோம். அதைக்குறித்து நீ இப்படிக்கெல்லாம் மனதில் அகங்காரங் கொண்டு கோபித்துக்கொள்ளலாமா ? நான்பூசித்த ஸ்ரீராமலிங்கத்தை முப்பத்துமுக்கோடி தேவர்களும் நாற்பத்தெண்ணாயிரம் ரிஷியீஸ்பராளுங் கின்னரர் கிம்புருடர் கருடகாந்தருவர்களும் ஆதிசேடனுந் தேவேந்திராதிகளும் பிர்மாதிகளும் விஷ்ணுவாதிகளும் ருத்ராதிகளும் ஒன்றாய்க்கூடிப் பேதிக்கவேணு மென்றாலும் பேதிக்கக் கூடாதே அப்படியிருக்க நீர்வீணாகச் சிறுபிள்ளை புத்தியைப்போல் இப்படிக்கொற்ற யோசனைசெய்தாய் மகாபெலம்பொருந்திய உன்னை யென்னை தேவாதி தேவர்களை யெதிர்த்துசின்னாபின்னப்படும்படி யுத்தஞ்செய்துஇப்போது மடிந்துபோன இராவணன் இதற்கு முன்னொருகாலத்தில் யென்னய்யனாகிய சாம்பசிவமூர்த்தி வாசம்பண்ணிக் கொண்டிருக்கப்பட்ட கைலாசமலையைப்பேர்த்துப்போட வேணுமென்றுயோசித்துப் பட்டபாடு இதற்குமுன் கேட்டிருக்கவில்லையா மூன் அந்தப் பரமேஸ்வரன் திருவிளையாட்டு நிமித்தியம் தேவாதிகள் கெர்வத்தை அடக்கவேண்டியதாய் ஒருதுரும்பையெடுத்து முன்னேபோட்டு பேதிக்கச்சொன்னபோது சகலமானபேரும் யோசித்து யெல்லோருங் கூடிக்கொண்டு யெடுத்தும் முடியவில்லை, உன்னுடையபிதாவாகிய வாயுபகவான் அனேக ஆங்காரங்கொண்டுசூராவளியாய் சுழன்று சுழன்று பெலமெல்லாங்கூட்டி அடித்தும்மயங்கிப்போனதேதவிர, அந்த அணுவைப்பேதிக்கக்கூடாமற் போய்விட்டது. அப்போதல்லவா அவனசையாமல் "அணுவசயாது" என்ற பழமொழிசொல்லி தேவாதிகள் யெல்லாம் யென்னய்யனை வணங்கிதோத்திரஞ் செய்தார்கள்.

இதுவும் நீ கேட்டதில்லையா இந்தசதுர்தெசபுவனமும் அண்டபிண்டசராசரமும் விளங்காநின்ற யெறும்புகடையானைமுதல்

யெண்பத்துநான்கு நூறாயிரங்கோடி ஜீவாத்மாக்களிலும் நிறைந்து எள்ளுக்குள் ளெண்ணேபோலவும் யெங்கும் லோகநாயகனுப் ஆதிமத்யாந்தரகிதனுய் திரிநேத்திரத்தோடும் விளங்கியகர்த்தனுடைய மகிமைகள் உனக்குத்தெரியாத தொன்றுண்டா அனேக வியாகரணம் முதலாகியசகலசாஸ்திரங்களும் அரிந்தஉனக்குநான் சொல்லவேண்டியதென்ன யிருக்கிறது. அடியாற்கெளியன் துஷ்டசங்காரன் சிஷ்டபரிபாலனன் காலனுக்கு காலனுனபடியினுல் அப்படிப்பட்ட கர்த்தவ்யத்துக்கு நீசெய்த அபசாரம்பொருக்காதபடியினுல் இப்படிக்கொத்த துன்பங்களெல்லாம் நேரிடும்படியாச்சுது. ஆகிலும் நீசெய்தஅபசாரத்தை அந்தகர்த்தன் யெப்போதுந் திருவுளத்தில் கொண்டருளத்தக்கதில்லே அப்படி ஆராகிலுந் தீங்குசெய்தால் தெண்டித்தும் நன்மைசெய்தால் ரக்ஷித்தும் விளங்கிய கர்த்தன்மேலும் நீகொண்டுவந்த இலிங்கத்தைப் பிரதிஷ்டைசெய்யவேண்டியதாய் நான் பிரதிஷ்டைசெய்த மிர்த்திகை லிங்கத்தை வாலாலேசுத்திப்பிடித்து அசைத்தும் அந்தக்கர்த்தன் பொருட்டினுல் நீசெய்தவேலேயே அல்லாது வேறில்லே ஆகையினுல் இப்பவும் நீசெய்தபிழையையும்பொருத்து கருணுகடாக்ஷம் புரிந்து ரக்ஷிப்பார் உன்னேக் கைவிடமாட்டார் ஆனபடியினுல் நீ விழுந்தஅதிர்ச்சியினுல் உண்டாயிருக்கிற பாதாளகெங்கைக்கிஉன் பேரால் தீர்த்தமாய் விளங்கிக்கொண்டு பூலோகத்தில் ஸ்தானம் பண்ணினபேர்களுக்கெல்லாம் பாவங்களே நிவர்த்திசெய்து புண்ணியங்களேக்கொடுத்துக் கொண்டிருக்கும் அந்தவிடத்தில் பெருகியிருக்கிற ஜலம் ஆதிபரமேஸ்வரனுடைய ஜடாபாரத்தில் தரித்திருக்கின்ற கங்காநதியென்று சொல்லப்படும். பாதாளவாகினியாய்ப் புரப்பட்டிருக்கின்றது அந்தத் தீர்த்ததில்ஸ்நானம்பண்ணினபோகளுக்குஆயிரம் அஸ்வமேதயாகம் பண்ணினபலன் கிடைக்குங் கங்கையமுனேசரஸ்வதி மூன்றுநதியும் ஒன்ருகத் தியானித்துஸ்நானஞ்செய்தபலனிலுங் கோடிபங்கு பலன்கொடுக்கும் நீவிழுந்து பெருகியிருக்கிற தீர்த்தம் உன்பேரால் அனுமதீர்த்தமென்றுஇது முதல் பூலோகமுள்ளளவும் விளங்கிக்கொண் டிருக்கும். அந்தத் தீர்த்தக்கறையில் யார்பிதிர்களுக்கு திலதர்ப்பணஞ் சிரார்த்தபிண்டங்கள் செய்கிருர்களோ அவர்களுடைய செயல்களேநம்மால்அளவிடக்கூடாதுநீவிழுந்த அனும குண்டத்தில் சிரார்த்தங்கள்செய்யாமல் மற்றவிடங்களில் செய்கிற சிரார்த்தங்களே அவரவர்கள்

பிதுர்தேவதைகள் கோபித்துக் கொள்ளுவார்கள் அவ்வளவும் மகுத்துவமுடையதாகும்.

அந்ததீர்த்தத்தில் ஸ்னானம் பண்ணி தர்ப்பணஞ் சிரார்த்தம் முதலானதுகள் செய்யாத பேர்கள் மகாபாவிகளாகும் மகாதுன்பங்களுடையவர்களும் இந்த தீர்த்தத்தில் தண்ணீரெடுத்துதிலதர்ப்பணஞ்செய்தால் மாதாபிதா முதலானவர்கள் ? மோட்சமடைந்து நல்வாக்குக் கொடுப்பார்கள் நீபூசைபண்ணுகிற சிவலிங்கமும் இப்படியே மேலானதாய் விளங்கிக்கொண்டிருக்கும்யெங்குஞ்சிவமொன்ருய் விளங்கினலும் நாம்பிரதிஷ்டைசெய்த இராமலிங்கத்துக்கு நீபிரதிஷ்டை செய்யப்போர மகாலிங்கம் முதன்மையாக விளங்கும் அந்த விஸ்வலிங்கத்து முன்னாலே அபிஷேகம் நெய்வேதனஞ்சோடச உபசாரபூசைகளும் நடந்து அப்பாலிந்தகந்தமாதனத்தில் நாம் பிரதிஷ்டை செய்யுமுன்னே கௌதமர் அகஸ்தியர் பூசித்துக்கொண்டிருக்கிற அஸ்திரபூருவமகாதேவர்இரண்டு மகாலிங்கத்துக்கும் அபிஷேக நெய்வேதனஞ் சோடச உபசார பூசைகளும் நடந்து அதின்பிரகு நாம்பூசிக்கப்பட்ட ஸ்ரீராமநாதனுக்கு அபிஷேக நெய்வேதனம் பூசை நடந்துக்கொண்டிருக்கும் படி வாக்குக்கொடுத்தார் நீ கொண்டுவந்திருக்கிற சிவலிங்கத்தை பிரதிஷ்டைசெய்து பூசித்து வணங்கென்று வாக்குக்கொடுத்தார் ஸ்ரீராமச் சந்திரமூர்த்தி இப்படி மகாபொருமையுடன் கருணைபுரிந்து எப்போவாக்குக்கொடுத்தாரோ அப்பவேமனமகிழ்ச்சியடைந்து ஸ்ரீராமநாதனுக்கு உத்தர பாரிசத்தில் தான்கொண்டுவந்த சிவலிங்கத்திலொன்றை பிரதிஷ்டை செய்து லோகநிமித்தியமாய் பூசித்து ஒருலிங்கத்தை தன்னுடைய ஆத்மார்த்தமாய் பூசித்து வணங்கித் தோத்திரஞ்செய்தார்;

இப்பால் ஸ்ரீராமலிங்கத்தில் அனுமார் வாலினல் சுத்தி இழுத்து அசைத்தபொழுது பட்டழுத்தினது மூன்று ரேகைபோல் விளங்கிக்கொண் டிருக்கிறது இப்போதுங்காணலாங் கேட்டீர்களோ மகாரிஷிகளே யென்று நைமியசாரண்ணியத்து ரிஷிகளைப் பார்த்துச் சூதமுனி யீஸ்பரர்சொல்ல ரிஷியீஸ்பராள்சொல்லுவார்கள் இதுவரையில் நாங்கள் கேட்ட கதையினுடையவிர்த்தாந்தம் ஆச்சரியமா யிருக்கிறது அதுகாரண மென்னவென்ருல் மகாகொ

டுமைகளுந் தேவர்களுக்குஇடுக்கமும் ஸ்ரீராமச்சந்திரருக்கு துக்க முண்டாகும்படி நீதிதப்பி நடந்தச் சண்டாளனுகிற ராவணனைக் கொன்றதோஷந்தீர சிவலிங்கப் பிரதிஷ்டை பூசித்தாரென்பது சரியே அந்தராவணன் பிர்மகுலமா இல்லயே அந்தச்சண்டாளநா கிய ராவணனைச்சங்காரஞ்செய்த பிர்மஹத்தி ஸ்ரீராமசந்திரரைப் பிடிக்க வேண்டிய காரணமென்ன அதுகாரணங்களைச் சொல்ல வேணுமென்று மகாரிஷிகள் கேழ்க்கச்சூதமகாரிஷியுஞ் சொல்லு வார் நீங்கள் அரியாமை உள்ளவர்கள்போல கேட்டது மிகவு ஆச் சரியமா யிருக்கின்றது ஆகிலுசொல்லுகிறோம். இப்போது நீங் கள் கதைபுராண சாஸ்திரங்கள் கேட்டு அரிந்துணர்ந்தும் இதுகா ரணந் தெரியாமலிருந்துவிட்டீர்கள்உங்களுக்குத்தெரியும்படியாய் சவிஸ்தாரமாய்ச்சொல்லுகிறோம் கேளுங்க ளென்று ஸ்ரீராமசந் திரருக்கு பிரமஹத்திவந்த காரணங்களையும் அப்பால்ஸ்ரீராமநாத ருடைய பாதாரவிந்தத்தில் வணங்கிவிடைப் பெற்றுக்கொண்டு ஸ்ரீராமச்சந்திரர் முதலான பேர்கள் யெழுந்தருளியவிர்த்தாந்தங் களையும் நைமியசாரண்ணிய ரிஷிகளுக்கு சூதமகாரிஷியுஞ் சொ ல்லுகின்றார்.

சகூ-வது

பிரமஹத்தி விமோசன மகுத்துவம்,

இராமச்சந்திரருக்கு இராமநாதர் பிரசன்ன தரிசனந் தந்த வுடனேஇராவணன்பிரமஹத்தி இராமசுவாமியை விட்டோட்டம் பிடித்தது. அதை யாவரேனுங்கண்டுபீடிகொள்வதாயிருக்குமென் றெண்ணி, இரகுராமர் தனுவினலொரு கெபியை யுண்டாக்கி அதில் அப்பிரமஹத்தியைத்தள்ளி அதன் மத்தியிற் பைரவரைக் காவலாகவிருக்கும்படி பிரதிஷ்டைசெய்து ஓர்தீர்த்தமுண்டாக்கி அதில் ஸ்நானஞ் செய்தார். அந்தத்தீர்த்தம் பிரமஹத்திவிமோ சனமெனப் பெயர்பெற்று இராமலிங்கத்திற்கு அண்மையால் உத் தரபாகத்தி லிருக்கின்றது,

சங்கரபாண்டியன் மகுத்துவம்.

சந்திரகுலத்துதித்துப் பிராண்டிநாட்டையாண்ட சங்கரபாண்டியனென்பான் விபினவேட்டை யாடுகையில், ஓர் தருவினடியிற் புலித்தோலைப் போர்த்துக்கொண்டுநிஷ்டைசாதித்திருந்தசகலமுனிவரையும் அவர் பத்தினியையும் புலிகள்ஜோடியாயிருக்கிறதாக நினைந்து அம்பினாலெய்து கொன்றுவிட்டான், அதுகண்ட அம்முனி புத்திரனான சாங்கலன் ஆறாக் கவலைகொண்டு ஆண்டுள்ள ரிஷிகள் வாக்குப்படிசாவுற்ற தாய்தந்தையரைத் தகனஞ்செய்து, அஸ்திகளை யெடுத்துச் சென்று, அவைகளை இராமேச்சுரமென்னுந் தலத்தில்ஓர்புடைஸ்தாபனஞ்செய்து, சேதுதனுக்கோடியாதி ஸ்நானம் பண்ணிப் பிதிர்கர்மங்கள் நடாத்தி ஓராண்டுவரை இராமேச்சுரரை வழிபட்டிருக்குங்கால். ஒருநாட் கனவில் தனது தந்தை கழலுன்மீது விஷ்ணுவினுடைய பஞ்சாயுத முதலியன தரித்துவர அன்னையுடன்கண்டு களிசிறந்து தலைமீக்கொண்டு கூடல்நகர் குறுகினான். மேனிகத்திய சங்கரபாண்டியன் ஆங்குறை முனிவர்களால் தூஷிக்கப்பட்டு இனி உயிர்வாழேனென்று அக்கினிகுண்டமேற்படுத்தி அதன்கண்வீழ்தற்காகப்பிரதக்கணமாய் வந்தான். அக்கால் சிவபெருமானருளால்,ஆகாயவாணி அதிர்த்தபிரகாரம்; முனிவர்கள்சம்மதத்தோடுதீக்குண்டம்பாய்வதை நிறுத்தி, தன் பத்தினி புத்திரர்களுடன் திருவிராமேச்சுரத்தில் வந்திருந்து, ஸ்ரீராமலிங்கமூர்த்திக்கு அபிடேகம்நிவேதனமுதலிய சோடசோபசாரங்கள் நடப்பிவித்து, பத்துப்பாரம் பசும்பொன்னு நல்கி. தினமும் பிராமண போஜனஞ் செய்வித்து, தக்ஷிணைகள் பொன்னாற் பிடிபிடியாக்கொடுத்து, தானும் ஏககால போஜனமாய்ச் சதாவிரதஞ்சாதித்து, தனுக்கோடிதீர்த்தத்தில் நித்திய முழுகிக்கொண்டும்இராமலிங்கதரிசனங்கண்டுகொண்டும்வந்ததில், ருசும-ம் நாள் சாயுங்கால வேளையில் ஸ்ரீராமநாத சுவாமியின் திருக்கோவிலில் சிவஸ்தோத்திரஞ் செய்துகொண்டு நின்றஅந்தச் சங்கரபாண்டியன் முகத்திலிருந்து, கரியகாளம்போல் தேகமும், பிறைபோல் வச்சிரதந்தமுஞ் சிவந்த மயிருங், கோரை மீசையும், கருத்த தேகமுடைய பிரமஹத்திப்பேயானது அலறிக்கொண்டு வெளிப்பட்டது. அதை இராமேச்சுரர் கருணையால், தீமைலென்று

பைரவமூர்த்தி, சூலகபாலங்களுடன்தோன்றி வளைத்துப்பிடித்துக்கழுமுள்ளாற் குத்தி உயிர்கவர்ந்தார். அங்ஙனம்பாண்டியராஜனும் இராமநாதசுவாமியைப் பிரசன்னதரிசனங்கண்டு, நல்வரங்களையேற்று. அவர் இலிங்கத்தினிடமாய்த் திரோபவப்பட்ட பின்னர்த் தெய்வப்பதியைவிட்டேகி, முன்னைய முனிவர்களையுந் தரிசித்துக்கொண்டு மதுரைநக ருறைந்துய்ந்து சிவகதியெய்தினன்.

சேதுமாதவர் மகுத்துவம்.

மதுரையிற் செங்கோல்செலுத்திய சந்திரகுலத்துப்புண்ணியநிதியென்னும்பாண்டியன் இராமேச்சுரத்தின்கண்வசிக்க அபேக்ஷித்துத் தன்துசெங்கோலைப் புத்திரனிடமொப்புவித்து, இராஜபத்தினியுடன் மஹாக்ஷேத்திரமாகிய இராமேச்சுரத்தின்கண் வந்திருந்து, சங்கரபாண்டியனைப்போலவே சிவதரிசனஞ்செய்து, பலசற்கருமங்களியற்றி, விஷ்ணுவைக்குறித்து ஓர் யாகமு நிறைவேற்றினன். அவனுடைய விசுவாசத்தை அறியவேண்டுமென்று ஸ்ரீலட்சுமிதேவியானவள் மஹாவிஷ்ணுவினிடத்திற்றெரிவித்துக்கொண்டனள். அதற்கவர் சிற்றமுற்றதுகண்டு, உடனே வைகுந்தம் விட்டிழிந்து, தனுக்கோடியிலிருந்து திரும்பிவருகிற புண்ணியநிதியுடைய திருஷ்டிக்கு எட்டுப்பிராயமுள்ள பெண்ணாய் மகாதேஜசுடனே அந்தஸ்நான கெட்டத்திற்றானே காணப்பட்டாள். அச்சிறுமியை அவன்தன்னுடைய ஓர்புத்திரனுடன் உன்னையுமோர் புத்திரியாய்ப்பாதுகாப்பனென்று உறுதிசொல்லி அழைத்ததற்கு அவளுடன்பட்டுடன்சென்று, இராஜபத்தினியான விந்தாவலி என்பவள் செவ்வியகரங்களைத் தானுறையும் பத்மபீடமாய் நினைந்து, சித்ரவிசித்ரமாய்வளர்ந்து சகலசெல்வங்களையும் அபிவிர்த்தியாம்படி செய்துகொண்டிருந்தாள். விஷ்ணுமூர்த்தியானவர், தேவிபிரிந்துபோனதைப்பற்றித் திருவாழிடங்களெங்கணுந்தேடி இறுதியிற் கந்தமாதனச்சார்பில்வந்தார். ஆங்குச் சிலசேடியர்களுடன்கூடிப் பூக்கள்கொய்து மசல்விளையாடுவதைக்கண்டு, தமது சொருபங்தெரிந்தால் மறைந்தோடி விடுவளென்றெண்ணி தசரதராமன் இலிங்கபிரதிஷ்டை செய்யுங்காற் கொண்ட சிவவேடம்போலத்திருமேனியெல்லாந் திருநீறும் உருத்திராக்ஷமாலிகைகளு

மாகக்கட்டழகோங்கஅணிந்து, விரலிற்பவித்திரந்தரித்து, வெண் பட்டுடுத்தி, திரிபுண்டரந்தீட்டி, கங்காஜலத்தைக் காவடிகட்டிச் சுமந்து, எவருமிப்படிச்செய்வதனால் ஸ்ரீராமநாதனுக்குச்சரதசந் தோஷம் பெருகும்படியாய்க் காசியாத்திரைசெய்துவரும் வேதி யனைப்போற் சுத்த தவள ஸ்வரூபத்துடன்வந்து. இலக்குமியென்னு இளம்பிடியின்கரதை நாணமில்லாது பற்றியிழுத்தார். அப்போது அவளாகம் பதறிக் கையையுதறித் திமிறிப்பிடுங்கிக்கொண்டு சே டியர்களுடன் கூக்குரலிட்டாள். அதை இராஜனறிந் தோடோடி யும்வந்து, சங்கதியைவினவித் தண்டவீரர்களை அழைப்பித்து, கலகம்விளைத்த இந்தத் துஷ்டப்பிராமணனை நெட்டிக்கொண்டு போய் இராமேசருடைய சன்னிதானத் தெதிர்நிறுத்திச் செவ் வேபுடைத்துக் காலில்விலங்கிட்டுத் திருக்கோவிலுக்கு மேற்கிலு ள்ள ஒருமண்டபத்தினறைக்குள்ளாகப் போட்டுக்கபாடபந்தனஞ் செய்து காவலிருக்கும்படி செய்யுங்கோளென்று திட்டஞ்செய் தான். அப்பால் வேதியனாகிய விஷ்ணு தமது சித்விலாச சொரூ பத்தை அவ்வரசனுக்குக்கனவிற்காண்பித்தார். உடனேநித்திரை தெளிந்தெழுந்த மன்னன் தன் குமாரத்தியைப்போய்ப் பார்க்கும் போது கனவிற்கண்ட இலட்சுமி அவளாயிருக்க நனவினுங்கண்டு மகிழ்ந்தான். விடிந்தவுடன் புத்திரியைக் கூட்டிக்கொண்டு, காவ லில் வைத்திருக்கிற வேதியனை வந்துபார்த்தனன். அப்போ தவ் வேதியன் இலக்குமிநாயகனைவிஷ்ணுவாயிருக்க வீக்ஷணித்தான். அப்பால் தன்னுடைய அறியாமையைநினைந்து, வழுத்தி வழுத்தி வருந்தி, இருவரையுந்துதித்தான், அத்தருணம் மாதவனவர் அரசனே நீ புரிந்த விஷயங்களெல்லாம் மிகவும் நம்மேல் வைத்த அன்போடுள்ளனவால், அவைகளெமக் கதிகமுந்திருப்தியே உன் னுடைய விசுவாசத்திற்குத் தக்கபடி இலக்குமி மகளானாள். யாம் மருகனானோம். நின்னுடைய நீதிமிகவு முறுதியுள்ளதே. எம்மைத் தண்டித்துக் காவலில்வைத்த இவ்விடத்தில் யாமென்றும் விளங் கிக்கொண்டிருப்பாம், பரமசிவன் இங்கு மூர்த்திகரித்து வீற்றிரு ப்பதால் யாமு மிங்கிருக்கப் பிரீதிகொண்டாம். இதனாலெமக்குச் சேதுமாதவனென்று பெயர்விளங்கும். சேதுவிலுள்ள தீர்த்தங் களில் ஸ்நானஞ்செய்து இராமலிங்க தரிசனங் காண்பவர்களுங், காசியிலிருந்து கங்கைகொண்டுவந்து ஈஸ்வரனுக் கபிஷேகஞ்செய் பவர்களும், இவனெம்மை அவசியகந்தரிசிக்கப் பெறுவார்களேல்

நலன்பயப்பார்க ளென்றருளிப் பாண்டியனுக்குப் பலவரங்களைக் கட்டளையிட்டுத் திருமாதுடன் அந்தர்த்தானமாயினர். அவர்தான் கந்தமாதனத்தின்கண்ணவே சேதுமாதவரென விளங்கத் தக்கவராவார் பிறகு புண்ணியநிதியாகிய பாண்டியன், தன்னகரஞ் செல்லுதின்றி அங்கேயே வைகி முடிவிற் பிரியாத பத்தினியுடன் நற்பதமடைந்தனன்.

சேதுயாத்திரை மகுத்துவம்.

சேது தனுக்கோடியென்னுந் தீர்த்தத்தையுடைய சேதுவில் யாத்திரைசெய்ய இச்சிக்கிறவர் இயன்றமட்டுந்தானதருமங்களைச் சற்பாத்திரர்களுக்குவழங்கி விபூதி உருத்திராக்க மாலிகாபரணங்களணிந்து, அங்குலியிற் பவித்திரகுட்டு "சேதுயாத்திரைபண்ணிவரக்கடவாம்" என்று சங்கற்பஞ்செய்து ஏகமனதாய்ப் பஞ்சாச்சரத்தையேனும் அஷ்டாச்சரத்தையேனும் ஷடாச்சரத்தையேனும் உச்சரித்தபடியே பக்திசிரத்தையுடன் கிரகத்தைவிட்டிழிந்து, கையில் ஆயுதங்களில்லாமல் க்ஷத்திரம்பாதுகைகளை யுபயோகப்படுத்தாமல் தாம்பூலந்தரியாமல் எண்ணெயிட்டுக்கொள்ளாமல் ஸ்திரீயின்பத்தைக் கருதாமல் ஏககாலபோஜனமே செய்துகொண்டு வீண்வார்த்தைகளை விரும்பாமல் வழங்காமல் மார்க்கங்களில் எவ்விதத்தும் நித்யகருமானுஷ்டானங்களைத் தவறவிடாமல் அறங்களைச்சாத்தி யம்போலுதவிச்சென்று, சேதுமூலத்தின்கண் வந்து வருணனைப்பிரார்த்தித்து. சமுத்திரராஜனைப்பூஜித்து, திருமாலைவணங்கி அனுமதிபெற்று ஸ்ரீராமலட்சுமண சீதாசமேதராய் விளங்கப்பட்டவரையும் பெரியோர்களையுஞ் சிந்தித்துவணங்கிபரமசிவனையும் பத்மநாபனையும் ஹிருதயத்திலே தியானித்துவழிபட்டு அம்மூலத்தில் ஸ்நானம்பண்ணியெழுந்து மீண்டும் ஸ்நானஞ்செய்து சூரியநமஸ்காரம்பண்ணி மறுபடியுமுழுகி நியமிஷ்டைகளை முடித்துத் தருப்பைசயனம்வந்து ஸ்ரீராமரைத் தரிசித்து; அப்பால் தேவிபட்டணம்வந்து நவபாஷாணத்தில் நவக்கிரகபூஜைசெய்து முன்மொழிந்தவகைத்து அதிலும் ஸ்நானம்பண்ணிச் செய்வனசெய்து பிதிர்தர்ப்பணமியற்றிக் கரையேறி உலர்ந்த வஸ்திரந்தரித்து ஆசமனஞ்செய்து சிரார்த்தாதிகளை நடப்பித்துஅதன்

மேல் மேற்கூறிய விதமாகவே சக்கரதீர்த்தத்திற் குடைந்து அங்ஙனம் பள்ளிகொண்ட பெருமாளைப்பரவிநடந்து, வேதாளதீர்த்தம், கபிதீர்த்தம், சீதாகுண்டம், இரணவிமோசனம் இவைகளிலாடி இலட்சுமணதீர்த்தக் கரையையெய்தி முண்டிதஞ்செய்யவேண்டியதற்செய்து அத்தடத்தின்மூழ்கி இராமதீர்த்தத்திற்படிந்து பூமிபொன்முதலியதானம் பூசுரர்க்களித்து, பாவநாசத்திற் குளித்து, பின்னர்க் கங்கை கயை யமுனை இவைகளிற்றோய்ந்து இயைந்த தானங்கள்வழங்கி சாவித்திரி சரசுவதி காயத்திரி அனுமகுண்டம் பிரமகுண்டம் நாகதீர்த்தம் அகஸ்தியதீர்த்தம் இவைகளின் முறையே மூழ்கி, அக்கினிதீர்த்தக்கரையையடைந்து குடைந்து, அங்கு சிரார்த்தாதிகளைச்செய்து, வேதாந்தமுணர்ந்த உத்தம வேதியர்கட்கு ஹிரண்யம்-கோ-பூமியாதி தானங்களையும்அவனே நல்கி இங்ஙனங்கூறியமுறையேயாயினும் தமக்கியன்றபடியே யாயினும் மூழ்கிநடந்து இராமலிங்கத்தைவணங்கி, பின்னர்ச்சேது மாதவரைத்தொழுது இராமர் இலட்சுமணர் ஜானகி இவர்களை இறைஞ்சி, தனுக்கோடிதீர்த்தம் கோடிதீர்த்தம் இரண்டுமொழிய ஏனைய தீர்த்தங்களிளெல்லாம் அங்ஙனந்தோய்ந்து, மீட்டும் இராமலிங்கத்தை வழிபட்டு. தனுக்கோடிக்கரை குறுகி, அதில் விதிப்படி மூழ்கிக்கரையேறி சிரார்த்தாதிகளை இயன்றபடியியற்றித் தானங்கள்குளித்துத் திரும்பிவந்து கோடிதீர்த்தத்திற்குளித்து அங்கண் லோபமின்றிஇயன்றமட்டும் பாற்பசு-சுவர்ணம்-நிலம்-ஆடை முதலிய தானங்களை உத்தமவேதியர்கட்கீந்து, இராமநாதசுவாமியையும் பருவதவர்த்தனியம்மையையுந் தரிசித் தஞ்சலிசெய்து மும்முறை வலம்வந்து, நாவாரவாழ்த்தி விடைபெற்று சேதுமாதவரைத் தரிசித்துத் தாழ்ந்து, செலவுவாங்கிக்கொண்டு, தங்கள் பதியெய்தி, பிராமணபோஜனம் இன்றமட்டும்நடாத்திச்சன்மார்க்கத்தி லிருப்பதே நல்ல புண்ணிய வசமாம். சேதுயாத்திரை செய்கவென்று வந்து, திரவியாபிமானத்தாற் செய்யாதுசென்றவர் மிக்க பாவிகளாவர்.

சேதுபல மகுத்துவம்.

சேது தனுக்கோடி தீர்த்த ஸ்நானமானது மாசி மதியிலும் சூரியகிரஹண சந்திரகிரஹண புண்யகாலங்களிலும், சங்க்ரமகா

தக்ஷிணாயன உத்தராயண புண்யகாலங்களிலும், பௌர்ணமியிலும், சோமவாரமும் பௌர்ணமியுங்கூடிய தினத்திலும், அமாவாசியையிலும், மாசிமாதத்து உதயகாலத்திலும் நல்லபலனைமிகுதியுங்கொடுக்கும். மாசிமாதத்தில் ரு-ரு-௧௦-௧ரு-௨௦-௨ரு-ரு௭-தினங்களிலும் தொடர்ச்சியாய் உதயகாலத்தில் முழுகுவதினாலும் ஒன்றற்கொன்று விசேஷித்தபலனைக் கொடுக்கும். இன்னமும் அர்த்தோதயம்மஹோதயம் என்கிறமஹாபுண்யகாலங்களிற்செய்யப்படும் சேதுதனுக்கோடிஸ்நானப்பலனைக் கணக்கிட்டுச்சொலற்கரிதாயிருக்கும்.அர்த்தோதயமென்பது சகலநக்ஷத்திரங்களிலுஞ் சிரேஷ்டமென்கிற திருவோணமும், சகலதிதிகளிலுமுத்தமமென்கிற அமாவாசையும், சகல யோகங்களிலுஞ் நன்மையென்கிறவிதிபாதமும், சகல வாரங்களிலும் பிரதமமென்கிறஆதித்தவாரமும் மகர ரவியில் ஒன்றுச் சேருங் காலமாம். இஃது அன்று தினஞ் சூரியன் அர்த்தோதயத்துக்கே சொல்லப்பட்டது. மேற்குறித்த நக்ஷத்திராதிமூன்றுஞ் சோமவாரத்தில் வருவதுமஹோதயமாம். இந்தமகாபுண்ணியகாலங்களில்:எவ்விடத்திலேயாவதுஇராமதனுக்கோடிதீர்த்தத்தை நினைத்து ஸ்நானஞ்செய்யினும், அந்தப் புண்ணியம் லபிக்குமென்பது சாமானியசம்மதமாம். மற்றும் க்ஷேத்திரங்களிலுள்ள சமுத்திர ஸ்நானம்எப்பொழுதுஞ்செய்யலாமென்று விதியேற்பட்டிருப்பினும், அங்ஙனம் புத்திரசந்தானம் வேண்டினவர்கள் மங்களவாரம் மந்தவாரம் இரண்டினும் ஸ்நானம் பண்ணற் கிடங்கொடுக்கவில்லை, அன்றி,கருப்பிணி, கருப்பதீக்ஷையுடையவன், சூதகமுடையவள், பிதிர்கரும நிறைவேற்றுதவன் இவர்களுக்கும் அப்படியே இடங்கொடாததாயிருக்கிறது. தனுக்கோடியாகிய சமுத்திரஸ்நானமோ, எவ்வருக்குமிடங்கொடுத்துத் திதி வார நக்ஷத்திர முதலிய காலங்கள் தேவையின்றி எக்காலு முழுகற் கொவ்வியிருக்கின்றது.ஒருவன் அதில் ஸ்நானஞ்செய்யும் போது, மற்றொருவனையு நினைத்து அவனுக்காக ஸ்நானம்பண்ணுவானேல், அதற்குள்ளபலன் உண்டாகுமென்றுந்தீர்க்கப்பட்டதாயிருக்கிறது. ஆனால் இறந்தாரைக் குறித்துமட்டும் அப்படி ஸ்நானம் பண்ணல் கூடாது. பண்ணவேண்டியதேல். தருப்பையினாலேனும், சுவர்ணத்தினாலேனும் இறந்தவரைப் நிருமித்துப் பெரியோர்களாற் பிராணவிதி மந்திரத்தைச் சொல்லும்படிசெய்வித்து முழ்க விட்டுவிடாலாம்.

சேதுமகுத்துவம் முழுவதுங்கேழ்க்கவேணுமானல் அனேக கோடி கல்பகாலஞ் சென்றாலும் சொல்லமுடியாது. அப்படிக்கி ருக்க இந்த சூதரால் சொல்லுகின்றதெல்லாம் உண்மையாய்சத்தி யமாயிருக்கின்றது. சகல வேதாந்தங்களுஞ் சகல சாஸ்திர புரா ணங்களும் இதுவேயல்லாமல் மற்றொன்றும் மேலாகமாட்டாது மோட்சானந்தாதி போகமும் இந்தச் சேதுஸ்தல புராணத்தி அடக்கமாயிருக்கிற தென்று வேதவியாசர் வரப்பிரசாதங்கொ ளேயிட்டு மகாரிஷிகளை நைமிசாரண்ணியத்துக்கு அனுப்பிவிட் சூதமகாரிஷியுடனே கைலாசத்துக்கு யெழுந்தருளினார்கள்.

கவி.


ஆர்த்ததிறைக் கடலாடை யங்கனில மெங்கனுஞ் சென்றல விலாத, கீர்த்திதரு மெனின்னவற்றின் கிடைப்பரிதா மென்று சீதை கேழ்வன் போற்றும், மெயிர்த்தபுனல் மதிவேணிஇராமே சன் புராணத்தை யெழுதுமன்பர், தீர்த்தலரும் பவந்துடைத்துச் சாயுச்சிய பதவிகளும் பெருவர்திண்ணந்தானே.

இந்த மான்மியமிருக்கு மில்லிடமே சேதுவெனில் யாங் கண், மந்தனெழுதர்க்கிரக பீடைவியாதி கால்கை கமருளவே தான், முந்துபயஞ்சோரர் பயந்தீர்ந்து நான்குமொளியுந் தீர்த் தங், கந்தமாதனயன் மாலிராம நாயகனுளுங்கலந்து வாழ்வார்.

இக்கதையைப் படித்தோர்கள் புகழ்ந்தோர்கள் யெவரும் போற்றத், திக்கெங்கும் புகழ்கீர்த்திபடைத்திடுவர் மென்மேலுஞ் செல்வமோங்கும், மக்களையும் பெற்றுமிக வாழ்ந்திருந்து சேது விடமகிமையாலே, யெக்குலமும்பவித்திரமாய்நித்தியமங்களமாக யிருப்பார் முற்றே.

இராமேச்சுரமான்மியமென்னும்
சேது மகுத்துவம்.

முற்றிற்று.



உ

சிவமயம்.

புத்தக விளம்பரம்.

ஸ்ரீசேதுஸ்தல புராணம்.	1	8	0
ஸ்ரீ சேது மகுத்துவம்	0	6	0
ஸ்ரீ பர்வதவர்த்தனி பிள்ளைத்தமிழ்	0	4	0
ஸ்ரீ ராமநாதர் ஸ்ரீ பர்வதவர்த்தினி ஸ்ரீசுப்பிர மணிய சுவாமிபேரில் ஸ்ரீ மாதுவையரும் ஷையார் சம்சாரம் தங்கம்மாளும்பாடிய நவரச அலங்கார கீர்த்தனை.	0	5	0
ஸ்ரீ ராமநாதசுவாமி பதிகம்	0	1	0
ஸ்ரீராமேஸ்வரம் திருப்பணி அலங்காரம்	0	0	6
ஷை வழிநடைச்சிந்து	0	0	6
கலியுகத்தின்மகுத்துவமாகிய காலக்கியாணம்	0	1	0
மதுரை மீனாட்சியம்மன்பேரில் நளங்கு, ஊஞ்சல், லாலி, கப்பல்பத்தியம், சோபானை தாலாட்டு, கதவுதிறப்பு, மங்கள முதலான அதவைத நலுங்குபாட்டுகள்	0	2	0

ஜீவகாருண்யத்தை பற்றி தானடைந்த சுவானுபூதியைக்காட்டும் சிறந்த யோகீஸ்பராகிய சதாநந்த யோகிகளால் சமஸ்கிருதத்தில் சொல்லியபடி தமிழில் யெல்லோரும் யோகாப்பியாசமடைந்து சாகாதிருக்கச் செய்ததும் மிகா அற்புதமாகியும் மகா உத்தமமான நூலாகிய சிவராஜயோக தீபிகை விலை அணா 8.

இப்புத்தகங்களும் வேறு புத்தகங்களும் தேவையானவர்கள் வி-பி-மூலமாகவும் நேரிலும் கீழ்கண்டவரிடம் பெற்றுக்கொள்ளலாம். வி-பி-சார்சு பிரத்தியேகம்.

இங்ஙனம்,
தங்களன்பன்,
நாகலிங்கம் பிள்ளை,
புக்ஷாப், இராமேஸ்வரம்.

ஷை நா. செல்லையா பிள்ளை,
புக்ஷாப், இராமேஸ்வரம்.